ஷீ'ஆ சிந்தனைப் பிரிவு

- ஓர் அறிமுகம்

அல்லாமா செய்யத் முஹம்மத் ஹுஸைன் தபதபாயி

بسم الله الرحمن الرحيم

ஷீ'ஆ சிந்தனைப் பிரிவு

- ஓர் அறிமுகம்

அல்லாமா செய்யத் முஹம்மத் ஹுஸைன் தபதபாயி

Title	:	**Shi'a Sinthanaip Pirivu - Oar Arimugam** (Tamil Translation of Shi'a in Islam)
Author	:	Allama Seyyed Mohammed Hossein Thabathaba'i
Published by	:	Al-Mizan Publication Bureau, Colombo
Published in	:	1996
Price	:	Rs. 150.00

Printed by : Crescent Publications (Pvt) Ltd.
90, Justice Akbar Mawatha,
Colombo 2.

பொருளடக்கம்

வெளியீட்டாளர் முகவுரை	1
ஆங்கில மொழி பெயர்ப்பின் நூன் முகம்	6
ஷீஆயிஸத்தின் அடிப்படை மூலகங்கள்	14
ஷீஆ ஆய்வுகளின் இன்றைய நிலை	23
இந்நூல்	24
நூலாசிரியர்	29
குறிப்புகள்	36
முன்னுரை – அல்லாமா தபாதபாயி	39
குறிப்புகள் [முன்னுரை]	43

பகுதி 1

ஷீஆயிஸத்தின் வரலாற்றுப் பின்னணி

அத்தியாயம் I	45
ஷீஆயிஸத்தின் தோற்றமும் வளர்ச்சியும்	45
ஸுன்னத் ஜமாஅத் பெரும் பான்மையிலிருந்து ஷீஆ சிறுபான்மை பிரிந்ததற்கான காரணம்	47
தலைமையும் மத அதிகாரமும் பற்றிய இரு பிரச்சினைகள்	49
வாக்களிப்பு மூலம் கலீபாவைத் தெரிவு செய்யும் அரசியல் முறைமையும் ஷீஆ கண்ணோட்டத்தின் மீது அதன் உடன் பாடின்மையும்	51
அமீருல் முஃமினீன் அலீ [அலை]யின் கிலாபத் முடிவும் அவரின் ஆட்சி முறையும்.	60
அலீயின் கிலாபத்திலிருந்து ஷீஆ பெற்ற நன்மை	66

கிலாபத் முஆவியாவின் கைக்கு மாறுதலும் பரம்பரை
முடியாட்சியாக அது மாற்றமடைதலும் 68
ஷீஆயிஸத்தின் இருண்ட நாட்கள் 71
உமையா ஆட்சி நிறுவப்படல் 73
2ம்/8ம் நூற்றாண்டில் ஷீஆயிஸம் 76
3ம்/9ம் நூற்றாண்டில் ஷீஆயிஸம் 78
4ம்/10ம் நூற்றாண்டில் ஷீஆயிஸம் 79
5ம்/11ம் நூற்றாண்டிலிருந்து 9ம்/15ம் நூற்றாண்டு
வரை ஷீஆயிஸம் 80
10ம்/16ம் நூற்றாண்டிலும் 11ம்/17ம்
நூற்றாண்டிலும் ஷீஆயிஸம் 81
12ம்/18ம் நூற்றாண்டிலிருந்து 14ம்/20ம்
நூற்றாண்டு வரை ஷீஆயிஸம் 82
குறிப்புகள் [அத்தியாயம் I] 83

அத்தியாயம் II

ஷீஆயிஸத்தின் உட் பிரிவுகள் 92
ஸைதி பிரிவும் அதன் கிளைகளும் 94
இஸ்மாயிலிய்யாவும் அதன் கிளைகளும் 96
பாத்தினிகள் 98
நிஸாரிகள், முஸ்தாலிகள், துரூஸ்கள், முக்கன்னாஹ்கள்
நிஸாரிகள் 100
முஸ்தாலிகள் 102
துரூஸ்கள் 102
முக்கன்னாஹ் 102
பன்னிரு இமாம் - ஷீஆயிஸத்துக்கும்
இஸ்மாயிலீயிஸத்துக்கும் ஸைதிஸத்துக்குமிடையே
உள்ள வித்தியாசங்கள் 103
பன்னிரு இமாம் - ஷீஆவின் வரலாற்றுச் சுருக்கம் 104
குறிப்புகள் [அத்தியாயம் II] 107

பகுதி 2

ஷீஆ மத சிந்தனை

அத்தியாயம் III

மத சிந்தனையின் மூன்று முறைகள்	109
முதலாவது முறை – மதத்தின் சம்பிரதாய அம்சம்	
மதத்தின் சம்பிரதாய அம்சத்தின் வெவ்வேறு சாயல்கள்	114
நபித் தோழர்களது பாரம்பரியங்கள்	116
திருமறையும் பாரம்பரியமும்	117
குர்ஆனின் புறவய அம்சமும் அகவய அம்சமும்	119
குர்ஆன் விரிவுரையின் அடிப்படைகள்	123
ஹதீஸ்	127
ஹதீஸின் ஆதார பூர்வத்தை நிறுவும் ஷீஆ முறை	128
ஹதீஸைப் பின்பற்றுவதில் ஷஆயிஸ முறை	129
இஸ்லாத்தில் கற்றலும் கற்பித்தலும்	129
ஷீஆயிஸமும் கறிவிக்கப்பட்ட அறிவுத் துறைகளும்	131
இரண்டாவது முறை	
அறிவு பூர்வ விசாரணையின் வழி ஷீஆயிஸத்தில்	
தத்துவ மதவியல் சிந்தனை	133
கலாமிலும் தத்துவத்திலும் ஷீஆக்களின் முதல் முயற்சி	135
தத்துவத்துக்கும் அறிவியல் விஞ்ஞானத்துக்கும்	
ஷீஆக்களின் பங்களிப்பு	137
சிறந்த ஷீஆ அறிஞர்கள்	138
மூன்றாவது முறை:	
அறிவு பூர்வ உள்ளுணர்வு அல்லது ஆன்மீக திரை	
நீக்கம்; மனிதனும் மறையியல் ஞான விளக்கமும்	142
இஸ்லாத்தில் மறை ஞானத்தின் [சூஃபிஸம்] தோற்றம்	143
மறை ஞானத்துக்காகக் குர்ஆனும் ஸுன்னாவும் வழங்கும்	
வழிகாட்டல்	147
குறிப்புகள் [அத்தியாயம் III]	150

பகுதி 3

ஷீஆக்களின் கண்ணோட்டத்தில் இஸ்லாமிய நம்பிக்கைகள்

அத்தியாயம் IV

இறைவனைப் பற்றிய அறிவு

அமைப்பும் யதார்த்தமும் பற்றிய கண்ணோட்டத்தில்
உலகைக் காணல்; இறைவனின் அவசியம் 155

பிரபஞ்சத்துக்கும் மனிதனுக்கும் தொடர்பு பற்றி
மற்றொரு கண்ணோட்டம் 156

இறைவனின் சுயமும் பண்புகளும் 163

தெய்வீகப் பண்புகளின் அர்த்தம் 164

பண்புகள் சம்பந்தமாய் மேலும் விளக்கங்கள் 165

செயற் பண்புகள் 166

விதியும் தெய்வச் செயலும் 168

மனிதனும் சுய சித்தமும் 170

குறிப்புகள் [அத்தியாயம் IV] 173

அத்தியாயம் V

தீர்க்கதரிசி பற்றிய அறிவு 175

இலக்கு நோக்கி: பொதுவான வழிகாட்டல் 175

விஷேட வழிகாட்டல் 177

பகுத்தறிவும் சட்டமும் 180

வெளிப்பாடு என அழைக்கப்படும் மர்மமான
ஞானமும் பிரக்ஞையும் 181

தீர்க்கதரிசிகள் – தீர்க்க தரிசனம் தவறிழைக்க முடியாமை 182

தீர்க்கதரிசிகளும் அருளப்பட்ட மதமும் 183

நபிமார்களும் இறையறிவிப்பின் அத்தாட்சியும் நபித்துவமும் 186

தீர்க்கதரிசிகளின் எண்ணிக்கை 189

இறைவனின் சட்டத்தைக் கொணர்ந்த தீர்க்கதரிசிகள் 189

முஹம்மதின் நபித்துவம் 190
நபிபெருமானும் திருமறையும் 195
குறிப்புகள் [அத்தியாயம் V] 200

அத்தியாயம் VI

இறுதித் தீர்ப்பு:

மனிதன் ஆன்மாவும் உடலும் அமைந்தவன் 204
ரூஹு பற்றி மற்றொரு கண்ணோட்டத்தில் கருத்தாடல் 206
இஸ்லாமிய கண்ணோட்டத்தில் மரணம் 207
இடைப்பட்ட நிலை [பர்ஸக்] 208
இறுதித் தீர்ப்பு நாள் மீண்டும் உயிருடன் எழுப்பப்படல் 210
இன்னொரு விளக்கம் 213
படைப்பின் இடையறாமையும் தொடர்ச்சியும் 218
குறிப்புகள் [அத்தியாயம் VI] 220

அத்தியாயம் VII

இமாம் பற்றிய அறிவு [இமாமியல்] 221
இமாமத்தும் அதன் தொடர்ச்சியும் 222
முந்திய பகுதியை உறுதிப்படுத்தல் 234
இமாமத்தும் தெய்வீக அறிவுத் துறைகளை
விளக்குவதில் அதன் பங்கும் 237
நபிக்கும் இமாமுக்கு முள்ள வித்தியாசம் 239
மத த்தின் ஆத்மீகப் பரிமாணத்தில் இமாமத்தின் பங்கு 241
இஸ்லாத்தின் இமாம்களும் தலைவர்களும் 245
பன்னிரு இமாம்களின் வாழ்க்கைச் சுருக்கம் 247
முதலாம் இமாம் அலீ இப்னு அபீ தாலிப் 247
இரண்டாம் இமாம், ஹஸன் இப்னு அலீ 252
மூன்றாம் இமாம், ஹுஸைன் இப்னு அலீ 254
நான்காம் இமாம், அலீ இப்னு ஹுஸைன் 262
ஐந்தாம் இமாம், முஹம்மத் இப்னு அலீ 264

ஆறாவது இமாம், ஜாபர் இப்னு முஹம்மத் 265
ஏழாவது இமாம், மூஸா இப்னு ஜாபர் 267
எட்டாவது இமாம், அலீ இப்னு மூஸா 267
ஒன்பதாவது இமாம், முஹம்மத் இப்ன அலீ 270
பத்தாவது இமாம், அலீ இப்னு முஹம்மத் 271
பதினோராவது இமாம், ஹஸன் இப்னு அலீ 272
பன்னிரண்டாவது இமாம், மஹ்தி 274
மஹ்தியின் தோற்றம் பற்றி ஷீஆயிஸத்தின் ஆன்மீகச் செய்தி 281
குறிப்புகள் [அத்தியாயம் VII] 284
அனுபந்தம் 1
தக்கிய்யாஹ் அல்லது மாய்மாலம் [அல்லாமா தபதபாயி] 293
அனுபந்தம் 2
முத்ஆஹ் அல்லது தற்காலிகத் திருமணம்
எழுதியோர் அல்லாமா தபதபாயி, ஸையத் ஹுஸைன் நஸ்ர் 297
அனுபந்தம் 3
ஷீஆக்களின் மதக்கிரியைகள். ஸையத் ஹுஸைன் நஸ்ர் 302
அனுபந்தம் 4
ஜின்களைப் பற்றிய ஒரு குறிப்பு ஸையத் ஹுஸைன் நஸ்ர் 306
நூல் விபரப் பட்டியல்
அல்லாமா தபாத்தபாயியின் ஆக்கங்கள் 310
பொது நூல் விபரப் பட்டியல் 313

வெளியீட்டாளர் முகவுரை

இது அல்லாமா தபாத்தபாயின் தலை சிறந்த நூல்களிலொன்று அல்லாஹ்வின் அருளால் இதன் அபிமானிகட்கு தமிழ் பதிப்பாக வழங்கப்படுகின்றது. அல்லாஹ்வின் அழைப்பையேற்று, நம்மெல்லோரையும் ஆழ்ந்த சோகத்திலாழ்த்திவிட்டு அல்லாமா எம்மைப் பிரிந்துவிட்ட சமயத்தில் இத் தமிழ் பதிப்பு வெளியாகின்றது.

அல்லாமா தபாத்தபாய் ஒரு மாமனிதர். செவ்விய பண்பினர். திருக்குர்ஆன் வியாக்கியான கர்த்தா. இஸ்லாமிய உலகின் சுடர் தாரகைகளில் ஒருவர். அவரின் ஆழ்ந்த ஆத்மஞானக் கருத்துகளும், அவர்தம் படைப்புகளும் இஸ்லாமியப் போதனைகளின் விளக்கமளிப்பதில் பெருஞ் செல்வாக்கு செலுத்திற்று. பொதுவாக இஸ்லாமிய உலகிலும், குறிப்பாக முஸ்லிம் அறிஞர்கள் மத்தியிலும் அவர் 'அல்லாமா' (அறிஞர்) என்றும், ஃபில்ஸஃப் (தத்துவஞானி) என்றும், முஃபஸ்ஸிர் (குர்ஆன் வியாக்கியான கர்த்தா) என்றும், ஆயத்துல்லாஹ் (அல்லாஹ்வின் அடையாளம்) என்றும் பிரசித்தம் பெற்றார். ஆனால் இவ்வடைமொழிகளாலும் கௌரவங்களாலும் அல்லாமாவின் மாபெரும் ஆளுமையின் சகல பரிமாணங்களையும் பிரதிபலிக்க முடியாது என்பது நாளுக்கு

நாள் தெளிவாகிவரும் உண்மை. அவரது நடத்தை, அவரது வாழ்க்கைப் போக்கு, அவரது அறிவார்ந்த படைப்புகள், அவரது ஆழிய கருத்துகள், அவரது நேர்மைத்திறன், அவரது நிகரற்ற அறிவு முதலியவை பற்றியெல்லாம் ஒருவர் ஆய முற்பட்டால், எல்லாம் வல்ல இறைவனதும்,அவனது ரசூலினதும், அஹ்லுல் பைத்தினதும் உண்மையான தொடர்பின்றேல் இத்தகைய அருளும் அனுக்கிரகமும் எவருக்கும் கிடைத்திராது என்ற முடிவுக்கே அவர் நிச்சயம் வருவார். ''அவன் (அல்லாஹ்) தான் விரும்பியவர்களுக்கு ஞானத்தை வழங்குகிறான்; ஞானம் அருளப் பெற்றவர்கள் அதிக நற்பேறடைந்தோராவர். . .'' (குர்ஆன், 2:269).

அல்லாமாவின் மறைவு குறித்து ஆயதுல்லாஹ் குமெய்னி தமது இரங்கலுரையில் பின்வருமாறு கூறினார்:'' ஹவ்ஸா - இ-இல்மியா (கும்மில்உள்ள இஸ்லாமிய ஆய்வு நிலையம்) வுக்கும் முஸ்லிம்களுக்கும் மர்ஹூம் அல்லாமா தபாத்தபாயின் மறைவினால் உண்டான பேரிழப்புக்காக நான் கவலையடைகிறேன். ஈரானிய மக்களாகிய உங்களுக்கும், ஹவ்ஸா - இ -இல்மிய்யா (The Center of Islamic Studies Qum) வுக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் அவரை (இறுதித் தீர்ப்பு நாளில்) அவனது நல்லடியார்கள், இஸ்லாமியத் தொண்டர்கள் கூட்டத்துடன் எழுப்புவானாக, அவரது குடும்பததினர்க்கும், அவரது மாணவர்களுக்கும் அல்லாஹ் பொறுமையை அருள்வானாக.''

அல்லாமா தபாத்தபாயி அநேக மாணவர்களைப் பயிற்றுவித்துள்ளார். அவர்கள் ஒவ்வொருவரும் இஸ்லாமிய சிந்தனையாளரும், ஆற்றல் மிகு எழுத்தாளருமாவர். அல்லாமாவின் ஆளுமை பற்றி ஆழ்ந்த உட்பார்வையைப் பெறுவதற்காக அவரது மாணவர்கள் சிலரின் அபிப்பிராயங்களை இங்கு தருகிறோம்.

அல்-உஸ்தாத் அஷ்ஷஹீத் முர்த்தஸா முத்தஹ்ஹரி கூறுகிறார்: ''அல்லாமா தபாத்தபாயி என்ற மனிதரின் உயர்ந்த சிந்தனைகள் அடுத்த நூற்றாண்டுகாலம் கற்கவும், பகுப்பாய்வு

செய்யவும், கணிக்கவும் தக்கனவாகும். உண்மையில் அவர் இஸ்லாத்துக்கு மாபெரும் சேவையாற்றியோரில் ஒருவராவார். பயபக்தியினதும் ஆத்மீகத்தினதும் சின்னமாய் உண்மையில் விளங்கியவர் அவர். ஆத்ம பரிசுத்தத்திலும், பயபக்தியிலும் கொடுமுடிகளை ஏறியடைந்தவர் அவர். அவரது அருட்கொடையான ஆத்மீகத்தன்மையில் பல வருடங்கள் நான் பயன்பெற்றேன். தொடர்ந்தும் பயன் பெற்றுவருகிறேன். அவரது அல்-குர்ஆன் அல்-மீஸான் விளக்கவுரை மாபெரும் திருக்குர்ஆன் விளக்கவுரைகளிலொன்றாகும். அவரது புகழ் ஈரானில் மட்டுமன்றி இஸ்லாமிய உலகிலும், ஐரோப்பா அமெரிக்கா போன்ற இஸ்லாமல்லாத உலகிலும் பரவியுள்ளது. இஸ்லாமியப் போதனைகளில் நன்கு பரிச்சயங்கொண்ட கீழைத் தேயவியலாளர்கள் அவரை மாபெரும் சிந்தனையாளராகக் கருதியதோடு அவரைப் போய்ச் சந்திப்பதும் வழக்கமாயிருந்தது.''

இஸ்லாமிய அறிஞரும் அநேக நூல்களின் ஆசிரியருமான ஷைத் இப்ராஹீம் அமீனி கூறுகிறார்: ''அல்லாமா தபாத்தபாய் பண்பாடுமிக்க, சீரிய குணம் வாய்ந்த, பற்றற்ற தன்மைகொண்ட, நேர்மை படைத்த, சாந்தமனவுறுதி படைத்த இனிய மனிதராவார். சுமார் முப்பது வருடங்களாக அவரது விரிவுரைகளைக் கேட்கும் பேறு எனக்குக் கிடைத்தது. வியாழன் இரவுகளில் அவர் நடத்திய பிரத்தியேக வகுப்புகளிலும் நான் கலந்து கொண்டேன். அவ்வளவு காலமும் அவர் ஒருபோதும் கோபடைந்ததாகவோ, புண்படும் வார்த்தைகள் பேசியதாகவோ எனக்கு நினைவில்லை; அவர் எப்பொழுதும் அமைதியாகவே கற்பித்தார். மிகவும் பணிவான மாணவர்களுடன் கூட நீண்ட கால நண்பர் போன்று மிகவும் கருணையுடன் நடந்து கொண்டார். எல்லாவித தேள்விகளுக்கும், ஆட்சேபனைகளுக்கும் அவர் செவிமடுத்தார். ஒரு போதும் அவர் தன்னைப் புகழ்ந்ததை நான் கண்டறியேன். தம்மிடமிருந்த அறிவைப் பிறருக்கு வழங்குவதிலோ, மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதிலோ அவர் கஞ்சத்தனம் காட்டியதில்லை. எவரது கேள்விக்கும் அவர் பதிலளியாமல் விட்டதில்லை. வாசிப்பதிலும், சிந்தனை செய்வதிலும் அவர் குறிப்பிட்டவொரு

விடயத்தில் மனதை ஈடுபடுத்தி அதில் நீண்ட நேரம் லயித்திருக்கும் திறன் பெற்றிருந்தார். இம்மாபெரும் ஆசிரியர் மகத்தான ஒழுக்கப்பண்புகளுடன் திகழ்ந்தார். இவர் பிறர் கூறியவற்றுக்கு எப்போதும் செவிமடுத்தார். அவரிடம் உண்மை எடுத்துரைக்கப்பட்டபோது அவர் அதனை ஏற்றுக் கொள்பவராயிருந்தார். சித்தாந்த மோதல்களை அவர் தவிர்த்துக் கொண்டார்.''

கும்மைச் சேர்ந்த பிரபல ஆசிரியரான உஸ்தாத் முஹம்மத் தாக்கி மிஸ்பாஹ் கூறுகிறார்: '' அமைதி கண்ணியம், சுயமரியாதை, அல்லாவில் தவக்கல், நேர்மை, எளிமை, இரக்கம் மற்றும் உன்னத பண்புகள் வாய்க்கப் பெற்றவராய் அல்லாமா தபாத்தபாயி திகழ்ந்தார். அவரது அமரத்தன்மை வாய்ந்த தோற்றத்தில் ஆன்மீகப் பரிபூரணத்தையும், இருதயத் துலக்கத்தையும் விண்ணுலகத் தொடர்பையும் ஒருவர் தரிசிக்க முடியும். அவரது விரிவுரை வகுப்புகளில் முப்பதாண்டுகளாகக் கலந்துகொள்ளும் பாக்கியம் பெற்ற நான், அவர் நான் என்ற வார்த்தையை உச்சரித்ததை ஒருபோதும் கேட்டதில்லை. என்ற போதிலும். ''எனக்குகத் தெரியாது'' என அவர் அடிக்கடி சொல்லக் கேட்டதுண்டு. அவரது அடக்கம் இத்தகையது. அஹ்லுல் பைத் மீது இவர் வைத்திருந்த அதீத அன்பும், நம்பிக்கையும் இவ்வான்மீக மனிதரின் மகத்தான பண்புகளிலொன்றாகும். அறிவுத்துறையில் இரவு பகலாய் அவர் மேற்கொண்ட அயராத உழைப்பு திருநபியவர்களுக்கும் அன்னார் குடும்பத்தினருக்கும் அஞ்சலி செலுத்துவதிலிந்து, அவர்களிடம் உதவிகேட்பதிலிருந்து அவரைத் தடுக்கவில்லை; தமது வெற்றிகளுக்கெல்லாம் இம்மாபெரும் புனிதர்களுக்கே தாம் மிகுந்த கட்டுப்பாடுடையவரென அவர் கருதினார்.

''பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டாமல், எளியவாழ்வு வாழ்ந்த அல்லாமா தபாத்தபாயி முன்தெரிந்திராத ஒரு பெரும்மதிப்புப் பொருளாய் இருந்தபோதும், சத்திய வேட்கை கொண்டோரும், தலை சிறந்த சான்றோர்களும் அவர்பால் வெகுசீக்கிரமே ஈர்க்கப்பட்டனர். அவர்களுக்கு அவர் போதிக்கவும், பயிற்சிகளிக்கவும் தொடங்கி கலாசார தார்மீக

இயக்கமொன்றுக்கான ஆரம்ப வித்துக்களை அவர் விதைத்தார். பொருள் வகை வசதிகள் வாய்க்கப்பெறாதவராக இருந்த போதிலும், இறை நம்பிக்கையோடும் ஆன்ம பலத்தோடும் சகல பிரச்சினைகளையும் அவர் எதிர்கொண்டார். சுயநலப்பற்றேதுமின்றி, பொருள்வகை லாபங்களுக்கும் அந்தஸ்துக்கும் ஆசைப்படாமல், தான் தேர்ந்தெடுத்த பாதையில் வீறு நடை போட்டார் அவர், இவ்வழியில் அவர் தன்னந் தனியே செல்லவில்லை. தமது மாணவர்கள், சீடர்கள் அனைவரையும் இறுதி இலட்சியம் நோக்கி வழிநடத்திச் சென்றார் அவர். முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் இம்மாமனிதரால் தொடங்கி வைக்கப்பட்ட இயக்கத்தை இன்று நாம் கண்கூடாய்க் காண்கிறோம். இம்மாமனிதர் நட்ட விருட்சத்தின் கனிகளை இன்று புசித்துப் பயனடைகின்றோம். இவ்விருட்சம் அல்லாஹ்வின் அருளால் வருங்காலத்தில் இன்னும் பல நற்கனிகளை வழங்கும்.''

வெளியீட்டாளர்கள்.

ஆங்கில மொழி பெயர்ப்பின் நூன் முகம்

ஸய்யத் ஹுஸைன் நஸ்ர்

ஷீஆயிஸம் பற்றிய ஆய்வு

கீழைத்தேயவியல், மதஒப்பியல் ஆகிய துறைகளில் மேலைத்தேயக் கல்விமான்கள் கடந்த நூற்றாண்டுகளில் அதிகளவு தகவல்களையும், அநேக உண்மை விவகாரங்களையும் திரட்டியுள்ளபோதும், உலகின் பல்வேறு மதங்கள் பற்றிய அறிவியல் வரலாற்றுண்மைகளின் மட்டத்தில் கூட பல இடைவெளிகள் காணப்படுகின்றன. மேலும் இத்துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் சமீப காலம்வரை மெய்ப்பொருளியல் யூகமும், ஒத்துணர்வுள்ள உட்பார்வையும் காணப்படவில்லை. மேலைய ஆய்வில், குறிப்பாக ஷீஆயிஸம் விவகாரத்தில் மிகவும் அவதானத்துக்குரிய குறைபாடொன்று நேர்ந்துள்ளது. சமீபகாலம் வரை ஷீஆயிஸம் அதிக கவனத்தைப் பெறவில்லை. அது பற்றிய கருத்தாடல்கள் இடம்பெற்றபோது அதற்கு மத அரசியல் 'பிரிவு' என்ற இரண்டாந்தர அந்தஸ்தே வழங்கப்பட்டது. அது வேதவிசுவாசமின்மையாக அல்லது வேதப்புரட்டாகக் கூடக் கருதப்பட்டது. இவ்வாறு, அதன் முக்கியத்துவம் கடந்த காலத்திலேனும் நிகழ்காலத்திலேனும் நியாயமான, புறவயமான ஆய்வொன்றினால் நியாயப்படுத்தப்பட்டிருக்கக்கூடியதைவிடவும் குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளது.

ஷீஆயிஸம் பற்றி நம்பகமான ஆங்கிலமொழி நூல்கள் இல்லாக்குறையை இவ்வாக்கம் ஓரளவு நிவர்த்தி செய்யக்கூடியதாய் உள்ளது. ஆதாரபூர்வமான ஷீஆ பிரதிநிதிகளது எழுத்துக்களையும், குர்ஆனுடன் ஷீஆயிஸத்தின் அடித்தளமாக அமையும் சில மரபு மூலங்களையும் மொழிபெயர்த்தளிப்பதன் மூலம் சரியாக அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ள நூற்களின் தொகுதியில் இது முதலாவதாகும். ஷீஆயிஸத்தை அதன் கோட்பாட்டு ரீதியிலும் வரலாற்று அம்சத்திலும் அது எப்பொழுதும் இருந்து வந்துள்ளதுபோன்று ஒரு வாழும் தத்துவமாகக் காட்டுவதுதான் இத்தொகுதியின் நோக்கம். இதன் மூலம் நாம் இஸ்லாமிய மரபின் மற்றொரு பரிமாணத்தை வெளிக்கொணர்வதோடு இறைவனால் மட்டுமே சித்தப்படுத்த முடிந்திருக்கக் கூடிய இஸ்லாமிய வெளிப்பாட்டின் செழுமையை அதன் வரலாற்று விரிவோடு நாம் அறிமுகப்படுத்தவும் முடியும்.

இப்பணி ஐரோப்பிய மொழியொன்றில் குறிப்பாகச் சிரமமே. ஏனெனில் ஷீஆயிஸத்தை அதன் தோற்றத்துக்கான காரணிகளுடன் முஸ்லிமல்லாத வாசகர்க்கு விளக்க முற்படும் போது ஸுன்னியிஸத்துடன் அதற்கு நேரடியாகவே கருத்துமோதல் நேர்கின்றது. இதனால் எழும் விவகாரங்கள் சரியான பாதுகாப்பின்றி, சம்பந்தப்பட்ட வாசகர்களைக் கவனத்தில் கொள்ளாமல் முன்வைக்கப்பட்டால் அது இஸ்லாத்தையே ஒத்துணர்வுடன் புரிந்து கொள்வதற்குக் குந்தகமாய் அமைந்துவிடக்கூடும். வேதவெளிப்பாட்டிலுள்ள நம்பிக்கை இயல்பாகவே பலமிக்கதாயுள்ள பாரம்பரிய இஸ்லாமிய சூழலில் பதின்மூன்று நூற்றாண்டுகளாய் நிகழ்ந்துவந்து, விசேடமாக பத்தாம்/ பதினாறாம் நூற்றாண்டு தொட்டு அழுத்தம்பெற்ற ஸுன்னி-ஷீஆ கருத்துமோதலின் விளைவாய் இவ்விரு முகாம்களைச் சேர்ந்தோர் எவரேனும் இஸ்லாத்தை நிராகரித்துவிடவில்லை. அதேபோன்று வெவ்வேறு கிறிஸ்தவ திருச்சபைகள், பிரிவுகளிடையே ஏற்பட்ட கடுமையான மத்திய காலப் பிணக்குகள் எவரேனும் கிறிஸ்தவத்தை நிராகரிக்கும்படி செய்யவில்லை. ஏனெனில், அச்சகாப்தம் மதநம்பிக்கையைக் குணவிசேடமாய்க் கொண்டிருந்தது. ஆனால், உதாரணமாக, மத்தியகாலத்தில் கத்தோலிக்க வைதீகத் திருச்சபைகளை அல்லது ஆரம்பத் திருச்சபையின் கிளைகளை, வெவ்வேறாக்கிய சகல விவகாரங்களையும், ஒரு பிரிவைச் சேர்ந்த மத அறிஞர் மற்றொரு பிரிவினர்க்கெதிராக எழுதியவைகளையும்

முழுமையாக விவரிப்பதன் மூலம் கிறிஸ்தவம் ஒரு முஸ்லிமுக்கு அறிமுகப்படுத்தப்படுமாயின், அவரது புரிந்துணர்வில் அது உண்டுபண்ணும் தாக்கம் எதிர்மறையானதாகவே இருக்கும். இவ்வளவு பிரிவுகளுக்கும் கருத்துமோதல்களுக்கும் மத்தியில் கிறிஸ்தவம் தாக்குப்பிடித்து நின்றது எப்படியென ஒரு முஸ்லிம் வாஸ்தவத்தில் சிந்திக்கத் தலைப்படலாம். இஸ்லாத்தினுள் காணப்படும் பிரிவுகள் கிறிஸ்தவத்தினுள் காணப்படும் பிரிவுகளை விடவும் மிகவும் சொற்பமேயெனினும், ஷீஆ-ஸுன்னி கருத்துமோதலையெதிர்கொள்ளும் மேலைவாசகனும் இதுபோன்ற பாதிப்புக்கு ஆட்படலாம் என எவரும் எதிர்பார்ப்பர். முழு விவாதத்தையும் அதன் தொடக்கத்திலிருந்தே சூழ்ந்து கொண்டு, இரு பிரிவுகளைப் பின்பற்றுவோருக்கும் தனது பாரம்பரியத் தொடர்பையும், பாதுகாப்பையும், ஆதரவையும் வழங்கிவரும் இஸ்லாத்துக்கு வெளியில் நிற்கும் இத்தகைய வாசகனால் இயல்பாக இஸ்லாத்தின் மீதே நம்பிக்கையின்றி இச்சர்ச்சைகள் அவதானிக்கப்படும்.

ஷீஆயிஸம், இச்சிரமத்தையும் மீறி அதன் சொந்தக் கண்ணோட்டத்திலும், பொதுவான இஸ்லாமியக் கருவினுள்ளும் அத்தியாவசியமாய் ஆராயப்படவும் முன்வைக்கப்படவும் வேண்டும். ஷீஆயிஸம் இஸ்லாத்தினுள் ஒரு முக்கியமான வரலாற்றுண்மையாய் வாழ்கின்றபடியால் எல்லாவற்றுக்கும் முதலில் இப்பணி அத்தியாவசியமாகின்றது. எனவே புறவயமான மதவுண்மையாய் அது ஆராயப்படல் வேண்டும். இரண்டாவதாக, இஸ்லாத்தின் மீதும் அதன் ஐக்கியத்தின் மீதும். சில மேலை எழுத்தாளர்கள் விடுத்துள்ள தாக்குதல் (இவர்கள் ஸுன்னி -ஷீஆ பிரிவினையைச் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் ஏனைய மதங்கள் ஒவ்வொன்றினுள்ளும் காணப்படும் இதுபோன்ற பிரிவினைகளை மனதிற்கொள்ள அடிக்கடி மறந்து விடுகின்றனர்) முழுமையான இஸ்லாமிய அர்த்தத்தில் ஷீஆயிஸம் பற்றிய விரிவான ஆதாரபூர்வமான ஆய்வை அவசியமாக்குகின்றது. இத்தகையதொரு தேவை இல்லாவிடின் ஸுன்னியிஸத்தையும் ஷீஆயிஸத்தையும் பிரித்து வைத்த சகல கருத்துமோதல்களையும் இஸ்லாத்துக்கு வெளியேயுள்ள உலகுக்குக் காட்டவேண்டி நேர்ந்திராது. உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் இஸ்லாத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் லௌகிகமயமாக்கப்பட்ட உலகில் இஸ்லாத்தின் ஐக்கியத்தைப் பாதுகாக்கவேண்டி ஸுன்னி-ஷீஆ உலமாக்கள்

தம்மிடையே மோதலைத் தவிர்த்துக்கொள்வதற்காகப் பிரயத்தனங்கள் மேற்கொண்டுவரும் இவ்வேளையில் விசேடமாக ஆராயப்படவும், முன்வைக்கப்படவும் வேண்டும் எனும் கூற்று உண்மையே.

இவ்வுலமாக் குழுவின் நிலை ஒருவகையில் இன்று மேற்கில் கருத்தாடல் புரியப்படும் மதங்களிடையே ஒருமைப்பாடு, குறிப்பிட்டவொரு மதத்தினுள் ஒருமைப்பாடு முதலியவற்றை ஞாபகமூட்டுகின்றது. மக்கள் அடிக்கடி இவ்வொருமைப்பாட்டு இயக்கங்களில் ஒரு பொதுக் குறிப்பைத் தேடுகின்றனர். இது சில சந்தர்ப்பங்களில் வெறும் மானிட அளவுப்பரிமாண சமத்துவத்துக்காகவேண்டி இறைவனால் விதிக்கப்பட்ட குணவித்தியாசங்களைப் பலியிட்டு விடுகின்றது. இத்தகைய விவகாரங்களில் 'மத ஒருமைப்பாடு' என சொல்லப்படுவது, மறுமலர்ச்சிக் காலத்தின்போது மேற்கைக் கவ்விப் பிடித்து அதன் விளைவாய் கிறிஸ்தவத்தினுள் மதப்பிளவுகளையுண்டுபண்ணிய லௌகீகவாதத்தினதும், மானிடவாதத்தினதும் மூடுதிரையிட்ட சொரூபமேயன்றி வேறில்லை. இத்தகைய மத ஒருமைப்பாட்டின் மறைவான நோக்கம் மதத்தன்மையை விட அதிக லௌகீகத்தன்மைவாய்ந்ததாகும். இது அண்டைவீட்டானின் நேசத்துக்காகவேண்டி இறைநேசத்தை விட்டுவிடும், உண்மையில் இறை நேசத்தையும் புலன் கடந்த ஞானத்தையும் மீறி அண்டைவீட்டானின் நேசத்தை வலியுறுத்தும் தர்மத்துடன் இணக்கம் காண்கின்றது. இவ்வகை 'தர்மத்தை' வலியுறுத்தும் இம்மனப்பாங்கு புலன் கடந்த ஞானப்பரிமாணத்தின் இழப்புக்கும் அனைத்தையும் வெறும் லௌகீக மட்டத்துக்குத் தாழ்த்திவிடுவதற்கும் மற்றொரு உதாரணமாய் விளங்குகின்றது. இது நவீனத்துவத்தினது லௌகீகக் குணநலனின் மற்றொரு வெளிப்பாடாகும். இவ்விவகாரத்தில் இது தர்மம்பற்றிய உன்னத கிறிஸ்தவ நெறியினுள் ஊடுருவி வெற்றியடைந்துள்ளதோடு அதனை ஆன்மீக முக்கியத்துவமெதுவும் இல்லாமற் செய்துவிட்டது.

இவ்வகை மத ஒருமைப்பாட்டு மனப்பாங்கின்படி, மதங்களிடையிலான வித்தியாசங்களை அல்லது குறிப்பிட்டவொரு மதத்தினுள் வெவ்வேறு வைதீகப்பிரிவுகளிடையேயுள்ள வித்தியாசங்களை அங்கீகரித்துப் பேசுவது மனிதனுக்குத் துரோகமிழைப்பதாகவும், விமோசனத்துக்கும் சமாதானத்துக்குமான அவனது நம்பிக்கைக்குத் துரோகமிழைப்பதாகவும் முடியும்.

உண்மையான விமோசனமும் சமாதானமும் தெய்வீக கற்பிதமான வேற்றுமைகளோடு ஒற்றுமை காண்பதிலேயே தங்கியுள்ளது. மதங்களிடையே வேறுபாடும் ஒவ்வொரு மத்தினுள் காணப்படும் பிரிவுகளிடையே வேறுபாடும் தெய்வீகக் கருணையின் அடையாளங்களாகும் என்பதையும், வெவ்வேறு ஆன்மீக உளவியல் பண்புகள் கொண்ட மனிதர்களுக்கு அது விண்ணகத்தின் தூதை எத்திவைக்க முயல்கின்றது என்பதையும் இவ்வகையான லௌகீக, மானிடவாத மதஒருமைப்பாடு காணத்தவறிவிடுகிறது. உண்மையான மத ஒருமைப்பாடு ஐக்கியத்தை, அத்தியாவசியமான யாவையும் கடந்த ஐக்கியத்தை ஆழமாகத் தேடுவதாகும். அது குணவித்தியாசங்கள் யாவையும் அழித்துவிடக்கூடிய நிர்விகற்பத்தைத் தேடுவதன்று. அது உன்னதமான கோட்பாடுகளை மட்டுமன்றி ஒவ்வொரு மரபினதும் துல்லியமான விவரங்களைக் கூட ஏற்றுப் போற்றும் அதேவேளை இப்புறவாய வித்தியாசங்களினூடு ஒளிரும் ஐக்கியத்தையும் தரிசிக்கும் ஒவ்வொரு மதத்தினுள்ளும் உண்மையான மதஒருமைப்பாடு சம்பந்தப்பட்ட மதப்பிரிவினதும் மரபுப்பின்னணியின் ஒவ்வொரு முகத்தோற்றத்துக்கும் விசுவாசமுள்ளதாயிருக்கும். ஒருவர் தமது மதத்தின் அத்தியாவசிய அம்சங்களை அழித்துவிடத்தயாராய், அதே இழப்புக்கு ஆளாகுமாறு கேட்டுக்கொள்ளப்படும் மற்றொரு மனிதக் குழுவினரோடு பொதுத்தன்மையைக் காண்பதற்காய் சித்தப்படுவதைவிடவும் வரலாறு முழுவதும் பல்வேறு மத அதிகார வட்டாரங்களால் செய்யப்பட்டு வந்துள்ளதுபோன்று பிறமத எதிர்ப்பில் ஈடுபடல் குறைந்தளவு தீமை பயப்பதாகும். ஐக்கிய நாடுகளின் நிறுவனம் அரசியல் சமாதானத்தை உத்தரவாதம் செய்வதைவிடவும் அதிகமாக மதங்களின் ஐக்கிய நிறுவனமொன்று மதச்சுதந்திரத்தை உத்தரவாதஞ் செய்துவிட முடியாது.

பூமியின்மீது வெவ்வேறு ‘மனித இனங்கள்’ மனிதக் கூட்டங்கள் இருந்து வந்துள்ளபடியால் மனித இனத்தின் நீண்ட வரலாற்றில் வெவ்வேறு மதங்கள் அத்தியாவசியப்பட்டுள்ளன. இறை தூதைப் பெற்ற வெவ்வேறானோர் உள்ளனர். தெய்வீக வார்த்தைக்கு (DIVINE WORD) ஒன்றுக்கு மேற்பட்ட எதிரொலிகள் காணப்படுகின்றன. ‘மனித இனங்கள்’ அல்லது சமூகங்கள் ஒவ்வொன்றுக்கும் இறைவன் ‘நான்’ எனக் கூறியுள்ளான். எனவே பல்வேறு மதங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மதத்தினுள்ளும், விசேடமாகப் பல்வேறு இனக்குழுக்களுக்காக விதிக்கப்பட்ட மதங்களினுள்ளும்

வித்தியாசமான உளவியல், இனக்குழுக்களை ஒரே இயல்பான காட்சியினுள் ஒருங்கிணைப்பதை உத்திரவாதஞ் செய்வதற்கு இறைதூதின் மரபுபற்றி வித்தியாசமான விளக்கங்கள் தேவைப்பட்டு வந்துள்ன. மஹாயானப் பிரிவு இல்லாமல் தூர கிழக்கு மக்கள் எப்படி பௌத்தத்தைத் தழுவியிருப்பார்கள் என்பதை அல்லது ஷீஆயிஸம் இல்லாமல் சில கீழைத்தேய மக்கள் எப்படி முஸ்லிம்களாக மாறியிருப்பர் என்பதை கற்பனை செய்தல் கடினமே. சம்பந்தப்பட்ட மதப்பாரம்பரியத்தினுள் இத்தகைய பிரிவுகள் இருப்பது அதன் உள்-ஐக்கியத்துடனும் புலன் கடந்த நிலையுடனும் முரண்படுவதில்லை. பல்வேறு கலாசார, இனப் பின்னணியைக் கொண்ட உலகில் ஆன்மீக ஐக்கியத்தை வலியுறுத்தும் வழியாகவே இது இருந்து வந்துள்ளது.

மதத்தின் புறத்தோற்றம் அதன் புறவடிவங்களில் தங்கியுள்ளபடியால் ஒவ்வொரு மதமும் அதனதன் விளக்கத்தையே ஒரே விளக்கமாகக் கொள்ள நேரிடுகின்றது. எந்தவொரு மதத்தினதும் குறிப்பிட்டவொரு பிரிவு அந்த மதத்தின் தனித்தவொரு அம்சத்தை மட்டும் தேர்ந்தெடுத்து அதனோடு ஒட்டிக்கொண்டு ஏனைய எல்லா அம்சங்களையும் மறுத்துவிடுவதும், மறுதலித்துவிடுவதும் இதனால்தான். முழுமையான சத்தியத்தின் தனித்த ஒரே அம்சத்துடன் பிணைக்கப்பட்டிருக்கும் உள்ளார்ந்த எல்லைக்கோட்டைப் புரிந்துகொள்வது மத அனுபவத்தின் அந்தரங்க மட்டத்தில் மட்டுமே சாத்தியப்படலாம். குறிப்பிட்டவொரு மதத்தின் அல்லது மதப்பிரிவின் நியமங்களுக்கும், புறத்தோற்றங்களுக்கும் அப்பாலுள்ள, எனினும் அவற்றின் உள்ளுறையும் நிலைகடந்த ஐக்கியத்தைக் கெடுத்துவிடாமல் ஒவ்வொரு மதத்துணிபையும் உரிய இடத்தில் வைப்பது அந்தரங்க மட்டத்தில் மட்டுமே முடியும்.

வாஸ்தவத்தில் ஷீஆக்கள் இஸ்லாத்தை விளங்கிக்கொண்டபடி, இவ்வெளிச்சத்திலேயே இஸ்லாத்தில் ஷீஆயிஸம் மையப்படுத்தப்பட்டவோர் இஸ்லாமியப் பரிமாணத்தின் உறுதிப்பாடாகக் கற்றாயப்படல் வேண்டும். ஷீஆயிஸம் இஸ்லாத்தின் ஐக்கியத்தை அழித்தொழித்த ஓர் இயக்கமன்று. மாறாக அது குர்ஆனியத்தூதின் வரலாற்று ரீதியான விரிவாக்கத்தினதும் வளர்ச்சியினதும் செழுமைக்கு மேலும் வளம் சேர்த்தவோர் இயக்கமாகும். அது தனது பிரத்தியேகத்தன்மையையும் மீறி, அதன் வடிவங்களில் இஸ்லாத்தின் சகல அம்சங்களையும் ஒன்றிணைக்கும் ஐக்கியத்தை உள்ளடக்கியுள்ளது. ஸுன்னியிஸம்,

ஸூபியிஸம் மற்றும் உண்மையான இஸ்லாமியத்தன்மை வாய்ந்த ஏனையவையாவும் போன்று ஷீஆயிஸம் புனிதத்திருமறையிலும், இறையறிவிப்பின் ஆரம்பத்தொழிற்பாடுகளிலும் விதை கொண்டிருந்ததோடு அது இஸ்லாமிய மத விசுவாசத்தின் முழுமையைச் சார்ந்ததாகவுமுள்ளது.[2]

மேலும், மேற்குறித்த அர்த்தத்தில் இன்று ஸுன்னி, ஷீஆ மதவட்டாரங்கள் இரண்டினாலும் பரிந்துரைக்கப்படுவதுபோன்று உண்மையான மத ஒருமைப்பாட்டு உணர்வுடன் அருகிணையும் முயற்சியில், ஷீஆயிஸமும் ஸுன்னியிஸமும் இப்போது இருந்து வருவதுபோன்று, எப்போதும் இருந்து வந்ததுபோன்று தொடர்ந்தும் இருப்பதனைவிட்டுவிடக் கூடாது. எனவே, ஷீஆயிஸம் இஸ்லாமிய வரலாற்றின் சில சம்பவங்களைப் பற்றிய ஸுன்னி விளக்கங்களுடன் முரண்படும் சம்பவங்களில் கூட அதன் முழுமையுடன் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். எப்டியிருப்பினும் அச்சம்பவங்கள் பல்வேறு விளக்கங்களுக்கு இடமளிக்கக்கூடியவையே. ஸுன்னியிஸமும் ஷீஆயிஸமும் இஸ்லாத்துக்காக அல்லது பொதுவாகச் சொன்னால் மதவிழுமியங்களுக்காக வாதிடுவதற்கு முன் அதனதன் சொந்தப் பாரம்பரிய அடித்தளங்களுக்கு விசுவாசமாயிருத்தல் வேண்டும். ஆனால் ஒரு பொது உடன்பாட்டுக்காகவேண்டி அவை அவற்றின் நேர்மையைப் பலிகொடுப்பின் நூற்றாண்டுகளுக்கு மேலாக அவற்றின் ஜீவசக்தியை உத்திரவாதம் செய்து இரு பிரிவுகளையுமே பாதுகாத்து வந்துள்ள பாரம்பரிய அடித்தளங்களையே அழித்தொழிப்பதில்தான் அதுபோய் முடியும். ஸூபிஸம் அல்லது மறையியல்ஞானம் (இர்ஃபான்) தான் இவ்விரு முகத்தோற்றங்களையும் தழுவிய எனினும் அவற்றின் புறவித்தியாசங்களைக் கடந்த ஐக்கியத்தை அடைய முடியும். இஸ்லாம் பற்றியும் இஸ்லாமிய வரலாறு பற்றியும் இவை ஒவ்வொன்றும் வழங்கியுள்ள விளக்கத்தின் நியாயபூர்வத்தையும் அர்த்தத்தையும் உண்மையான முக்கியத்துவத்தையும் இஸ்லாமிய மறைஞானம் மட்டுமே காண முடியும்.

மேலே குறிப்பிடப்பட்ட விதிகள் மறக்கப்பட்டால், ஏலவே கூறியதுபோன்று ஷீஆயிஸம் அதன் தர்க்க அம்சம் உற்பட முற்றுமுழுமையாக அறிமுகப்படுத்தப்படுகையில் முஸ்லிமல்லாத வாசகன் மீது அது விபரீத விளைவையுண்டுபண்ணக்கூடும். உதுமானிய-ஸஃபாவித் காலகட்டங்களில் இத்தர்க்கம் உச்சநிலை

கண்டபடியால் ஸுன்னி உலகுக்கு இது ஒன்றும் புதிதல்ல.

இஸ்லாத்தை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு இஸ்லாம் ஏனைய மதங்களைப் போன்று பல்வேறு வகையான விளக்கங்களுக்கான சாத்தியப்பாட்டை ஆரம்பத்திலிருந்தே தன்னகத்தே கொண்டிருந்தது என்பது எப்போதும் நினைவிலிருத்தப்படல் வேண்டும்.

1. புனித வரலாற்றின் சில முக்கியமான அம்சங்களையிட்டு ஷீஆயிஸமும் ஸுன்னியிஸமும் ஒன்றையொன்று எதிர்த்தபோதிலும் குர்ஆனை அல்லாஹ்வின் வார்த்தையாக ஏற்றுக் கொள்வதிலும் நம்பிக்கை பற்றிய அடிப்படைக் கொள்கைகளிலும் அவற்றிடையே ஐக்கியம் காணப்படுகின்றன.

2. இஸ்லாத்தின் குறிப்பிட்டவொரு பரிமாணத்தையும், நபியின் இயல்பு பற்றிய ஓர் அம்சத்தையும் ஷீஆயிஸம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பின்னர் இமாம்கள் வரிசையாலும் நபி குடும்பத்தினராலும் தொடரும் இவ்வம்சம் ஸுன்னியிஸத்தில் அடங்கியுள்ள மற்றொரு அம்சத்தை ஒதுக்குவதாகவும், இறுதியில் எதிர்ப்பதாகவும் உள்ளது.

3. இறுதியாக, ஷீஆ - ஸுன்னி கருத்துமோதல் புறந்தள்ளப்பட்டு இவ்விரு பிரிவுகள் ஒவ்வொன்றினதும் நிலைப்பாடு அந்தரங்க ஞானத்தின் தளத்தில் மட்டுமே விளக்கப்படலாம். அது பேதங்களைக் கடந்து நிற்கும் அதேவேளை அகவயமாக அவற்றை ஐக்கியப்படுத்தும்.

ஷீஆயிஸத்தின் அடிப்படை மூலகங்கள்

இஸ்லாம் அனைத்து அம்சங்களையும் தழுவிய மார்க்கம் என்பதனால் இஸ்லாத்தில் எந்தவொரு அரசியல், சமூக இயக்கமும் மதத்திலிருந்து ஒருபோதும் பிரிக்கப்படவில்லையாகையால், மேலை நாட்டு நூல்கள் நிறுவ முயல்வது போன்று ஷீஆ பிரிவு இஸ்லாத்தின் திரு நபிக்குப் பின் அரசியல் வாரிசுரிமை பற்றிய பிரச்சினையால் மட்டுமே உருவானதன்று. (இதுவொரு முக்கியமான பிரச்சினையென்பது உண்மையாயிருந்த போதிலும்)அரசியல் வாரிசுரிமை சம்பந்தமான பிரச்சினை ஷீஆக்களைத் தனித்தவொரு குழுவினராக படிகத்தெளிவாய்க் காட்டியது எனலாம். பிற்காலங்களில் ஏற்பட்ட அரசியல் அடக்குமுறை, விசேடமாக இமாம் ஹுஸைனின் உயிர்த்தியாகம், இஸ்லாமிய உலகில் ஷீஆக்கள் தங்களையொரு தனிச்சமூகமாகக் காணும் போக்குக்கு அழுத்தம் கொடுத்தது. எனினும் ஷீஆயிஸம் தோன்றுவதற்குப் பிரதான காரணி, இதற்கான சாத்தியப்பாடு இஸ்லாமிய வெளிப்பாட்டினுள்ளே காணப்பட்டபடியால் அது உருவாகவேண்டியிருந்தது என்ற உண்மையில் தங்கியுள்ளது. தொடக்கத்திலிருந்தே வெளிப்படையான வியாக்கியானமும் அந்தரங்க வியாக்கியானமும் இருந்து வந்தபடியால் இதிலிருந்தே ஸுன்னி உலகில் ஷரீஅத் சார்ந்த மத்ஹபுகளும், சூபித்துவமும் உருவாகியது. இவ்வம்சங்களையிணைத்து முழுமையாகக் காணும் ஓர் அத்தியாவசியமான வியாக்கியானம் தேவைப்பட்டது. இச்சாத்தியப்பாடு ஷீஆயிஸத்தில் நனவாகியது. பாரம்பரிய அதிகாரத்தின் இவ்விரு அம்சங்களும் இமாம் என்ற மனிதரில் ஐக்கியமுற்று மதவாழ்வென்பது அவரில், சோகத்தாலும் உயிர்த்தியாகத்தாலும், குறிக்கப்பட்டது. தூய ஆத்மீக ஞானமாய் அகத்தோடு மட்டும் அடங்கியிராமல் அன்பாகப் பொங்கிப் பிரவகித்து புறவுலகிலும் பரவக்ககூடிய மதத்தின்இறையியல் பரிமாணத்தை ஊடுருவிப் பாயக்கூடிய அந்தரங்க மெய்ஞானத்தின்

சாத்தியப்பாடு உண்டாகவேண்டியிருந்தது. அத்தகையவொரு சாத்தியப்பாடே ஷீஆயிஸம் ஆகும். எனவே, எழுந்த பிரச்சினை யார் திரு நபியின் வாரிசாக வரவேண்டும் என்பதை விடவும் அத்தகையவொருவரின் தகுதிகளும், பணியும் யாவை என்பதே.

ஷீஆயிஸத்தின் தனிச்சிறப்பான நிறுவனம் இமாமத் என்பதாகும். இமாமத் என்பது வலாயத்துடன், அல்லது திருமறையினதும், ஷரீஅத்தினதும் உள்ளீடாக மர்மங்களை வியாக்கியானஞ் செய்யும் அந்தரங்கமான பணியுடன் பிரிக்கமுடியாதபடி பிணைந்ததாகும்.(3) ஷீஆ கண்ணோட்டப் படி இஸ்லாத்தின் திருநபியினது வாரிசாகவிருப்பவர் சமூகத்தின் மீது நீதியாக ஆட்சி செலுத்துபவராக மட்டுமன்றி இறைசட்டத்தையும் அதன் அந்தரங்க அர்த்தத்தையும் வியாக்கியானஞ் செய்யக்கூடியவராயும் இருத்தல் வேண்டும். எனவே அவர் தவறிழைக்கவோ, பாவம் புரியவோ முடியாதவராய் (மஃசூம்) திருநபி மூலம் தெய்வ கட்டளையால் தெரிந்தெடுக்கப்பட்டவராய் இருத்தல் வேண்டும். சூபித்துவத்தில் காணப்படும் புனிதத்துவம் (விலாயாஹ்) பற்றிய கருத்துடன் நெருங்கிய தொடர்புள்ள விலாயத் பற்றிய அடிப்படைக் கருத்தைச் சுற்றியே ஷீஆயிஸத்தின் முழு உணர்வும் சுழல்கின்றது. அதேவேளை ஷரீஅத் மட்டத்தில் விலாயத் சில குறிப்புணர்த்தல்களைக் கொண்டுள்ளது. இமாம் என்பவர் அல்லது விலாயத் பணியைப் புரிபவர், மதச்சமூகத்துக்கு மதத்தை விளக்குபவராகவும் அச்சமூகத்தின் வழிகாட்டியாகவும் நியாயபூர்வமான ஆட்சியாளராகவுமிருப்பார்.

அலீ (அலை) கலீபாவாக வந்ததும் முழு சமூகத்தினதும் விசுவாசப்பிரமாணம் (பைஅத்) கோரியமை, குலபாயே ராசிதீன்கள்-நேர்வழிகாட்டப்பட்ட கலீபாக்கள் மூவர் விவகாரத்தில் பின்பற்றப்பட்டதுபோல் பெரும்பான்மையினரின் குரலால் கலீபாவைத் தெரிவு செய்யும் முறையை அங்கீகரித்தமை, தமக்கு முந்திய கலீபாக்களை இஸ்லாமிய சமூகத்தின் ஆட்சியாளர்கள் என்ற முறையிலும், நிர்வாகிகள் என்ற முறையிலும் ஏற்றுக் கொண்டமையைக் குறிப்பால் உணர்த்துகிறது. எனினும் ஷீஆ கண்ணோட்டப்படி திருமறையினதும், ஷரீஅத்தினதும் உள்ளீடான அந்தரங்கங்களை விளக்கக்கூடிய இமாம்களாக அவர்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ''வாரிசு'' பற்றிய ஷீஆ அர்த்தத்தில் தாமே திருநபியின் நியாயபூர்வமான வாரிசு (வஸி) என அவர் தீர்க்கமாகக் கூறியமை இதனைக் குறிக்கும். ஒருபுறம் இறைவனின் சட்டத்தை

நிலைநாட்டும் பணியும் மறுபுறம் அதன் உள்ளீடாக அந்தரங்கங்களை வெளிப்படுத்தும், வியாக்கியானஞ் செய்யும் கடப்பாடும் உண்டு என்பது அங்கீகரிக்கப்பட்டிருப்பின் ஸுன்னி - ஷீஆ தகராறுக்குத் தீர்வுகாணப்பட்டிருக்கலாம். அலீயின் வாழ்வும் செயல்களும், கலீபா ஷரீஅத் சட்டப்படி ஆட்சிபுரிபவர் என்ற சுன்னத் ஜமாஅத் அர்த்தத்தில் அவர் தமக்கு முந்திய கலீபாக்களை ஏற்றுக்கொண்டு ஆனால் நபிகளாருக்குப்பின் விலாயத்தைத் தம்முடன் வைத்துக் கொண்டார் என்பதைக் காட்டுகின்றன. எனவேதான், சுன்னத் ஜமாஅத் படி அவரையொரு கலீபாவாகவும், ஷீஆவின்படி அவரையோர் இமாமாகவும் பூரணமாக ஏற்றுக்கொள்ள முடிகிறது.

ஷீஆயிஸம் குறிப்பிடும் மதத்தின் ஐந்து அடிப்படைகள் வருமாறு:

- ★ தவ்ஹீத் அல்லது ஏகத்துவத்தில் நம்பிக்கை
- ★ நுபுவ்வத் அல்லது நபித்துவம்
- ★ மஆத் அல்லது மரித்தபின் உயிர்கள் மீண்டும் எழுப்பப்படல்
- ★ இமாமாஹ் அல்லது இமாமத், நபியின் வாரிசுகளென இமாம்கள் மீது நம்பிக்கை வைத்தல்
- ★ அத்ல் அல்லது இறை நீதி.

மூன்று அடிப்படைக் கொள்கைகளில் அதாவது ஏகத்துவம், நபித்துவம், மரித்தவர்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்படல் என்பவற்றில் ஷீஆவுக்கும், சுன்னத் ஜமாஅத்துக்கும் உடன்பாடுண்டு. மற்றைய இரண்டு அடிப்படைகளைப் பொருத்தமட்டிலேயே அவைகளிடையே வேறுபாடு காணப்படுகின்றது. இமாமத் சம்பந்தப்பட்ட விடயத்தில், இமாமின் ஆத்மீகப் பணியை, வலியுறுத்துவதுதான் ஷீஆக்களை சுன்னத் ஜமாஅத்தாரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. நீதியைப் பொருத்தவரை இறைவனுடைய இயல்பின் சகஜபாவமாக இப்பண்புக்கு வழங்கப்படும் அழுத்தம் ஷீஆயிஸத்துக்கேயுரிய சிறப்பம்சமாகும். விசேடமாக அஷ் அரிய்யாவில் அடங்கியுள்ளதுபோல் சுன்னத் ஜமாஅத்தினது இறையியலின் புறவய உருவாக்கத்தில் இறைவனின் சித்தத்துக்கு அழுத்தம் கொடுக்கப்டுகின்றது எனலாம். இறைவன் சித்தப்படுத்துவது எதுவுமே நீதியானது, அது இறைவனால் சித்தப்படுத்தப்படுவதே திட்டமாக இதன் காரணம், அறிவு (அக்ல்)

ஒரு வகையில் இந்த சித்தத்துக்கும், இவ்வகை இறையியலின் குணாம்சமான ''தன்னிச்சை''க்கும் கீழ்ப்படிவதாகும்[4] என்ற போதிலும் ஷீஆயிஸத்தில் நீதியெனும் பண்பு இறைவனது சகஜ இயல்பாகக் கருதப்படுகின்றது. இறைவன் அநீதமாக நடந்துகொள்ளமாட்டான். ஏனெனில் நீதியென்பது அவனது இயல்பான பண்பாகும். இறைவனைப் பொறுத்தவரை அவன் அநீதமாக நடப்பது அவனது இயல்புக்கு மீறிய செயலாகும். இது சாத்தியமற்றது. ஒரு செயல் நீதமானதா, அநீதமானதா என்பதைத் தீர்மானிக்க அறிவினால் முடியும். இறையியலில் அறிவு (அக்ல்)க்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. ஸுன்னி கலாம் அல்லது இறையியல் குறைந்தபட்சம் சிரேஷ்டமான அஷ் அரிய்யா சிந்தனைப்படி, சித்தத்துக்கு (இராதத்) அதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. ''அறிவியல் துறைகளுக்கும் (அல்-உலூம் அல்-அக்லியாஹ்) ஷீஆ இறையியலுக்கும் அதிக உடன்பாடு காணப்படுவதன் இரகசியம் தெய்வ நீதியை இக்கண்ணோட்டத்தில் பார்ப்பதிலேயே தங்கியுள்ளது[5].

திருமறை வெளிப்பாட்டின் மூலச்செய்தி இஸ்லாமியச் சமூகத்தையடைந்த வழிவகை பற்றிய கருத்திலும், அதனால் புனித இஸ்லாமிய வரலாற்றின் சில அம்சங்கள் குறித்தும் ஷீஆயிஸம் சுன்னத் ஜமாஅத்திலிருந்து வேறுபடுகின்றது. இஸ்லாத்தின் மூலாதாரமான குர்ஆன் பற்றியும், நபி பற்றியும் அபிப்பிராயபேதம் கிடையாது. நபியின் மறைவுக்குப் பின் தொடங்கும் காலகட்டத்திலிருந்தே இவ்வேற்றுமை ஆரம்பமாகின்றது. திருநபியின் ஆளுமை இருபரிமாணங்களைக் கொண்டிருந்ததெனலாம். இவ்விரு பரிமாணங்களும் சுன்னத் ஜமாஅத்தாகவும் ஷீஆவாகவும் உருவாகின. பின்னர் இவை ஒவ்வொன்றும் அதனதன் கண்ணோட்டத்தின் படி திருநபியின் வாழ்வையும் ஆளுமையையும் பிரதிபலித்தன. இவ்வாறு மற்றைய பரிமாணத்தைப் புறத்தொதுக்கல், மறத்தல், தப்பர்த்தம் பண்ணுதல் முதலியவை அதன் சொந்தக் கண்ணோட்டத்திலிருந்து தவிர்க்கப்பட்டது.

ஸுன்னியுலகில் நபியின் வாரிசுகளால் பிரதிபலிக்கப்பட்ட நபியினது ஆளுமை 'உலர்ந்த' (இரசவாத அர்த்தத்தில்), 'கடுமை'யான அம்சம் ஷீஆயிஸத்தால் லௌகீகத்தன்மைக்குச் சமானமாய்க் கருதப்பட்டு திருநபியின் 'கனிந்த', அன்புமயமான' பரிமாணம் நபியின் முழு ஆளுமையாகவும் நபியின் தொடர்ச்சியாய்க்

கருதப்படும் இமாம்களது இயல்பின் சாரமாகவும் வலியுறுத்தப்படுகின்றது[6].

ஆரம்ப கிலாபத்தை ஆதரித்த இஸ்லாமிய சமூகத்தின் மிகப்பெரும்பான்மையினருக்கு நபித்தோழர்கள் (ஸஹாபா) நபியின் பாரம்பரியங்களையும் அவை பிந்திய தலைமுறை யினருக்குக் கிடைக்கச் செய்யும் வழியையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். ஆரம்ப சமுதாயத்தில் நபித்தோழர்கள் சிறப்பான இடத்தை வகித்தனர். அவர்கள் மத்தியில் நான்கு கலீபாக்களும் தனிச்சிறப்புவாய்ந்த குழுவாக விளங்கினர். இரண்டாம் தலைமுறையினரான முஸ்லிம்களுக்கு நபிமொழியும் (ஹதீஸ்), நபியின் வாழ்க்கை முறையும் (சுன்னா) நபித்தோழர்கள் வழியாகவே கையளிக்கப்பட்டன என்ற போதிலும் ஷீஆயிஸம் நபித்துவத்தின் ஆத்மீக அம்சத்தை வலியுறுத்தும் விலாயத் சம்பந்தமான பிரச்சினையில் கவனஞ் செலுத்தி அலியையும் நபி குடும்பத்தினரையும் (அஹ்லுல்பைத்) இஸ்லாத்தின் செய்தி கையளிக்கப்பட்ட வழியாகக் காண்கின்றது. எனினும் நபியின் சந்ததியினர் பெரும்பான்மையாய் சுன்னத்ஜமாஅத்தினராய் இன்றுவரை இருந்து வருவது ஒரு முரணுண்மையாகும். எனவே ஷீஆவையும், சுன்னத் ஜமாஅத்தையும் சேர்ந்த ஹதீஸ் இலக்கியம் ஒரேவிதமாயிருந்தபோதிலும், அறிவிப்புத் தொடர் வரிசை அநேக சந்தர்ப்பங்களில் ஒரேவிதமாயில்லை. நபியின் ஆத்மீக அதிகாரத்தின் (ஆனால் சட்டத்தைக் கொண்டு வரும் நபித்துவப்பணிக்கல்ல) வாரிசுகள் என்ற முறையில் இமாம்களின் வாழ்வும் வாக்கும் நபியின் ஹதீஸுக்கும் சுன்னாவுக்கும் அனுபந்தமாய் அமைகின்றது. ஷீஆயிஸத்தைப் பொருத்தவரை மத ஆன்மீகக் கண்ணோட்டத்தின்படி மட்டும் இமாம்கள் என்போர் தொடர்ந்த நூற்றாண்டுகளின் காலத்தின் போது நபியினது ஆளுமையின் விஸ்தரிப்பு எனலாம்.

அலீயின் நஹ்ஜ் அல்-பலாஹாவிலும் உஸுல் அல்-காஃபியிலும் காணப்படும் இமாம்களின் அருள்மொழிகள் நபி மொழிகளின் (ஹதிஸ்) தொகுப்பின் தொடர்ச்சியாகும். ஷீஆக்களின் அநேக ஹதீஸ் தொகுப்பு நூல்களில் நபி மொழிகளோடு இமாம்களின் மொழிகளும் சேர்த்துத் தரப்படுகின்றன. திருநபியின் மூலம் உலகிற்கு அருளப்பட்ட திருக்குர்ஆனின் அருள் (பரக்காஹ்) நபித்தோழர்கள் மூலம் (பிரதானமாக அபூபக்கர், உமர், உதுமான், அலீ மற்றும் அனஸ், ஸல்மான் போன்ற சிலர் மூலம்) சுன்னத்

ஜமாஅத்தினரை வந்தடைந்தது. அவர்களின் அடுத்த தலைமுறையினருக்கு அது உலமாக்கள் மூலமாகவும் சூஃபிகள் மூலமாகவும் வந்தடைந்தது என்ற போதிலும் இந்த பரக்காஹ் ஷீஆ சமூகத்தினை குறிப்பிட்ட ஷீஆ அர்த்தத்தில் அலீ மூலமாகவும் நபி குடும்பத்தினர் மூலமாகவுமே வந்தடைந்தது.

அலீயின் மீதும் பாத்திமா நாயகி மூலமான அவரின் சந்ததியர் மீதும் ஷீஆக்கள் காட்டிய தீவிர அன்பு ஷீஆயிஸத்தின் ஏனைய நபித்தோழர்களைக்கூட அவர்கள் கவனியாமல் விடும் குறையை நிவர்த்திப்பதாய் உள்ளது. அலீயினதும் இமாம்களினதும் ஒளி, பெரும்பாலோர், மெய்ஞானிகளும் உன்னத மனிதப் பண்புகள் வாய்ந்தோருமான மற்றும் நபித்தோழர்களின் பிரசன்னத்தைக் காணவிடாமல் அவர்களைக் கண்கூசச் செய்து விட்டதெனலாம். அலீயின் மீதான இத்தீவிர அன்பு இன்றேல் நபித்தோழர்கள் மீது ஷீஆக்களின் போக்கு நினைத்துப் பார்க்கமுடியாததாயும் சமநிலையற்றதாயும் தோன்றும். மதத்தின் தெய்வீகத் தன்மைக்குப் பிரத்தியட்சவாதங்களில் ஒன்றான இஸ்லாத்தின் துரித வளர்ச்சி நபித்தோழர்களின்றி அவர்களிலும் முதன்மையாகக் கலிபாக்களின்றி நிச்சயம் சாத்தியப்பட்டிராது. நபித்தோழர்களும் ஆரம்பகால முழு சுன்னத் ஜமாஅத்தும் மதக்குடும்பத்தினுள் (அதாவது முழு இஸ்லாத்தினுள்) ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது சம்பந்தமான ஷீஆ கண்ணோட்டத்தை இவ்வுண்மை வெளிக்காட்டுகின்றது. எனவே சுன்னத் ஜமாஅத்தும் உலகில் அதன் வெற்றியும் ஷீஆயிஸத்தைப் புரிந்துகொள்வதற்கு அத்தியாவசிய சமயவாதத்துறையாகக் கருதப்படல் வேண்டும். ஷீஆயிஸத்தின் சிறுபான்மைப் பாத்திரமும் அதன் உயிர்த்தியாக உணர்வும் ஆத்மீகப் பண்புகளும் ஸுன்னிப் பெரும் பான்மையினால் விசேடமாக ஆரம்பகால நபித் தோழர்களாலும் அவர்களது பரிவாரங்களாலும் முன்பு நிறுவப்பட்ட ஒழுங்கு முறையின்படியே புரிந்துகொள்ளப்பட்டுள்ளன. வெளித்தோற்றத்திலான வேறுபாட்டையும் மீறி பொதுவான குர்ஆன் அடிப்படையுடன் சுன்னத் ஜமாஅத்தையும் ஷீஆயிஸத்தையும் உறவுப் பிணைப்பாய்ப் பந்தப்படுத்தும் உள்ளார்ந்த பிணைப்பையும் இவ்வுண்மை காட்டுகின்றது.

இஸ்லாமிய சமூகத்தின் இரு பகுதியினரிடையேயும் காணப்படும் சூபியத்தை நாம் கருத்தில்கொண்டால் சுன்னத் ஜமாஅத்திலும் ஷீஆவிலும் காணப்படும் பரக்கத் ஒரே ஆதார மூலத்தையும்

பண்பையும் கொண்டுள்ளமை புலப்படும். திருமறையிலிருந்தும் திருநபியிடமிருந்தும் வெளிப்போந்த இத்திருவருள் பரக்கத் எங்கிலும் காணப்படுகின்றது. 'முஹம்மதிய பரக்கத்'' (அல்-பரக்கத் அல்-முஹம்மதிய்யாஹ்) என இது அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது.

ஷீஆயிஸத்துக்கும் வழக்கமாக சூபியத்தின் அத்தியாவசியப் போதனையுடன் இனம் காணப்படும் இஸ்லாத்தின் பொதுவான ஆத்மஞானப் போதனைகளுக்குமிடையே மிகவும் சிக்கலான உறவுண்டு[8]. ஷீஆயிஸத்தை வெறுமனே இஸ்லாமிய ஆத்மஞானத்துடன் சமப்படுத்தக்கூடாது. ஸுன்னியுலகில் ஆத்மஞானம் என்பது பிரத்தியேகமாய் சூபியமாகத் தொழிற்படுகின்றது. ஆனால் ஷீஆ உலகிலோ ஸுன்னியுலகின் ஆத்மஞானத்துடன் சேர்ந்து முழு மத அமைப்புக்குமே வர்ணம் பாய்ச்சும் அன்பை அடிப்டையாகக் கொண்ட ஆத்மீக அம்சமொன்று காணப்படுகின்றது. இது வரைவிலக்கணப்படி எப்பொழுதும் மட்டுப்படுத்தப்பட்ட சிறிய அளவினதான தூய ஆத்மஞானத்தை (மஃரிபா) விடவும் அன்பை அல்லது (ஹிந்துமதப் பாஷையில் சொல்வதானால்) பக்தியை அடிப்டையாகக் கொண்டதாகும். ஆரம்ப ஷீஆயிஸத்தை வெறுமனே ஆத்மஞானத்துக்குச் சமானமாய்க் கருதுகின்ற சிலர் இருக்கின்றனரென்பது உண்மைதான்[9]. ஷீஆ பாரம்பரியத்தினுள்ளேயே ஷீஆ ஆத்மஞானம் (இர்பானி ஷீஆ) என்பதன் உபந்நியாசகர்களான ஸையித் ஹைதர் ஆமுலி போன்றோர் ஷீஆயிஸத்தினதும், சூபித்துவத்தினதும் சமதன்மை பற்றிப் பேசுகின்றனர். வாஸ்தவத்தில் ஆமுலியின் பிரதான படைப்பான ஜாமி அல் அஸ்ரார் (தெய்வீக ரகசியங்களின் சுருக்கம்) என்ற நூலில், சூபித்துவமும் ஷீஆயிஸமும் ஒன்று எனக் காட்டுவதனையே அவர் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளார்[10]. ஆனால் ஷீஆயிஸத்தை நாம் முழுமையாகக் கவனித்தால் ஆத்மீக அம்சத்துடன் சேர்ந்து மனித சமுதாயத்தை ஆளும் சட்டமான புறவாய அம்சமும் இருக்கின்ற உண்மை புலப்படும். அலீ மனித சமுதாயத்தின் மீது ஆட்சி செலுத்தினார். பன்னிரு இமாம் ஷீஆ கோட்பாட்டை ஸ்தாபித்த ஆறாவது இமாம் ஜாஃபர் சாதிக், பன்னிரு இமாம் கோட்பாட்டின் சட்டத்தை நிறுவினார். எனினும் மேலே குறிப்பிடப்பட்டதுபோல் விசேடமாக அன்பு என்ற வடிவத்தில் ஆத்மஞானம் என்பது எப்பொழுதும் ஷீஆயிஸத்தினுள் சிறப்பான இடத்தை வகித்துவந்துள்ளது. எனவேதான் ஷீஆ இறையியலிலும்

கோட்பாட்டிலும் அடங்கியுள்ள உருவாக்கங்கள் சரியாகச் சொல்வதாயின் கண்டிப்பான இறையியல் தன்மையை விடவும் அதிக அந்தரங்கத்தன்மை வாய்ந்தனவாகவுமுள்ளன.

ஷீஆயிஸம் அதன் சட்டத்துடனும், சூபித்துவத்திலும் ஆத்மஞானத்திலும் அடங்கும் ஆத்மிக அம்சத்துடனும் சேர்ந்து திருநபியிடமிருந்தும் இமாம்களிடமிருந்தும் முதுசமாகப் பெற்ற ஒருவகை தெய்வீக ஞானத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இத்தெய்வீகஞானம் ஹிக்மா அல்லது ஸோபியா என்பதன் அடிப்படையாக முஸ்லிம் உலகில் விஸ்தீரண வளர்ச்சிகண்டு கிரேக்க, அலெக்சாந்திரிய, இந்திய, பாரசீக அறிவுஜீவ அருஞ்செல்வங்களைஅதன் அமைப்பினுள் இணைத்துக் கொண்டது.

கிரேக்க நூல்களை மொழிபெயர்த்ததன் விளைவாய் இஸ்லாமிய தத்துவஞானம் உண்டானதென்றும், சில நூற்றாண்டுகளின் பின் கிரேக்க தத்துவம் முஸ்லிம் உலகில் மறைந்தொழிந்து லத்தீன் மேற்கில் புகலிடமடைந்ததென்றும் அடிக்கடி கதைக்கப்படுகின்றது. ஒருதலைப் பட்சமான இக்கதை அதன் மற்றைய அடிப்படை அம்சங்களை விட்டொதுக்குகின்றது. முஸ்லிம்களின் அறிவு, சத்தியம் முதலியவற்றின் ஆதாரமாக திருக்குர்ஆனின் மையப்பாத்திரம், சூபிகளாலும் ஷீஆக்களாலும் ஒரேவிதமாகக் கடைப்பிடிக்கப்பட்ட ஆத்மிக வியாக்கியானவியலின் (தஃவீல்) அடிப்படைப்பாத்திரம், (இதன்மூலமே திருமறையினது அர்த்தத்தின் அகவய மட்டத்துடன் அறிவு தொடர்புபடுத்தப்படுகின்றது). இஸ்லாமிய தத்துவஞானமும், இறைஞானமும் (தியோசபி) ஓராயிரமாண்டுக்கு மேலாக இன்றும் பாரசீகத்திலும் அதனையடுத்துள்ள பகுதிகளிலும் தொடர்ந்து இருந்து வருகின்றமை முதலிய அம்சங்கள் விட்டொதுக்கப்படுகின்றன[11]. ஷீஆயிஸம் பற்றி நாம் சிந்திக்கும்போது ஷீஆயிஸம் அதன் சட்டத்துடனும் வரம்புமீறாத ஆத்மஞானப் போதனைகளுடனும் சேர்ந்து, 'தியோசபி' அல்லது ஹிக்மாவையும் கொண்டுள்ள தென்பதையும் இதுவே பிந்திய இஸ்லாமிய தத்துவஞான வளர்ச்சியையும் அறிவியல் விஞ்ஞானங்களையும் தொடக்கத்திலிருந்தே சாத்தியப்படுத்தியதோடு, அதனை இஸ்லாத்தின் அறிவு ஜீவ வாழ்வில், தனது சிறுபான்மை எண்ணிக்கையையும் மீறிப் பாரிய அளவில் பங்குகொள்ளச் செய்தது என்பதையும் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

இறைவனின் ஏகத்துவத்தை எட்டக்கூடிய ஏணியாக அறிவுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு முழு இஸ்லாத்தினதும் குணாகுணமான அம்சம் ஷீஆயிஸத்தால் வலியுறுத்தப்பட்டு கடுமையான தர்க்க சாஸ்திரப் பயிற்சி மத அறிவுடனும் ஆத்ம ஞானத்துடனும் கைகோர்த்துச் செல்லக்கூடிய பாரம்பரியக் கல்விமுறையை உருவாக்க உதவிற்று. ஷீஆ பல்கலைக்கழகங்களின் (மத்ரஸாக்கள்) பாடத்திட்டத்தில் தர்க்கவியல், கணிதம் முதல் மெய்ப் பொருளியல், சூபித்துவம் வரையிலான பாடங்கள் இந்நாள்வரை இடம்பெற்று வருகின்றன. அறிவின் சிரேஷ்டத்துவம் பகுத்தறிவுக்கு மேலான நிலையை எட்டுவதற்கு தர்க்கவியலையே ஏணியாக்கியுள்ளது. தர்க்க நியாயம் காட்டி விளக்குதல், விசேடமாக புர்ஹான் அல்லது சுட்டுதல் (அதன் பரிபாஷை அர்த்தத்தில்) மேல்நாட்டு தர்க்கவியலிலிருந்து வித்தியாசமான பயன்பாடு கொண்ட பங்கை இஸ்லாமிய தர்க்கவியலில் வகித்து வந்துள்ளது. இது தெய்வீக ஞானத்தின் பிரதிபலிப்பாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இதன் நிசப்பாடுகளின் உதவியுடன் ஷீஆ மெய்ப்பொருளியல் ஞானிகளும், மத அறிஞர்களும் மதத்தின் பெரும்பாலான மெய்ப்பொருளியல் போதனைகளை விளக்குவதற்குப் பெரும் பிரயாசை எடுத்து வந்துள்ளனர். இம்முறையின் அநேக உதாரணங்களை இந்நூலில் காண்கிறோம். இதுவும் இத்தகைய மரபு வழிவந்த மத்ரஸா கல்வியின் விளைவேயாகும். ஆத்ம ஞானத்திலிருந்து தர்க்கவியலை முற்றிலும் பிரித்துவிடுவதற்குப் பழக்கப்பட்ட மேல்நாட்டு வாசகருக்கு இது சில சிரமங்களைத் தோற்றுவிக்கலாம். இம் மேல்நாட்டு வாசகனுக்கு தர்க்கவியலின் மெய்மை நீண்ட காலமாக மதத்திலும், மெய்ப்பொருளியலிலும் மற்றைய மெய்மைகள் யாவையும் அழித்தொழிக்கும் கருவியாகப் பிரயோகிக்கப்பட்டு அல்லது துஷ்பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த முறை இஸ்லாத்தின் அடிப்படை அம்சத்தில் வேர் கொண்டதாகும். இதில் மதம் முன்வைக்கும் விவாதங்கள் பிரதானமாக அற்புதங்களை அடிப்படையாகக் கொள்ளாமல் அறிவுபூர்வமான அத்தாட்சியை அடிப்படையாகக் கொள்கின்றது[12]. இவ்வம்சம் ஷீஆயிஸத்தில் பலமாக வலியுறுத்தப்பட்டு அதன் பாரம்பரிய விளக்கங்களின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பிரதிபலிக்கப்படுகின்றது.

ஷீஆ ஆய்வுகளின் இன்றைய நிலை

ஸுன்னியிஸத்துடன் மேல்நாட்டினருக்கு ஏற்பட்ட அரசியல் தொடர்பு போன்று ஷீஆயிஸத்துடன் அவர்களுக்குத் தொடர்பு ஏற்படவில்லை என்பது போன்ற வரலாற்றுண்மைகள் காரணமாக ஷீஆயிஸத்தை அவர்களால் இன்றுவரை அறிந்துகொள்ள முடியாமல் போயிற்று. ஸுன்னியிஸம் கூட எல்லா மேலை நாட்டு அறிஞர்களாலும் எப்பொழுதும் சரியாகப் புரிந்துகொள்ளப்படவோ அனுதாபத்துடன் விளக்கப்படவோ இல்லை. மத்திய காலப்பகுதியில் ஸ்பெயின் , சிசிலி, பாலஸ்தீனம் முதலிய நாடுகளிலும், உஸ்மானியா ஆட்சிகாலத்தில் பால்கன்ஸிலும் (கருங்கடலால் சூழப்பட்ட பிரதேசம்) மேல்நாட்டாருக்கு இஸ்லாத்துடன் தொடர்பேற்பட்டது. இத்தொடர்புகள் யாவும் ஸுன்னியிஸத்துடனேயே ஏற்பட்டது. சிலுவை யுத்தக் காலத்தின் போது மேற்குக்கு ஷீஆயிஸத்துடன் ஓரளவு தொடர்பு ஏற்பட்டதெனலாம். காலனித்துவ காலகட்டத்தில் முஸ்லிம்களுடன் அன்றாடத் தொடர்பு கொள்வதற்கு ஷீஆயிஸம் பற்றிய நேரடியான அறிவு தேவைப்பட்ட பெரும் நிலப்பகுதி இந்தியா மட்டுமே. இக்காரணத்தால் பன்னிரு இமாம் ஷீஆ பற்றிய ஒரு சில ஆங்கில நூல்கள் இந்திய உபகண்டத்துடன் தொடர்பு கொண்டதாகும்[13]. இப்பரிச்சயமின்மை காரணமாக மேற்கைச் சேர்ந்த ஆரம்பகாலக் கீழைத்தேயவியலாளரில் அநேகர் ஷீஆயிஸத்துக்கெதிராகத் தான்தோன்றித்தனமான குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்தனர். ஷீஆயிஸக் கோட்பாடுகள் முஸ்லிம் வேடம்பூண்ட யஹூதிகளால் உருவாக்கப்பட்டதென்றனர். சூபித்துவம் மீதும் இதேவிதமான குற்றச்சாட்டு விடுக்கப்பட்டதன் காரணம் இஸ்லாத்தின் மெய்ப்பொருளியல் சித்தாந்தங்களில் எத்தகைய அறிவுபூர்வமான உள்ளடக்கத்தையும் அவர்கள் காண விரும்பாமையேயாகும். அப்படிக் கண்டிருந்தால் ‘பாலை வனத்தைச் சேர்ந்த சாதாரண எளிய மதம்’ என்று பிரசித்தமானதை மீறி அதனை விடவும் அதிகமான ஒன்றாக அது தென்பட்டிருக்கும். எனவே இத்தகைய எழுத்தாளர்கள் ஷீஆயிஸத்தினுள்ளும் சூபித்துவத்தினுள்ளும் காணப்பட்ட எத்தகைய மெய்ப்பொருளியல் ஆன்மிக சித்தாந்தங்களையும் போலியானதென நிராகரிக்க வேண்டியிருந்தது. இக்கால கட்டத்தில் ஷீஆயிஸம் பற்றி இரண்டொரு நூல்களையெழுதியோர் இஸ்லாத்தின்மீது குரோதம் கொண்டிருந்த மதகுருக்களேயாவர்[14].

கடந்த தலைமுறையின்போதுதான் ஒருசில மேற்கத்திய அறிஞர்கள் ஷீஆயிஸம் பற்றி அதிக அக்கறையான ஆய்வை மேற்கொள்ளத் தொடங்கினர். அவர்களில் பிரதானமானவர்கள் ஆரம்பகால அரபு ஷீஆயிஸம் பற்றிப் பிரதான ஆய்வுகள் மேற்கொண்ட எல். மசிக்னன் என்பாரும், முழு ஷீஆயிஸம் பற்றியும் விசேடமாக பாரசீகத்தை மையமாகக் கொண்ட அதன் பின்னைய அறிவு ஜீவ வளர்ச்சியையும் ஆய்வதில் தமது முழு வாழ்நாளையும் செலவிட்ட இன்னும் அறியவரப்படாதிருந்த இஸ்லாத்தின்அம்சமான மெய்ப்பொருளியல், தியோசபி முதலியவற்றின் செழுமையையும் முதன்முறையாக மேற்குலகுக்கு அறிமுகஞ் செய்துவைத்த எச். கோர்பின் என்பாருமாவார்[15]. இவர்களதும் மற்றுஞ் சில அறிஞர்களதும் முயற்சியையும் மீறி ஷீஆயிஸத்தின் பெரும்பகுதி இன்னும் மூடிய புத்தகமாகவேயுள்ளது. ஷீஆயிஸம் பற்றிய ஆய்வில் இப்போதுதான் இறங்கியுள்ள ஒருவருக்கு அதனை முழுமையாக முன்வைக்கக்கூடிய அறிமுக நூலொன்று ஆங்கிலத்தில் இதுவரை வெளிவரவில்லை.

இந்நூல்

இக்குறைபாட்டை நிவர்த்திப்பதற்காகவேண்டி கீழைத்தேய மதங்களை அம்மதங்களின் அதிகாரம்வாய்ந்த பிரதிநிதிகளின் கண்ணோட்டத்திலேயே மேற்குலகுக்கு அறிமுகப்படுத்திவைக்கும் பாராட்டுக்குரிய பணியில் ஈடுபட்டுள்ள கொல்கேட் பல்கலைக்கழகப் பேராசிரியர் கென்னத் மோர்கன் 1962ல் என்னையணுகி ஷீஆ கண்ணோட்டத்தில் ஷீஆயிஸம் பற்றி மூன்று நூற்றொகுதிகளை நான் மேற்பார்வை புரிய வேண்டுமென ஆலோசனை கூறினார். இத்திட்டம் நிறைவேறினால் வருங்கால இஸ்லாமிய ஆராய்ச்சியில் முழுமையான மதஒப்பியல்ஆய்வில் அது வகிக்கக்கூடிய முக்கியத்துவம் கருதி இச்சிரமமான பணியை மேற்கொள்ள நான் இசைந்தேன். இத்தொடரில் வெளிவரும் முதலாவது நூல் இது. மற்றைய இரு தொகுதிகள் குர்ஆன் பற்றிய ஷீஆ கண்ணோட்டம் - (இது அல்லாமா[16] தபாத்தபாய் எழுதிய நூலாகும்). ஷீஆ இமாம்களின் வாய்மொழிகள் ஆகியனவுமாகும்.

1963ஆம் ஆண்டு இளவேனிலில், பேராசிரியர் மோர்கன் தெஹ்ரானிலிருந்தபோது நாம் அல்லாமா ஸையித் முஹம்மத் ஹுஸைன் தபாத்தபாயை தெஹ்ரானுக்கருகாமையிலுள்ள மலைப் பிராந்தியக் கிராமமான தராக்காவில் போய்ச் சந்தித்தோம். இச்

சங்கைக்குரிய ஷீஆ அறிஞர் தமது வழக்கமான வதிவிடமான கும்மின் வெப்பத்திலிருந்து ஒதுங்கி இங்கு வேனிற்காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார். வாழ்நாள் முழுவதையும் மத ஆய்வுக்காக அர்ப்பணித்த அடக்கமும் ஆய்வாற்றலுமிக்க ஒருவரின் பிரசன்னம் இச்சந்திப்பில் ஆதிக்கஞ் செலுத்தியது. நவீனத்துவத்தின் ஆர்ப்பாட்ட இரைச்சலால் இன்னும் கலைபடாத அமைதியும் சாந்தமும் ஆட்சி புரியும், ஒடுங்கி வளைந்து செல்லும் கிராமப்பாதை வழியாக அவ்வில்லத்திலிருந்து திரும்பி வருகையில் பேராசிரியர் மோர்கன் தாம் உத்தேசித்திருந்த நூற்றொடரில் ஷீஆயிஸம் பற்றிய பொதுவான தொகுதியையும் குர்ஆன் பற்றிய தொகுதியையும் அல்லாமா தபாத்தபாய் எழுதுதலே சாலச் சிறந்தது என அபிப்பிராயப்பட்டார். பின்னர் அப்பிரபல ஷீஆ அறிஞரின் சம்மதத்தைப் பெற என்னால் முடிந்தது. தாம் மேற்கொண்டிருந்த அல் -மீசான் எனும் சிரேஷ்ட படைப்பான திருக்குர்ஆன் விளக்கவுரையை ஒருபுறம் வைத்து விட்டுத் தமது நேரத்தின் சில பகுதியை இவ்விரு தொகுதிகளுக்காகச் செலவிட அவர் இசைந்தார். பாரம்பரிய தத்துவஞானம், தியோசபி (இறைஞானம்) ஆகிய துறைகளில் அவருடன் சிறிது காலம் கற்று வந்த நான், ஷீஆ கண்ணோட்டத்தின்படி முற்றிலும் ஆதாரபூர்வமான, அதேவேளை அறிவுபூர்வ அடிப்படையிலமைந்த ஒருநூலை எழுதவதற்கு ஷீஆ அறிஞர்களில் அவரே மிகவும் தகுதிவாய்ந்தவரென அறிந்திருந்தேன். மேற்கத்திய சிந்தனையின் செல்வாக்கினால் மாசுறாத, அத்துடன் ஷீஆ சமூகத்தினால் பெரிதும் மதிக்கப்படுகின்ற அதேவேளை தமது வாதங்களை மேலை வாசகர் முன்னால் வைக்கக்கூடிய வகையில் மேற்குலகோடும் மேலை வாசகரின் மனநிலையோடும் நன்கு பரிச்சயமுள்ள ஒருவரைத்தேடிப் பிடிப்பதிலுள்ள இயல்பான சிரமத்தை நான் உணர்ந்தேயிருந்தேன். துரதிஷ்டவசமாக இப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு காணப்படவில்லை. ஏனெனில் பாரசீகத்திலும் மற்றைய இடங்களைப் போன்றே மத விவகாரங்களில் அக்கறை கொண்டோர் இருவகையினரே காணப்படுகின்றனர்.

1. நவீன மனிதனின் உளவியல் அமைப்பும் சிந்தனைப் போக்கும் பற்றி ஒன்றுமே அறியாத அல்லது நவீன உலகு பற்றிக் குறுகிய அறிவுபடைத்த மரபுவாத அறிஞர்கள்.

2. பாரம்பரிய அதிகார வட்டங்களால் அல்லது முஸ்லிம் சமூகத்தால் (உம்மாஹ்) ஏற்றுக்கொள்ள முடியாத வகையில்

இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் 'புத்திஜீவிகள்' என அழைக்கப்படும் நவீனவாதிகள் - இஸ்லாத்தில் இவர்களுக்குள்ள ஈடுபாடு உணர்ச்சிவசமானதும், சமாதானஞ் சொல்லும் போக்கினதுமாகும். கடந்த சில ஆண்டுகளாகத்தான், புதியதொரு அறிஞர் பரம்பரை உருவாகி வருகின்றது. இவர்கள் இன்னும் மிகச் சிறுபான்மையினராகவே உள்ளனர். இவர்கள் ஆழ்ந்த அர்த்தத்தில் வைதீகப்பற்றுள்ளோராகவும், மரபு பேணிகளாகவும் இருப்பதோடு நவீன உலகை நன்கறிந்தவர்களாகவும் மதிநுட்பம் வாய்ந்த மேலைவாசகரைச் சென்றடையக் கூடிய மொழியை நன்கறிந்தோராகவும் இருக்கின்றனர்.

எப்படியிருந்தபோதிலும், மிகவும் மதிக்கப்படும் பாரம்பரிய ஷீஆ அறிஞர்களுள் ஒருவரினாலேயே ஷீஆயிஸம் விவரிக்கப்படல் வேண்டும் என்பது பேராசிரியர் மோர்கனின் நோக்கமாயிருந்தபடியால், அல்லாமா தபாத்தபாய் போன்ற முதல்தரமான ஒருவரை நாடுவது அவசியமாயிற்று. இவர் விஷயத்தில் மேலை வாசகர்களைப் பற்றிய ஆழமான புரிந்துணர்வை ஒருவர் எதிர்பார்க்க முடியாதென்பது உண்மைதான். ஸுன்னி இஸ்லாம் பற்றிய இவரது அறிவுகூட சுன்னத் ஜமா அத்துக்கும் ஷீஆவுக்குமிடையிலான கருத்து மோதலின் எல்லைக் கோட்டினுள்ளேயே சுழல்கிற ஒன்று என்பது அவராலும் இருபக்கங்களைச் சேர்ந்த மற்றுஞ் சிறந்த உலமாக்களாலும் இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பல்வகை முஸ்லிம்கள் குறிப்பாக ஷீஆ உலமாக்களிலும் இருக்கின்றனர். இவர்களில் சிலருக்கு தியோசபியிலும்(இறைஞானம்), ஆத்ம ஞானத்திலும் ஆழ்ந்த அறிவு கிடையாது. புறவயமான அறிவுத்துறைகளுடனேயே அவர்கள் தங்களை மட்டுப்படுத்திக் கொள்கின்றனர். சட்டத்துறை, குர்ஆன் விளக்கவுரை இவற்றுடன் தத்துவம், தியோசபி (இறைஞானம்), சூபித்துவம் போன்றவற்றையும் இணைத்துக்கொண்ட ஷீஆயிஸ கண்ணோட்டத்தில் முழுமையான விளக்கம் வழங்கக்கூடிய அறிவுஜீவ அதிகாரங் கொண்ட ஷீஆ உலமாக்களின் மையவட்டத்தை அல்லாமா தபாத்தபாய் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். பாரம்பரிய உலமாக்கள் மத்தியில் ஷரீஅத், ஆத்மஞானம் இரண்டிலும் மேதையாகவும், அதேநேரம் நிகரற்றவொரு ஹக்கீம் அல்லது பாரம்பரிய இஸ்லாமியத் தத்துவஞானியாகவும் (இன்னுஞ் சரியாகச் சொல்வதாயின் இறைஞானியாகவும்) அல்லாமா தபாத்தபாய் விளங்குகிறார். அலி

மீதும் நபி குடும்பத்தவர் மீதும் ஷீஆக்கள் தீவிர அன்பு வைத்துள்ளதை ஏற்காத இஸ்லாமிய வெளிப்பாட்டிலேயே நம்பிக்கையற்ற, ஓர் உலகுக்கு ஷீஆயிஸத்தின் கருத்துமோதலான பகுதியைச்சமர்ப்பிப்பதில் உள்ள சிரமங்கள் யாவும் ஒரு புறத்திருக்க இம்முக்கிய பணியை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். எனவே ஷீஆ கண்ணோட்டத்தினுள்ளேயே எழுதியும் சிந்தித்தும் வரும் ஒருவருக்குத் தட்டுப்படாத சில விளக்கங்கள் கோரப்படுகின்றன.

அல்லாமா தபாத்தபாயுடன் ஆறாண்டுகள் இணைந்து நான் மேற்கொண்ட பணியும் கும்முக்கும், அவர் வேனிலின் போது அடிக்கடி செல்லும் மஷ்ஹதுக்கும் நான் மேற்கொண்ட பல பயணங்களும் ஆங்கில மொழிபெயர்ப் புக்கான வேலையைப் படிப்படியாகத் தயாரிப்பதற்கு எனக்குதவின. இப்பணி ஒருலகிலிருந்து இன்னோருலகுக்கு, தபாத்தபாயின் வாசகர்களது அறிவின், மத நம்பிக்கையின் பொதுவான பின்னணியைக் கொண்டிராத உலகுக்கு அர்த்தத்தை மொழிபெயர்த்தளிக்கும் பணியாகும். இஸ்லாத்தின் அமைப்பு பற்றி முழுமையான ஆழ்ந்த புரிந்துணர்வை சாத்தியப்படுத்தும் நூலைப் பதிப்பிப்பதில் பாரம்பரியப் புலமைக்கும் நவீன புலமைக்குமிடையே காணப்படும் வித்தியாச ங்களையும், இந்நூல் யாருக்காக எழுதப்படுகின்றதோ அவர்களது முக்கிய கேள்விகளையும் நான் முழுமையாகக் கவனத்திலெடுத்துக் கொள்ள முயன்றுள்ளேன்(17).

ஆனால் இவ்விரு நிபந்தனைகளும் விடுக்கும் கேள்விகளை ஒருபுறம் வைத்துவிட்டு முஸ்லிமல்லாத வாசகர்கள் பாரம்பரிய முஸ்லிம் அறிஞரின் செய்தியை மட்டுமன்றி அதன் உருவத்தையும் அறிவுஜீவ நடையையும் கூட அறியும் வகையில் நான் மூலநூலுக்கு விசுவாசமாய் இருக்க முயன்றுள்ளேன்.

எனவே அல்லாமா தபாத்தபாயால் இந்நூலில் முன்வைக்கப்படும் வாதங்கள் சந்தேகப்பார்வையுடன் தொடங்கும் சிந்தைக்கன்றி உறுதிகொண்ட, ஆழ்ந்த மத நம்பிக்கையும் மதப்பற்றும் கொண்ட சிந்தைக்கே சமர்ப்பிக்கப்டுகின்றன. சிலவகை நவீன மனிதர்களின் ஆழ்ந்த சந்தேகமும் சூனியவாதமும் அவரால் நினைத்துப் பார்க்க முடியாதவை. எனவே சில சந்தர்ப்பங்களில் அவரது வாதங்கள் புரிந்து கொள்ளச் சங்கடமானதாயும் நம்ப முடியாதவையாயும் மேலை வாசகர் சிலருக்குப் படலாம். அவர் விளிக்கின்ற வாசகர்

கூட்டத்தின் காரணத்துவம் பற்றிய கேள்வி யதார்த்த மட்டங்கள் பற்றிய எண்ணக்கரு முதலியன மேலை வாசகருடையதைவிடவும் வித்தியாசமானவையாகையால் அப்படித் தோன்றுவது இயல்பே. அத்துடன் அளவுக்கதிகமானவை, அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டவை போன்ற விளக்கங்கள் காணப்படலாம். இதுவும் கூறியது கூறலும் கீழைத்தேயத்தவரினதை விடவும் பகுத்தறியும் ஆற்றல் அதிகம் விருத்தியடைந்த நுண்ணறிவு படைத்த மேலைவாசகரின் மதிநுட்பத்தை அவமதிப்பதாகப் படலாம்[18].

இவ்விடயத்தில் அவர் வாதங்களை முன்வைக்கும் விதமும் அவரறிந்த பாரம்பரிய அம்சங்கள் கொண்ட சமகால இஸ்லாத்தின் உலகமும் ஞாபகத்தில் கொள்ளப்படல் வேண்டும். புனித அன்சலேமும் புனித தோமையரும் இறைவனின் உள்ளமையை நிரூபிப்பதற்காகக் காட்டும் உதாரணங்கள் நவீன மனிதனை ஈர்ப்பதாக இல்லையெனில் மத்தியகால இறையியலாளர்களை விடவும் நவீன மனிதன் மதிநுட்பம் மிக்கவன் என்றாகி விடாது. ஏனெனில் காரணத்துவ விளக்கத்துக்கான வித்தியாசமான மனநிலை படைத்த மனிதர்களை நோக்கியே அவர்கள் பேசுகின்றனர். அல்லாமா தபாத்தபாய் தாமறிந்த வாசகர் கூட்டமான பாரம்பரிய முஸ்லிம் அறிவு ஜீவிகளை நோக்கியே பேசுகிறார். இவ்விவாதங்கள் அனைத்தும் மேலைவாசகரை ஈர்ப்பதாக இல்லையெனில் அதற்காக அவரது வாதங்கள் வலுவற்றவை என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

நவீன காலத்தில் ஷீஆயிஸம்பற்றி ஷீஆ அறிஞர்களில் மிகச் சிறந்த ஒருவரைக் கொண்டு பொதுவாக எழுதப்பட்ட முதல் அறிமுகநூல் இதுவெனத் தொகுத்துரைக்கலாம். ஷீஆயிஸத்துக்கு வெளியே உள்ள பரந்த உலகிற்காக இந்நூல் எழுதப்பட்டபோதிலும் இதில் முன்வைக்கப்படும் விவாதங்களும் அவை முன்வைக்கப்படும் விதமும் பாரம்பரிய ஷீஆயிஸத்தைச் சார்ந்ததாகும். இப்பாரம்பரிய ஷீஆயிஸத்தின் தூணாக விளங்குபவர் அல்லாமா தபாத்தபாய். வாழையடிவாழையாக ஷீஆக்களால் நம்பப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வரும் முறையிலேயே ஷீஆயிஸக் கருத்துக்களை அவர் சமர்ப்பிக்கின்றார். வெளியுலகில் அது கிளப்பக்கூடிய எதிரொலிகளைப் பற்றிக் கவலைப்படாமல், சர்ச்சைக்குரிய குறிப்பிட்ட ஷீஆ அம்சங்களைப் புறந்தள்ளாமல் ஷீஆயிஸத்துக்கு விசுவாசமாயிருக்கவே அவர் முயன்றுள்ளார்.

கருத்து மோதல் நிலையைத் தாண்டிச் செல்வதெனில் இரு கோட்பாட்டாளரும் பொது அபாயத்தை எதிர்கொள்ளும் வகையில் தம் அபிப்பிராய பேதங்களை ஒரு புறம் வைக்கவேண்டும். அல்லது வரலாற்று இறையியல் உண்மை சித்தாந்தங்களின் மட்டத்திலிருந்து தூய மெய்ப்பொருள் ஞான விளக்கத்தின் மட்டத்துக்கு கருத்தாடல் மாறவேண்டும். அல்லாமா தபாத்தபாய் இவ்விரு வழிகளில் எதனையும் மேற்கொள்ளாமல் ஷீஆயிஸத்தை உள்ளபடியே விவரிப்பதில் திருப்தியடைகிறார். புறவய (ஸாஹிர்) அறிவுத்துறைகளிலும், மறைவான (பாத்தின்) ஞானங்களிலும் அவரது மேதை காரணமாக ஷீஆ மதவுலகில் தாம் வகிக்கும் உத்தியோக பூர்வ நிலைப்பாட்டின் வெளிச்சத்தில் ஷீஆ கருத்தோட்டத்துக்கு முழுமையான நியாயம் புரிய அவர் பிரயத்தனமெடுத்துள்ளார். யாவற்றினதும் முழுமையான பார்வையை விளக்குவதில் விசேடமாக உண்மையான அகிலத் தன்மைவாய்ந்ததாய் உரிமைகொண்டாடும் தகுதியை அவை மட்டுமே பெற்றிருக்கக்கூடிய மறைவான ஞானங்களின் கோட்பாடுகளைப் பகிரங்கப்படுத்துவதில் உள்ள சிரமங்களை இஸ்லாமிய உலகை நன்கறிந்தோர் அறிவர். ஷீஆ உலகில் அவர் வகிக்கும் சிரேஷ்டஸ்தானம் அந்தரங்க ஞான போதனைகள்பற்றிப் பகிரங்கமாகப் பேசுவதற்கு அவரை அனுமதித்துள்ளபடியால் இந்நூலில் அவர் ஷீஆயிஸத்தை அதன் புறவய, அகவய அம்சங்கள் இரண்டிலுமே விளக்கி அதனைக் காத்து நிற்பதனைக் காணமுடிகிறது. ஆனால் மரபு வழங்கும் அதிகாரக் குரலிலேயே அத்தனையும் பேசப்படுகின்றது. அல்லாமா தபாத்தபாயின் வார்த்தைகளின் பின்னால் பதினான்கு நூற்றாண்டுகால ஷீஆ இஸ்லாமும் இஸ்லாமிய மரபினால் சாத்தியமாக்கப்பட்ட புனித மத அறிவின் தொடர்ச்சியும் அறிவிப்பும் நிற்கின்றது.

நூலாசிரியர்

அல்லாமா ஸையித் முஹம்மத் ஹுஸைன் தபாத்தபாய்[19], தப்ரிஸ் என்ற இடத்தில் ஹிஜ்ரி (சந்திரவருடம்) 1321ல் அல்லது ஹிஜ்ரி (சூரிய வருடம்) 1282ல் (கி.பி. 1903)[20] பதினான்கு தலைமுறைகளாய்த்தலைசிறந்த இஸ்லாமிய அறிஞர்களைத் தந்த நபிச்சந்ததியினரின் குடும்பமொன்றில் பிறந்தார்[21]. சொந்தவூரிலேயே ஆரம்பக் கல்விகற்று அறபு மொழியினதும் மதக்கல்வியினதும் அடிப்படைகளில் பாண்டித்தியம் பெற்றார்.

இருபது வயதில் மேற்கல்விக்காக நஜாஃபில் உள்ள மாபெரும் ஷீஆப் பல்கலைக்கழகம் சென்றார். மத்ரஸாக்களில் பெரும்பாலான மாணவர்கள் 'அறிவிக்கப்பட்ட அறிவுகளின்' (அல் உலூம் அல் நக்லிய்யாஹ்) பிரிவை விசேடமாக இறைச் சட்டம் (ஃபிக்ஹு) அல்லது நீதியியல் (உஸூல் அல் ஃபிக்ஹு) அல்லது நீதியியலின் அடிப்படைகள் முதலியவை சம்மந்தமான அறிவுத் துறைகளைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஆனால் அல்லாமா தபாத்தபாய் பாரம்பரிய அறிவுத் துறைகளின் இருகிளைகளிலும்; அறிவிக்கப்பட்டவற்றிலும் அறிவு, ஜீவமானவற்றிலும் பாண்டித்தியம் பெற விரும்பினார். அந்நாளைய மாபெரும் அறிஞர்களான மிர்சா முஹம்மத் ஹுஸைன் நய்னி, ஸைக் முஹம்மத் ஹுஸைன் இஸ்ஃபஹானி இருவருடனும் சேர்ந்து இறை சட்டத்தையும் நீதியியலின் அடிப்படைகளையும் கற்றார். இத்துறையில் அல்லாமா காட்டிய மேதமை எத்தகையதெனில் அவர் அத்துறையில்மட்டுமே முழுக்கவனத்தையும் செலுத்தியிருப்பின் இறைச்சட்டத்தில் அதிகாரத்தன்மை வாய்ந்த மிகச்சிறந்த அறிஞராக அல்லது தலைசிறந்த முஜ்தஹித்களில் ஒருவராக மாறி அரசியலிலும் சமூகத்துறையிலும் அவர் செல்வாக்கு செலுத்தியிருக்க முடியும்.

ஆனால் அவரது வாழ்க்கை இலட்சியம் அவ்வாறமையவில்லை. அறிவியல் விஞ்ஞானங்களின் பால் அவர் அதிகம் ஈர்க்கப்பட்டார். பாரம்பரியக் கணிதம் முழுமையையும் ஸையித் அபுல் காஸிம் ஹான்ஸாரியுடன் ஊக்கமாகக் கற்றதுடன் தெஹ்ரான் கல்விக்கூடத்தின் புகழ்பெற்ற ஆசிரியர்களான ஸையித் அபுல் ஹசன் ஜில்வாஹ், அகா அலீ முதர்ரிஸ் ஸுனூஸி முதலியோரின் மாணாக்கரான ஸையித் ஹுஸைன் பாத்கூபய் என்பாருடன் சேர்ந்து இப்னு சீனாவின் ஷிஃபா, ஸத்ருதீன் ஷிராஸியின் அஸ்ஃபார் முதலிய தரமான நூல்கள் உட்படப் பாரம்பரிய இஸ்லாமிய தத்துவ ஞானத்தைப் பயின்றார்.

சம்பிரதாயக்கல்வி அல்லது 'தேடிக்கொண்ட அறிவு' (இல்மு ஹுஸூலி) எனப் பாரம்பரிய முஸ்லிம் ஆதாரங்களில் குறிப்பிடப்படும் கல்வியுடன் அல்லாமா தபாத்தபாயி உடனடியான அறிவு எனப்படுவதை அல்லது மறையியல் ஞானத்தைப் பெறவிரும்பினார். இதன்மூலமே அறிவு பரத்தற்குரிய எதார்த்தங்களின் திருஷ்டாந்தமாய் மாறவல்லதாகின்றது. இஸ்லாமிய ஆத்மீக ஞானத்தில் மாபெரும்மேதையான மிர்சா அலி காதி என்பாரைக் காணும் பாக்கியம் அல்லாமாவுக்குக் கிடைத்தது.

அவர் அல்லாமாவைத்தெய்வீக இரகசியங்களில் பயிற்றுவித்து ஆத்மீகப் பூரணத்துவம் நோக்கி அவருக்கு வழிகாட்டினார்.

காதியைச் சந்திக்குமுன் தாம் இப்னு அறபியின் ஃபுஸூஸ் அல் ஹிக்கம் என்ற நூலைப் படித்து அதனை நன்கு விளங்கிக் கொண்டதாகக்கருதியிருந்ததாகவும் ஆத்மீக ஞானத்தில் அதிகாரம் படைத்த இம்மாமேதையைச் சந்தித்ததும் தம் அறியாமையைத் தாம் உணர்ந்ததாகவும் அல்லாமா ஒருமுறை என்னிடம் கூறினார். மிர்சா அலி காதி 'ஃபுஸூஸ் அல் ஹிக்கமை' படிப்பிக்கத் தொடங்கியதும் அறைச் சுவர்களெல்லாம் ஆத்ம ஞானத்தின் யதார்த்தம் பற்றிப் பேசுவதாகவும் அவரது வியாக்கியானங்களில் பங்குபற்றுவ தாகவும் தோன்றியது எனவும் அவர் என்னிடம் கூறினார். இம்மாமேதையின் தொடர்பு காரணமாக நஜாஃபில் கழித்த நாட்கள் அறிவு வளர்ச்சியின் காலகட்டமாக மட்டுமன்றி கடுமையான ஆத்ம ஞானப் பயிற்சியின்காலகட்டமாகவும் விளங்கிற்று. லோகாயத மட்டுப்படுத்தலின் இருளிலிருந்து விலகிச் செல்லல் (தஜ்ரீத்) என அடிக்கடி குறிப்பிடப்படும் ஆத்மிக உணர்வு நிலையை அடைய இது அல்லாமாவுக்கு உதவியது. நோன்பு நோற்பதிலும் வணக்கங்களிலும் நீண்டகாலத்தைச் செலவிட்டார். நீண்ட இடைவெளிக் காலத்தில் பூரண மௌனத்தைக் கடைப்பிடித்தார்.

அல்லாமா தபாத்தபாயி ஹிஜ்ரி (சூரிய வருடம்) 1314ல் (கி.பி. 1934) தப்ரீஸ் திரும்பி சிறுதொகையினரான சீடர்களுக்குக் கற்பிப்பதில் அந்நகரில் சில வருடங்களை அமைதியாகக் கழித்தார். பாரசீகத்தின் மதவட்டாரங்களில் இன்னும் அவர் அறியவரப்படாதவராகவே இருந்தார். இரண்டாம் உலக யுத்தத்தின் சோக சம்பவங்களும், பாரசீகத்தை ரஷ்யா கைப்பற்றியமையும் ஹிஜ்ரி (சூரிய வருடம்) 1324ல் (கி.பி. 1945) அல்லாமா தபாத்தபாயைக் கும்முக்குக் கொண்டுசென்றது. அக்காலை கும் நகரம் பாரசீகத்தின் மதக் கல்வியின் நடுநிலையமாகத்திகழ்ந்தது. அப்புனித நகரில் தம் ஆசிரியப் பணியை அமைதியாகத் தொடர்ந்தார் அல்லாமா. நீண்டகாலம் கும்மில் கற்பிக்கப்படாமலிருந்த குர்ஆன் விளக்கவுரை, பாரம்பரிய இஸ்லாமிய தத்துவஞானம், (இறைஞானம்) முதலியவற்றில் அவர் கவனஞ் செலுத்தலானார். அவரது காந்த சக்திவாய்ந்த ஆளுமையும், ஆன்மீகப் பிரசன்னமும், விவேகமும் ஆற்றலும் வாய்ந்த மாணவர்களை அவர்பால்ஈர்த்தன. படிப்படியாக பாரம்பரியப் பாடத்திட்டத்தில் முல்லா ஸத்ராவின் போதனைகள் மீண்டும் முக்கியத்துவம் பெறச் செய்தார் அல்லாமா.

கும்மின் மஸ்ஜித் மத்ரஸாவொன்றில் சுமார் நானூறு மாணவர்கள் அல்லாமாவின் பாதத்தடியிலமர்ந்து அவரது அறிவு ஞானத்தை ஈர்ந்துகொள்ள அவர் பொது விரிவுரைகள் சில நிகழ்த்திவந்த காட்சி இன்னும் பசுமை குன்றாமல் என் நினைவில் நிற்கின்றது.

கும்முக்கு வந்ததிலிருந்து அல்லாமா தபாத்தபாயின் நடவடிக்கைகளில் தெஹ்ரானுக்கு அவர் மேற்கொண்ட விஜயங்களும் அடங்கும். இரண்டாம் உலக யுத்தத்துக்குப்பின் தெஹ்ரானில் சில இளைஞர்கள் மார்க்ஸீய மாயையில் மூழ்கிக்கிடந்தபோது கம்யூனிஸத்தின் தத்துவ அடிப்படையைப் பெரும் பிரயாசையுடன் கற்றுத்தேர்ந்து மரபுக் கண்ணோட்டத்தில் இயக்கவியல் பொருள் முதல்வாதத்துக்குச் சவால்விட்ட ஒரே மத அறிஞர் அவராவார். இம்முயற்சியில் முகிழ்ந்ததுதான் அவரது பிரதான படைப்புகளில் ஒன்றான உஸுலி ஃபல்ஸபா வ றவிஷ் இ ரியலிஸம் (தத்துவத்தின் அடிப்படைகளும்யதார்த்தத்தின் முறையும்) என்ற நூல். எல்லா இயக்கவியல் தத்துவங்களுக்கும் எதிராக யதார்த்தத்தை அதன் பாரம்பரிய மத்தியகால அர்த்தத்தில் இந்நூலில் அவர் ஆதரிக்கின்றார். பாரசீகச் சமூகத்தைச் சேர்ந்த அநேக சீடர்களை அவர் நவீன கல்வியில் பயிற்றெடுத்தார்.

கும்முக்கு வந்ததிலிருந்து இஸ்லாமிய ஞானத்தையும் இஸ்லாத்தின் அறிவுபூர்வமான செய்தியையும் மூன்று மட்டங்களில் இன்று பாரசீகத்திலும் ஷீஆ நாடுகளிலும் சிதறிக் காணப்படும் கும்மில் கற்ற பெருந்தொகையான மாணவர்களுக்கும், மிகவும் நெருங்கிய வட்டத்தினுள் வியாழன் மாலை நேரங்களில் தமதில்லத்தில் அல்லது தனியிடங்களில் தம்மிடம் ஆத்மஞானத்தையும், சூபித்துவத்தையும் கற்றுவந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாணவர் குழுவுக்கும், நவீன கல்வி பெற்ற பாரசீகருக்கும், தாம் தெஹ்ரானில் சந்திக்கநேர்ந்த பாரசீகரல்லாதோருக்கும் வெளியிடுவதற்கு அல்லாமா தபாத்தபாயி அயராதுழைத்தார்.

கடந்த பத்துப் பன்னிரண்டாண்டுகளாக தெஹ்ரானில் தெரிந்தெடுக்கப்பட்ட பாரசீகர் குழுவொன்றின் கலந்துரையாடல் கள் ஒழுங்காக நடைபெற்றுவந்தன. இலையுதிர் காலத்தில் ஹென்ரி கோர்பினால் நடத்தப்பட்டுவந்த இக்கலந்துரையாடல்களில் ஆழமான நெருக்குகின்ற ஆன்மீக, அறிவுஜீவ பிரச்சினைகள் பற்றி அலசப்பட்டன. இவற்றில் நான் வழக்கமாக மொழிபெயர்ப்

பாளனாகப் பணியாற்ற வேண்டியிருந்தது. இவ்வருடங்களில் நாம் தபாத்தபாயுடன் இறை ஞானத்தினதும் ஆத்ம ஞானத்தினதும் செந்நெறி நூல்களை மட்டுமன்றி ஒப்பியல் ஆத்மஞானமெனச் சொல்லத் தக்கதையும் கற்றுத்தேர்ந்தோம். ஒவ்வொரு கலந்துரையாடலின்போதும் ஆத்மீக மெய்ஞ்ஞானப் போதனைகளடங்கிய தாவோ தே சிங், உபநிசதங்கள், ஜானின் சுவிசேஷம் போன்ற பிரதான மதங்களின் வேதநூல் ஒவ்வொன்று பற்றியும் கலந்துரையாடப்பட்டு சூபித்துவத்தோடும் பொதுவாக இஸ்லாமிய ஆத்மஞானக் கோட்பாடுகளோடும் ஒப்புநோக்கப்பட்டது.

எனவே பாரசீகத்தின் பாரம்பரிய வட்டத்திலும் நவீன வட்டத்திலும் அல்லாமா தபாத்தபாயி ஆழ்ந்த செல்வாக்கு செலுத்திவந்துள்ளார். இஸ்லாமிய அறிவு ஜீவிதத்துடனும் நவீன உலகுடனும் பரிச்சயமாகவிரும்பிய நவீன படித்த வகுப்பினரின் மத்தியில் புதிய அறிவுஜீவ உயர்குடியொன்றை அவர் உருவாக்கப் பிரயாசையெடுத்துள்ளார். உலமா வகுப்பைச் சேர்ந்த அவரது பாரம்பரிய மாணவர்களில் அநேகர் இம்முக்கிய முயற்சியில் அவரது முன்மாதிரியைப் பின்பற்ற முயன்றுள்ளனர். மஷ்ஹதைச் சேர்ந்த ஸையித் ஜலால் அல் தீன் அஷ்தியானி, தெஹ்ரான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முர்தஸா முதஹ்ஹரி போன்ற அவரது மாணவர்களில் சிலர் புகழ்பெற்ற அறிஞர்களாவர். மாபெரும் ஆன்மீகப் பண்புகள் கொண்ட ஆனால் அவற்றை வெளிக்காட்டாத தமது ஏனைய மாணவர்கள் குறித்தும் அல்லாமா தபாத்தபாயி அடிக்கடி பிரஸ்தாபிப்பதுண்டு.

கல்விபோதிக்கும் வழிகாட்டும் கடுமையான பணியைப் புரிந்துகொண்டே, அல்லாமா தபாத்தபாயி அநேக நூல்களையும் கட்டுரைகளையும் எழுதிவந்துள்ளார். இது அவரது அறிவுஜீவ ஆற்றலுக்கும் பாரம்பரிய இஸ்லாமிய அறிவுத்துறைகளில் அவரது ஆழிய அறிவுக்கும் தக்க சான்றாகும்(23).

இன்று சங்கைக்குரிய இவ்வறிஞர் கும்மில் தமதில்லத்தில் தமது முழுநேரத்தையும் குர்ஆன் விளக்கவுரையிலும் தமது சிறந்த மாணாக்கர்சிலரை நெறிப்படுத்துவதிலும் செலவிட்டு வருகின்றார். இஸ்லாமியப் புலமையின் நீண்ட பாரம்பரியத்தில் மிகவும் நிலைபேறானதன் சின்னமாக அவர் நிற்கின்றார். இறை ஞானக் கனியைப் புசித்தவரிடமிருந்து வீசக்கூடிய நறுமணம் அவரது

பிரசன்னத்தில் கமழ்கின்றது. காலத்துக்குக் காலம் தோன்றிய இஸ்லாமிய அறிஞர்களின் உதார குணங்களான மேன்மை, பணிவு சத்தியவேட்கை முதலியன வாய்க்கப்பெற்றவராக அவர் திகழ்கின்றார். அவரது அறிவும் அதன் விளக்கமும் உண்மையான கல்விக்கு உதாரணமாகும். அவை ஆழியதாய், மெய்ப்பொருளியலானதால் சில கீழைத்தேயவியலாளரின் குறுகிய வியாக்கியானங்களிலிருந்தும் பல முஸ்லிம் நவீனத்துவவாதிகளின் திரித்துக் கொச்சைப்படுத்தப்பட்ட சித்தரிப்புகளிலிருந்தும் வித்தியாசமானதாய் விளங்குகின்றன. விரும்பத்தக்கதான நவீன மனப்பான்மையும் நவீன உலகப்பான்மையும் பற்றிய பிரக்ஞை அவரிடம் இல்லைதான். எனினும் பாரசீகத்திலும் ஈராக்கிலுமுள்ள பாரம்பரிய வட்டத்தினுள் அடங்கும் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்ட ஒருவரிடம் அதனை எதிர்பார்க்க முடியாது.

★★★

அரபி, பாரசீகப்பதங்கள் தரப்பட்டுள்ள முறைகுறித்தும் இஸ்லாமிய ஆதாரநூல்கள் குறிப்பிடப்பட்டுள்ள முறை குறித்தும் சில வார்த்தைகள். பதங்களைத் தருவதில் அநேக இஸ்லாமிய நூல்களில் பின்பற்றப்பட்டுள்ள முறையையே நான் கையாண்டுள்ளேன். ஆனால் இஸ்லாமிய நூல்களை ஆதாரங் காட்டுவதில் மூலப்பிரதிக்கு முற்றிலும் விசுவாசமாகவே நடந்து கொண்டுள்ளேன். நூலாசிரியர் ஏனைய பாரசீக எழுத்தாளர் அநேகரைப் போன்றே பாரசீக மொழிபேசும் உலகில் பிரசித்தமான அறபு நூல்களை அவற்றின் பாரசீக வடிவத்திலும் அதிகம் அறியவரப்படாத நூல்களை அரபு வடிவத்திலும் குறிப்பிடுகிறார். அல் - தபரியின் வரலாறு, பாரசீக இதாபாஹ் அமைப்பைப் பின்பற்றி தாரிக் - இ தபரி எனக் குறிப்பிடப்படுகின்றது. அறபி தெரிந்த ஆனால் பாரசீகம் தெரியாத ஒருவர் ஓரளவு தடுமாற்றமடையலாம். ஆனால் இருமொழிகளும் அருகருகே பயன்படுத்தப்பட்டுவந்த பாரசீகத்தின் ஆன்மீக மதச் சூழல் பற்றிய உணர்வை இது உண்டுபண்ணுவதாக உள்ளது. எவ்வாறிருந்தபோதிலும் மூலத்துக்கு இசைவாகவே இத்தகைய ஆதாரங்கள் தரப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட எழுத்தாளரையும் அவர்படைப்பையும் தெளிவாகக் காட்டுவதற்காக நூல்விவரப் பட்டியலில் அவற்றைச் சீர்ப்படுத்தி போதிய குறிப்பும் தந்துள்ளேன்.

நூல்விவரப் பட்டியலில் அல்லாமா தபாத்தபாயால்

ஆதாரங்காட்டப்பட்டுள்ள நூல்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன. நானாகச் சேர்த்திருக்கக் கூடிய பிரதான அல்லது இரண்டாம் பட்சமான ஆதாரங்கள் எதனையும் சேர்க்கவில்லை. அத்தோடு நூல்விவரப் பட்டியல் ஆசிரியரின் பெயர்ப்படியல்லாமல் நூற்பெயர்ப்படி தரப்பட்டுள்ளது. இஸ்லாமிய வட்டாரங்களில் எப்பொழும் இருந்துவந்துள்ள முறை இது.

இறுதியாக பேராசிரியர் கென்னத் மோர்கனுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இத்திட்டத்தில் அவர்காட்டிய ஆழ்ந்த அக்கறையும் போற்றுதற்குரிய பொறுமையுமே இதனை சாத்தியமாக்கிற்று. பிரசுரத்துக்கான பிரதியாக்கத்தில் பெரிதும் உதவிய திரு. வில்லியம் சிட்டிக் என்பாருக்கும் என் நன்றி உரித்தாகுக.

சையத் ஹுஸைன் நஸ்ர்

தெஹ்ரான்
ரபீயுல் அவ்வல், 1390
மே, 1971

குறிப்புகள்

நூன்முகம்

1. பார்க்கவும் எஃப். ஸ்கூன் எழுதிய லைட் ஆன் த எய்ன்ஷியண்ட் வர்ல்ட்ஸ், மொழிபெயர்ப்பு லார்ட் நோர்த்பர்ன், லண்டன், 1965, விசேடமாக அத் IX ('ரெலிஜியோ பெரெனிஸ்')

2. பார்க்கவும் எஸ்.எச். நஸ்ர் எழுதிய, ஐடியல்ஸ் என்ட் ரியலிட்டீஸ் ஆஃப் இஸ்லாம், லண்டன், 1966, அத் IV 'ஸுன்னிஸம் அன்ட் ஷீஆயிஸம்'

3. வலாயத் சம்பந்தமாகப் பார்க்கவும் எஸ்.எச். நஸ்ர் எழுதிய ஐடியல்ஸ் பக். 161 - 162, மற்றும் எச். கோர்பின் ஷீஆயிஸம் பற்றி எழுதிய கட்டுரைகள். ஷீஆயிஸமே கோர்பினின் பிரதான கட்டுரைப் பொருளாகி வருகின்றது.

4. (அஷ்அரிய) இறையியல் பற்றிய ஆழ்ந்த பகுப்பாய்வுக்கும் விமர்சனத்துக்கும் பார்க்கவும் எஃப். ஸ்கூன் எழுதிய 'டைலெம் மாஸ் ஆஃப் தியோலொஜிக்கல் ஸ்பெக்கியூலெய்ஷன்' ஸ்டடீஸ் இன் கொம்பரட்டிவ் ரெலிஜன், வசந்தம் 1969, பக். 66 - 93

5. பார்க்கவும் எஸ்.எச். நஸ்ர் எழுதிய அன் இன்ட்ரொடக்ஷன் ரு இஸ்லாமிக் கொஸ்மொலொஜிக்கல் டொக்ட்ரின்ஸ் கெய்ம்பிரிட்ஜ் (யு.எஸ்.எ) 1964 முன்னுரை, எஸ்.எச். நஸ்ர் எழுதிய ஸயன்ஸ் அன்ட் ஸிவிலை ஸெய்ஷன் இன் இஸ்லாம் கெய்ம்பிரிட்ஜ் (யு.எஸ்.எ.) 1968 அத். 11

6. இக்கருத்து எஃப். ஸ்கூன் எழுதிய இன்னும் பிரசுரமாகாத கட்டுரையொன்றில் முதலில் உருவாக்கப்ட்டது. இவரது நூலொன்றிலும் இக்கருத்தின் சில அம்சங்கள் காணப்படுன்றன.

7. மொழிபெயர்ப்பில் இதன் சரியான கருத்தை தருவது கடினமாகும்.

8. 'ஷீஆயிஸமும் ஸூஃபிஸமும் வரலாற்றில் அவற்றின் உறவும் சாரமும்' என்ற எமது ஆய்வைப் பார்க்கவும். 'ரேலிஜஸ் ஸ்டடீஸ் அக்டோபர் 1970 பக். 229 - 242 எமது ஸூஃபி எஸ்ஸேஸ் அல்பனி 1972

9. ஷீஆயிஸம் பற்றிப் பல ஆழிய ஆய்வுகள் மேற்கொண்ட எச். கோர்பின் இந்நிலைப்பாட்டை விசேடமாக ஆதரிக்கின்றார்.

10. ஸையித் ஹைதர் அமுலி எழுதிய லா ஃபிலோஸபீ ஷீஐட் (தெஹ்ரான் - பாரிஸ் 1969) என்ற நூலுக்கு எச். கோர்பின் எழுதிய முன்னுரையைப் பார்க்கவும்.

11. இவ்வம்சங்களைக் கணக்கிலெடுத்துக்கொள்ளும் மேலைமொழிகளில் எழுதப்பட்ட ஒரே வரலாற்று நூல் (எஸ்.எச். நஸ்ர், ஓ. யஹ்யா முதலியோருடன் சேர்ந்து) எச். கோர்பின் எழுதிய ஹிஸ்டரி டெ லா ஃபிலோஸபீ இஸ்லாமிக் வால்.1 பாரிஸ் 1964.

12. டி. எம். மத்தெஸன் மொழிபெயர்த்த எஃப். ஸ்கூன் எழுதிய அன்டர்ஸ்டேன்டிங் இஸ்லாம் (லண்டன் 1963) என்ற நூலில் இப்பிரச்சினை மிகத் தெளிவாக ஆராயப்பட்டுள்ளது.

13. பார்க்கவும் ஜே.என். ஹொலிஸ்டர் எழுதிய த ஷீஆ ஆஃப் இந்தியா (லண்டன் 1953) ஏ.ஏ.ஏ. ஃபைஸி எழுதிய அவ்ட்லைன் ஆஃப் முஹம்மடன் லா (லண்டன் 1887 என்.பி. பெய்லி எழுதிய எ டைஜஸ்ட் ஆஃப் முஹம்மடன் லா (லண்டன் 1887) ஈராக்கிலும் ஸுன்னி ஷீஆ கலந்த மக்கள் தொகையை பிரிட்டிஷார் எதிர்கொள்ள நேர்ந்தபோதும் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் அது சிறியவொரு நாடாகவிருந்தபடியால் இந்தியாவில் போல் இங்கு ஷீஆ ஆதாரங்கள் பற்றிய புலமைக் கரிசனை காட்டப்படவில்லை.

14. டி.எம். டொனாட்ஸன் எழுதிய த ஷீஆயிட் ரெலிஜன் (லண்டன் 1933 என்ற நூலையே நாம் விசேடமாகக் கருத்தில் கொண்டுள்ளோம். மேல்நாட்டுப்பல்கலைக்கழகங்களில் இதுவரை இந்நூலே தரம் வாய்ந்த படைப்பாகக் காணப்படுகிறது. இந்திய ஷீஆக்கள் பற்றிய அநேக நூல்களும் இஸ்லாத்தின் மீது துவேஷம் கொண்ட மிஷனரிகளாலேயே எழுதப்பட்டன.

15. பன்னிரு இமாம் ஷீஆயிஸம் சம்பந்தமாகப் பல ஆய்வுகளை கோர்பின் வெளியிட்டுள்ளார். ஷீஆயிஸம் பற்றிய கோர்பினின் எழுத்துக்கள் வெளிவரவிருக்கும் "என் இஸ்லாம் ஈரானியன்" என்ற நூலில் இடம்பெற்றுள்ளன.

16. "அல்லாமா" என்பது கௌரவமான அறபுச் சொல். பாரசீக மற்றும் இஸ்லாமிய மொழிகளில் 'அறிஞர்' என்ற பொருளில் எடுத்தாளப்படுகின்றது.

17. ஸுன்னியிஸத்துக்கும் ஷீஆயிஸத்துக்குமிடையிலான உறவுபற்றி என் சொந்தக் கண்ணோட்டத்தை அறிந்துகொள்ளப் பார்க்கவும் ஐடியல்ஸ் அன்ட் ரியலிட்டீஸ் ஆஃப் இஸ்லாம். அத் VI.

18. கீழைத்தேய ஆய்வுத்துறைக்கும் மேலைத்தேய ஆய்வுத்துறைக்குமிடையிலான வித்தியாசம் பற்றிய முக்கிய பிரச்சினை குறித்துப் பார்க்கவும். எஃப்' ஸ்கூனின் 'லா டயலக்டிக் ஓரியன்டேல் எட்ஸன்' என் ரசைன் மண்ட் டன்ஸ்லா ஃபொய் லாஜிக் எட் டிரான்ஸென்டன்ஸ் பாரிஸ் 1970 பக். 129 - 169

19. அல்லாமா தபாத்தபாயி பற்றிப் பாரசீக மொழியில் அவரது தலைசிறந்த மாணவர்களில் ஒருவரான ஸையித் ஜலால் அல் தீன் அஷ்தியானி எழுதிய வாழ்க்கைக் குறிப்பு மஆரிப் இ இஸ்லாமி வால்.V 1347 அல்ஹிஜ்ரா சூரிய வருடம் பக். 48 - 50ல் இடம் பெற்றுள்ளது.

20. ரிஸா ஷா வின் ஆட்சியிலிருந்து பாரசீகர்கள் முன்பைவிடவும் அதிகமாக சந்திரவருடக் கலண்டருடன் சூரிய வருட ஹிஜ்ரா கலண்டரையும் உபயோகித்து வருகின்றனர். சூரிய வருட ஹிஜ்ரா கலண்டர் அன்றாடச்சிவில் காரியங்களுக்காகவும் சந்திரக் கலண்டர் மதகாரியங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. இந்நூலில் வேறுவகையில் குறிக்கப்படாத பட்சத்தில் இஸ்லாமியத் திகதிகள் சந்திரக் கணக்குப்படியே தரப்பட்டுள்ளன.

21. அல்லாமா தபாத்தபாயின் பெயரிலுள்ள ஸையித் என்ற பட்டமே அவர் திருநபியின் சந்ததியில் வந்தவர் என்பதைக் குறிக்கின்றது. பாரசீகத்தில் ‘ஸையித்’ என்ற சொல் பிரத்தியேகமாய் இக்கருத்திலேயே வழங்கப்படுகின்றது. ஆனால் அறபு நாடுகளில் ‘திரு’ அல்லது ‘ஸ்ரீமான்’ என்ற கருத்திலேயே இச்சொல் வழக்கமாக உபயோகிக்கப்படுகின்றது.

22. இவர்கள் பற்றிப் பார்க்கவும் எஸ்.எச். நஸ்ர் எழுதிய ‘த ஸ்கூல்ஆஃப் இஸ்ஃபஹான் எம் எம். ஸரிஃபின் (பதிப்பாசிரியர்) ‘எ ஹிஸ்டரி ஆஃப் முஸ்லிம் ஃபிலோஸபி வால். || ல் 1996 ‘ஸத்ர் அல் தீன் ஷிராஸி’ ‘ஸப்ஸிவாரி’

23. அல்லாமா தபாத்தபாயி எழுதிய நூல்களின் முழு விப ரங்களுக்கு நூல் விவரப்பட்டியலைப் பார்க்கவும்.

முன்னுரை

ஷீஆ இஸம்[1] என நாம் தலைப்பிட்டுள்ள இந்நூல் ஸுன்னியிஸம், ஷீஆயிஸம் ஆகிய இஸ்லாத்தின் இரு பிரதான கிளைகளில் ஷீஆயிஸம் பற்றித் தெளிவுபடுத்த முயல்கின்றது. ஷீஆயிஸத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் மதசிந்தனை, ஷீஆ கண்ணோட்டத்தில் இஸ்லாமிய அறிவுத்துறைகளும் கலாசாரமும் முதலியவை பற்றி இந்நூல் விவரிக்கின்றது.

மதம் (தீன்)[2] இஸ்லாம் ஷீயாயிஸம் என்பவற்றின் அர்த்தம்

மதம்: மனித இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் சகமனிதர்களின்பால் ஈர்க்கப்படுகிறான் என்பதிலும் அவனது சமூக வாழ்க்கை சகமனிதர்களின் வாழ்வுடன் தொடர்பு கொண்டதாகவும் பின்னிப் பிணைந்ததாகவும் உள்ளதென்பதிலும் ஐயமில்லை. அதேவேளை அவன் உண்பது, குடிப்பது, உறங்குவது, விழித்திருப்பது, பேசுவது, செவிமடுப்பது, அமர்வது, நடப்பது அவனது சமூகத் தொடர்புகள், சந்திப்புகள் யாவும் பாரம்பரியமாய் புறவயமாய் தனித்தன்மைமிக்கதாய் தவிர்க்க முடியாதவாறு ஒன்றோடொன்று தொடர்புடையதாய் உள்ளன. இச்செயல்களைக் கண்ட இடத்தில் கன்னாபின்னாவென அவன் புரிவதில்லை. கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஓர் ஒழுங்குமுறை காணப்படுகின்றது.

எனவே மனிதனது வாழ்க்கைப் பயணத்தில் அவனது செயல்களை ஆளும் முறைமையொன்று காணப்படுகின்றது. இம்முறைமைக் கெதிராக அவனது செயல்கள் கலகம் புரிய முடியாது. யதார்த்தத்தில் இச்செயல்கள் யாவும் தனித்தவொரு ஆதாரத்திலிருந்து உற்பவிப்பவை. ஈடேற்றமான இன்ப வாழ்வில் அவனுக்குள்ள நாட்டமே இவ்வாதாரமாகும். நாடுகின்ற இலட்சியத்தை முடிந்தளவு எட்டிப் பிடிக்கக்கூடிய வாழ்வை அவன் விரும்புகிறான். வேறுவகையில் சொல்வதாயின் மனிதன் தன் வாழ்வைத் தொடர்வதற்கான தேவைகளை மிகவும் பூரணமான வழியில் நிவர்த்திசெய்துகொள்ள விழைகிறான் எனலாம்.

மனிதன் தன்செயல்களைத் தானே வகுத்துக்கொண்ட அல்லது பிறரிடமிருந்து பெற்றுக்கொண்ட சட்டதிட்டங்களுக்கு உட்படுத்துவதற்கும், நிலவுகின்ற சாத்தியப்பாடுகள் அனைத்தி லிருந்தும் தனக்கென ஒரு வழியைத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்கும் இதுவே காரணம். ஜீவனோபாயத்துக்காக வேண்டி அவன் உழைப்பதுடன் அவனது நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டிய சட்டதிட்டங்களால் நெறிப்படுத்தப்படல் வேண்டுமென அவன் எதிர்பார்க்கின்றான். சுவையுணர்வைத் திருப்திப்படுத்தவும் பசி தாகம் தீர்க்கவும் அவன் உண்ணவும் குடிக்கவும் செய்கிறான். உண்பதும் குடிப்பதும் அவனது இன்ப வாழ்வுக்கு அவசியமென அவன் கருதுகிறான். மற்றும் பல சந்தர்ப்பங்களில் இவ்விதி பெருக்கப்பட முடியும்.

மனித வாழ்வை ஆளும் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்வது, உலக வாழ்வின் தன்மை குறித்து மனிதன் கொண்டுள்ள நம்பிக்கையிலும், தானும் ஓர் அங்கமாக விளங்கும் பிரபஞ்ச இருப்பு பற்றிய மனிதனின் கணிப்பிலும் தங்கியுள்ளது. மனிதனின் செயல்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் கொள்கைகள் தனது முழுமையான இருப்பு பற்றிய அவனது எண்ணக்கருவிலேயே தங்கியுள்ளனவென்பது உலகம் பற்றியும் மனிதனைப் பற்றியும் மக்கள் கொண்டுள்ள பல்வேறு கருத்துக்கள் மீது சற்று சிந்தனை செலுத்தினால் புலனாகிவிடும்.

இப்பிரபஞ்சம் முற்றிலும் சடத்தன்மை வாய்ந்தது. புலனுணர்வின்பாற்பட்டது. மனிதனும் வெறும் ஜடம்தான். மரணத்தறுவாயில் உயிர் அவனை விட்டுப் பிரிவதுடன் அவன் அழிந்துபோகக் கூடியவன் எனக் கருதுவோர் அதற்கேற்ப லௌகீக ஆசைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும் நிலையற்ற உலக இன்பங்களில் மூழ்கித் திளைக்கும் வகையில் திட்டம் வகுத்து அதற்கேற்ற வாழ்க்கைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். அவர்கள் இவ்வழியிலேயே முற்று முழுதாய் முயன்று இயற்கை நிலைமைகளையும் வாழ்க்கையின் அம்சங்களையும் தம் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்வதற்கு எத்தனிக்கின்றனர்.

அதேபோன்று உருவ வழிபாட்டினர் மத்தியிலுள்ள சாதாரண மக்களைப் போல் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வம் இவ்வுலகை மனிதனுக்காகப் படைத்துள்ளதென்றும் அதனது அருளிலிருந்து மனிதன் பயனடையும் வகையில் அளப்பரிய

செல்வங்களை வழங்கியுள்ளதென்றும் நம்புவோர் உளர். அத்தகைய மனிதர்கள் தெய்வத்தின் அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தெய்வத்தின் கோபத்திலிருந்து தப்பிக்கொள்ளும் வகையில் தம்வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்கின்றனர். தெய்வத்தைத் திருப்திப்படுத்தினால் அது தன் அளவற்ற அருட்கொடைகளை வழங்குமென்றும் அதன் கோபத்தை சம்பாதித்துக் கொண்டால் அவ்வருட்கொடைகளை அவர்களிடமிருந்து திருப்பியெடுத்துக் கொள்ளுமென்றும் அவர்கள் நம்புகின்றனர்.

மறுபுறம் ஜொராஸ்திரியர், யூதர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் போன்ற மக்கள் இவ்வாழ்வில் ''உயர் வழி''யைப் பின்பற்று கின்றனர். இவர்கள் இறைவனிலும் மனிதனின் நித்திய வாழ்விலும் நம்பிக்கை வைத்துள்ளதோடு தனது நற்செயல் தீயசெயல் யாவுக்கும் மனிதனே பொறுப்பு எனவும் கருதுகின்றனர். இதன் விளைவாக இறுதித்தீர்ப்பு நாள் (கியாமத்) ஒன்று இருப்பது உண்மையென ஏற்று இம்மை மறுமை யிரண்டிலும் ஈடேற்றம் தரவல்ல வழியை இவர்கள் பின்பற்றுகின்றனர்.

மனிதனும் இப்பிரபஞ்சமும் சம்பந்தமான அடிப்படை நம்பிக்கைகள், இவற்றுக்கு இசைவாக மனித வாழ்வில் பிரயோகிக்கப்படும் சட்டதிட்டங்கள் முதலியவற்றின் கூட்டுமொத்தமே மதம் (தீன்) எனப்படும். இவ்வடிப்படையில் நம்பிக்கைகள் சட்டதிட்டங்கள் முதலியவற்றில் ஏற்படும் பிரிவுகளையே நாம் சிந்தனைப் பிரிவுகள் என்கிறோம். இஸ்லாத்தில் காணப்படும் சுன்னி, ஷீஆ சிந்தனைப் பிரிவுகள் கிறிஸ்தவத்தில் காணப்படும் நெஸ்டோரியன் பிரிவு முதலியன இத்தகையனவே. மதம் என்பது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஓர் வாழ்க்கைத்திட்டம் என்பதை நாம் ஏற்றுக் கொண்டால் மனிதன் இறைநம்பிக்கை இல்லாதிருப்பினும் கூட மதமின்றி அவனால் வாழமுடியாதெனக் கூற முடியும். மதம் வாழ்க்கையிலிருந்து பிரிக்கப்பட முடியாதவொன்று. அது வெறும் சடங்கு பாரம்பரியமட்டுமன்று.

மனிதன் இறைவனையடைவதற்காக அவன் முன்னால் இறைவன் வைத்துள்ள பாதையே மதம் என்றும் அதனைப் பின்பற்றுவதல்லால் மனிதனுக்கு வேறு வழியில்லை என்றும் புனிதத் திருமறை

உறுதிப்படுத்துகின்றது. எவ்வாறிருந்தபோதிலும் சத்திய (இஸ்லாம்) மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்கள் நேர்மையுடன் இறைவனின் பாதையில் நடக்கின்றனர். சத்திய மார்க்கத்தையேற்றுக் கொள்ளாதவர்கள் இறைவனின் பாதையிலிருந்து விலகிய வழிகேடர்களாவர்[4].

இஸ்லாம் என்ற சொல் சரணடைதலை, கீழ்ப்படிவதைக் குறிக்கும். இவ்விலட்சியம் நோக்கி மனிதனுக்கு அழைப்பு விடுக்கும் மார்க்கத்தை அல்குர்ஆன் ''இஸ்லாம்'' என்கிறது. இதன் பொதுவான நோக்கம் பிரபஞ்சத்தின் மீதும் மனிதன் மீதும் ஆட்சிபுரியும் சட்டங்களுக்கு மனிதன் சரணடைவதும் அதன் மூலம் ஏக இறைவனை மட்டுமே வணங்குவதும் அவனது கட்டளைகளுக்கு மட்டுமே கீழ்ப்படிவதுமாகும்[5]. திருமறை எமக்கறிவிப்பது போல் இம்மதத்தை ''இஸ்லாம்'' என்றும் இதனைப் பின்பற்றியவர்களை ''முஸ்லிம்கள்'' என்றும் அழைத்த முதல் மனிதர் நபி இப்ராஹீம் (அலை) ஆவார்கள்[6].

கட்சிக்காரர், பின்பற்றுபவர் என பொருள்படும் **ஷீஆ** என்றால் திருநபி (ஸல்) அவர்களின் வாரிசாக வரக்கூடிய விசேட உரிமை நபி குடும்பத்தினரைச் சார்ந்ததெனக் கருதி இஸ்லாமிய அறிவியல்கள் கலாசாரம் முதலிய துறைகளில் அஹ்லுல் பைத்தின (நபி குடும்பத்தின)ரைப் பின்பற்றுவோரைக் குறிக்கின்றது.

குறிப்புகள்

முன்னுரை

1. பதிப்பாசிரியர் குறிப்பு: அல்லாமா தபத்தபாயி இந்நூலுக்கு வழங்கியுள்ள பெயர் **ஷீஆ தர் இஸ்லாம்** (SHI'AH DAR ISLAM) (இஸ்லாத்தில் ஷீஆயிஸம்). ஷீஆ கண்ணோட்டத்தில் இஸ்லாத்தையும் அதன் விளக்கத்தையும் இத்தலைப்பு மூலம் நூலாசிரியர் கருதுவதால் **ஷீஆ இஸ்லாம்** என்ற தலைப்பை நாம் தெரிந்தெடுத்தோம்.

2. பதிப்பாசிரியர் குறிப்பு: தீன் என்ற சொல்லை நாம் மதம் என மொழிபெயர்த்துள்ளபோதிலும் இன்று மதம் என்பதற்கு வழக்கமாக வழங்கப்படுவதை விடவும் ''தீன்'' அர்த்தவியாபகம் கொண்டதாகும். இப்பூமியின் மீதும் இவ்வுலகுக்கப்பாலும் மேற்கொள்ளும் பயணத்தில் மனிதன் சம்பந்தமான அவனது வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் பிரயோகிக்கத்தக்க புலன்களைக் கடந்த கொள்கைகளின் தொகுதியே தீன். மேற்குலகில் எஃப். ஸ்கூன் (F. SCHUON), ஆர். குவேனன் (R. GUENON), எ.கே. குமாரஸ்வாமி (A.K. COOMARASWAMY) போன்ற பாரம்பரிய நூலாசிரியர்கள் புரிந்துகொண்டுள்ள படி இதனைப் பாரம்பரியம் என மொழிபெயர்க்கலாம்.

3. பதிப்பாசிரியர் குறிப்பு: மத அதிகாரம் வாய்ந்த முஸ்லிம் அறிஞர் என்ற முறையில் நூலாசிரியர் இஸ்லாத்தை, குர்ஆனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள வேதத்தின் அகிலத்தன்மையை, எவ்வகையிலும் மறுதலிக்காமல் சத்தியமார்க்கம் என அடைப்புக்குறியிட்டழைக்கின்றார். முஸ்லிமைப் பொருத்தவரை மிகச் சிறந்த **சத்தியமார்க்கம்** இயற்கையாகவே இஸ்லாமாகும். இந்நூலிலும் தமது மற்றுஞ்சில நூல்களிலும் நூலாசிரியர் குறிப்பிடுகின்ற மற்றுஞ்சில மதங்களின் உண்மையைக் காணவொட்டாமல் இம்மதநம்பிக்கை முஸ்லிமைத் தடுப்பதில்லை. பார்க்கவும். எஸ்.எச். நஸ்ர் (S.H. NASR) எழுதிய ''இஸ்லாமும் மதங்களின் சந்திப்பும்'' 'தி இஸ்லாமிக் குவார்ட்டலி' வல். X இல 3 & 4 ஜூலை & டிஸம்பர் 1966 பக். 47 – 68.

4. ''... நிச்சயமாக அல்லாஹ்வுடைய சாபம் அக்கிரமக்காரர்கள் மீது உண்டாவதாக! அவர்கள் அல்லாஹ்வின் பாதையைத் தடுத்து அதனைக் கோணலாக்க விரும்பினார்கள்...'' (குர்ஆன் 7: 44 – 45)

5. எவன் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்டு நன்மையும் செய்து இப்ராஹீமுடைய நேரான மார்க்கத்தையும் பின்பற்றுகின்றானோ அவனைவிடச் சிறந்த மார்க்கத்தையுடையவன் யார்?. . . (குர்ஆன் 4: 125)

''கூறுவீராக எங்களுக்கும் உங்களுக்குமிடையில் ஓர் உடன்பாட்டுக்கு வாருங்கள்! (அதாவது) 'நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கோம். நாம் அவனுக்கு யாதொன்றையும் இணையாக்கமாட்டோம். நம்மில் எவரும்

அல்லாஹ்வையன்றி எவரையும் ஆண்டவனாக எடுத்துக் கொள்ளமாட்டோம்' (என்று) அவர்கள் (இதனைப்) புறக்கணித்தால் 'நிச்சயமாக நாங்கள் (அவன் ஒருவனுக்கே முற்றிலும் வழிப்பட்ட முஸ்லிம்கள் என்று நீங்கள் சாட்சியங் கூறுவீர்களாக! 'என்று நீங்கள் கூறிவிடுங்கள்'' (குர்ஆன் 3:64) ''விசுவாசிகளே! நீங்கள் இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்துவிடுங்கள்...''(குர்ஆன் 2 :208)

6. ''எங்கள் இறைவனே! எங்களை முஸ்லிம்களாகவும் எங்களுடைய சந்ததியிலிருந்தும் ஒரு கூட்டத்தை முஸ்லிம்களாகவும் ஆக்கிவைப்பாயாக...'' (குர்ஆன் 2:128) ''. . . உங்கள் பிதாவாகிய இப்ராஹீமின் மார்க்கம் (உங்களுடைய மார்க்கமாகும்) அவர்தான் உங்களுக்கு 'முஸ்லிம்'என்று பெயரிட்டவர். . .''(குர்ஆன் 22 :78)

7. பதிப்பாசிரியர் குறிப்பு: இஸ்லாமிய மொழிகள் அனைத்திலும் நபியொருவரின் பெயர்வரும் போதும் ஷீஆயிஸத்தைப் பொருத்தவரை இமாம்களின் பெயரும் வரும்போது ''அலைஹி வஸ்ஸலாம்'' (அவர்மீது சாந்தி உண்டாவதாக) என்றும் திருநபியின் பெயர் வரும்போது ''ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்'' (அல்லாஹ்வின் சாந்தியும் ஆசியும் அவர்மீது உண்டாவதாக) என்றும் கூறப்படும்.

8. அலீ (அலை)க்கு முந்திய இருகலீபாக்களை ஏற்றுக் கொண்டு அபூஹனிஃபாவின் சட்டக்கலையைப் பின்பற்றும் ஸைதிகளின் ஒரு குழுவினரும் ஷீஆக்களென்றே அழைக்கப்படுகின்றனர். ஏனெனில் உமையாக்களுக்கும் அப்பாஸியாக்களுக்கும் நேர்மாற்றமாக பிந்திய கிலாபத் அலீக்கும் அவருடைய சந்ததியினருக்குமே சொந்தமென அவர்கள் கருதுகின்றனர்.

பகுதி 1

ஷீயா இஸத்தின் வரலாற்றுப் பின்னணி

அத்தியாயம் I

ஷீயா இஸத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

நபிகளாரின் வாழ்நாளிலேயே, நபி குடும்பத்தை (அஹ்லுல் பைத்)ச் சேர்ந்த முதல் தலைவரான அலீயின் கட்சியினரை (ஷீஆ - இ - அலீ) ப் பற்றி முதன் முதலாகப் பிரஸ்தாபிக்கப்பட்டபோது ஷீஆயிஸம் தோன்றிவிட்டது[1]. நபித்துவத்தின் இருபத்து மூன்றாண்டுகளின்போது இஸ்லாத்தின் முதல் தொழிற்பாடும் அதன் பின்னைய வளர்ச்சியும் நபித்தோழர்கள் மத்தியில் ஷீஆக்கள் போன்ற ஒரு குழுதோன்றுவதன் தேவைக்கான பல நிலைமைகளை உருவாக்கின.

புனித நபி (ஸல்) தம் நபித்துவத்தின் ஆரம்ப நாட்களில் இறைவசனத்தின் படி தமது நெருங்கிய உறவினர்களைத் தம்மார்க்கத்தின்பால் அழைக்குமாறு கட்டளையிடப்பட்டபோது[2] தம் அழைப்பை முதன்முதலாக ஏற்றுக்கொள்பவரே தமக்கு வாரிசாகவும் பிரதிநிதியாகவும் ஆவார் எனத் தெட்டத் தெளிவாய் அறிவித்தார்கள். அலீ (அலை) முதலில் முன்வந்து இஸ்லாத்தைத் தழுவினார். நபி (ஸல்) அதனை அங்கீகரித்ததோடு தம்வாக்குறுதியையும் அவ்வாறு நிறைவேற்றினார்கள்[3].

ஓர் இயக்கத்தின் தலைவர் தமது செயற்பாட்டின் ஆரம்ப நாட்களில் தம்மைச் சார்ந்த ஒருவரை தமது வாரிசும்

பிரதிநிதியுமாக தமக்கு மிகவும் விசுவாசமான பக்தியுள்ள உதவியாளர்களுக்கும் தோழர்களுக்கும் அறிமுகப்படுத்தாமல் அந்நியர்களுக்கு அறிமுகப்படுத்தியிருப்பார் என்பதும் அத்தகையதொரு தலைவர் தமது பிரதிநிதியாகவும் வாரிசாகவும் ஒருவரை ஏற்றுக்கொண்டு அவரைப் பிறருக்கு அறிமுகஞ் செய்துவிட்டு அதன் பின் அவர் தமது வாழ்நாள் பரியந்தம் மதப்பிரசாரத்தின்போது அப்பிரதிநிதி ஒரு பிரிதிநிதிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதை மறுத்திருப்பார் என்பதும் அவருக்கும் பிறருக்குமிடையே தர வித்தியாசம் காட்டியிருக்கமாட்டார் என்பதும் நடந்திருக்கக்கூடியதல்ல என்பதே ஷீஆக்களின் அபிப்பிராயம்.

நபி (ஸல்) அவர்கள், சுன்னத் ஜமாஅத்தினதும் ஷீஆக்களதும் சந்தேகங்கிளப்பப்படாத முற்றிலும் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் மூலம் அலீ (அலை) சொல்லாலும் செயலாலும் தவறிழைப்பதிலிருந்தும் பாவம் புரிவதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர் என தெளிவுபடுத்தியுள்ளார்கள். அவரது சொல், செயல் யாவும் மதபோதனை களுக்கு முற்றிலும் இசைவானவையாய்[4] இருந்தன. இஸ்லாமிய அறிவியல் நீதித்துறை சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மனிதர்கள் யாவரையும்விட அறிவுமிக்கவராய் அவர் விளங்கினார்[5].

நபித்துவத்தின் காலகட்டத்தில் அலீ (அலை) அளப்பரிய சேவையாற்றினார். அருந்தியாகங்கள் புரிந்தார். மக்கத்துக் காபிர்கள் பெருமானாரைக் கொலை செய்யத் தீர்மானித்து அன்னாரின் வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டபோது பெருமானர் (ஸல்) மதினாவுக்குப் புலம் பெயரத்தீர்மானித்தார்கள். ''நீர் எனது படுக்கையில் படுத்துக் கொள்கிறீரா?... அப்பொழுது அவர்கள் நான் நித்திரை புரிவதாக நினைத்துக்கொள்வார்கள். அவர்களால் பின்தொடரப்படுவதிலிருந்து நான் பாதுகாப்படைவேன்'' என பெருமானர் (ஸல்) அலீயிடம்கூற அலீ (அலை) ஆபத்தான அக் காரியத்தை மனமுவர்ந்தேற்றுக் கொண்டார். வெவ்வேறு வரலாறுகளிலும் ஹதீஸ் தொகுதிகளிலும் இச்சம்பவம் விவரிக்கப்பட்டுள்ளது. (மக்காவிலிருந்து மதினாவுக்குப் புலம்பெயர்விலிருந்தே இஸ்லாமியக் காலண்டர் ஆரம்பமாகிறது. இதுவே ஹிஜ்ரா என்றறியப்படும்) பத்று, உஹத், கைபர், கந்தக், ஹுனைன் யுத்தங்களில் அலீ (அலை) கலந்து கொண்டார். இவ்யுத்தங்களின் வெற்றிக்கு அலீ (அலை) ஆற்றிய உதவி

எத்தகையதெனில் வழக்கமாக வரலாறுகளிலும் நபிகளாரின் வாழ்க்கைச் சரிதைகளிலும் ஹதீஸ் தொகுதிகளிலும் விவரிக்கப்படுவது போன்று இந்த யுத்தங்களில் அலீ (அலை) கலந்து கொள்ளாதிருந்தால் இஸ்லாமும் முஸ்லிம்களும் எதிரியால் பெரும்பாலும் துவம்சம் செய்யப்பட்டிருக்கக்கூடும்.

ஷீஆக்களைப் பொருத்தமட்டில் அலீ (அலை) நபிகளாரின் வாரிசாவதற்கான நியாயபூர்வ உரிமைக்குப் பிரதான அத்தாட்சி 'கதீர்கும்' [6] சம்பவமாகும். அச்சம்பவம் நபிகள் (ஸல்) அலீயை மக்களின் ''பொதுப்பாதுகாவலுக்கு'' (வலாயத்தி ஆம்மாஹ்)த் தெரிந்தெடுத்ததோடு தம்மைப்போன்று அலீயையும் அவர்களின் பாதுகாவலராக (வலி) ஆக்கினார்கள் [7].

இத்தகைய சிறப்பான சேவைகளும் மதிப்பும் காரணமாக, அலீயின் விசேட பண்பு நலன்கள் அனைவராலும் பாராட்டப்பட்டதன் காரணமாக,[8] அலீ மீது நபிகளார் காட்டிய பேரன்பு காரணமாக[9] அலீயை நன்கறிந்த நபித்தோழர்கள் சிலர் அவரைப் பெரிதும் நேசிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் எந்தளவுக்கு அலீயைச் சூழ்ந்து கொள்ளவும் பின்பற்றவும் தொடங்கினார்களென்றால் அவர்கள் அலீமீது காட்டிய அன்பை மற்றும் அநேகர் அளவுக்கதிகம் எனக்கருதியது மட்டுமல்லாமல் ஒரு சிலர் அவர் மீது பொறாமை கொள்ளவும் தொடங்கினர். இவையாவும் ஒரு புறத்திருக்க அநேக நபிமொழிகளில் ''அலீயின் ஷீஆ'', ''நபி குடும்பத்தினரின் ஷீஆ'' [10] என்ற குறிப்புகளை நாம் காண்கிறோம்.

ஸுன்னத் ஜமாஅத் பெரும்பான்மையிலிருந்து ஷீஆ சிறுபான்மை பிரிந்ததற்கான காரணம்

அலீயின் நண்பர்களும் அவரைப் பின்பற்றியோரும் நபியின் மறைவுக்குப்பின் கிலாபத்தும் மத அதிகாரமும் (மர்ஜாயியத் - இ - இல்மி) அலீயைச் சேரும் என நம்பினர். நபிகளாருடனும் நபித்தோழர்கள் மத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடனும் பொதுவாக முஸ்லிம்களுடனும் அலீ (அலை)க்கிருந்த தொடர்பினால் அவர் வகித்த அரிய ஸ்தானத்தின் மீதுண்டான கரிசனையிலிருந்து பிறந்ததே அவர்களது இந்நம்பிக்கை. நபிகளார் இறுதிச் சுகவீனமுற்றிருந்த நாட்களின்போது நிகழ்ந்த சில சம்பவங்கள் மட்டுமே அவர்களது இவ்வபிப்பிராயத்துக்கு

எதிர்ப்புண்டு என்பதைச் சுட்டிக்காட்டின[11]. அவர்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாற்றமாக பெருமானார் (ஸல்) காலமாகி அவர்களது சடலம் இன்னும் அடக்கஞ் செய்யப்படாமலிருக்கும் போதே நபிகளாரின் குடும்பத்தினரும் சில நபித்தோழர்களும் ஜனாஸா நல்லடக்கத்துக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் தம் தலைவரது திடீர் மறைவை எதிர்கொள்ள நேர்ந்த சமூகம் குழுமியிருந்த மஸ்ஜிதை நாடிச் சென்ற இன்னொரு கோஷ்டியின் நடவடிக்கைகள் குறித்து அலீயின் நண்பர்களுக்கு செய்தி கிடைக்கின்றது. பின்னர் பெரும்பான்மையாக மாறிய இக்கோஷ்டி சமூகத்தின் சேமநலனை உறுதிப்படுத்துவதற்காகவும் அதன் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் வேண்டி முஸ்லிம்களுக்கு ஒரு கலீபாவைத் தெரிவு செய்வதற்கு அவசரப்பட்டு விரைந்தது. ஜனாஸா நல்லடக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபிகுடும்பத்தினரையோ உறவினர் களையோ அநேக நண்பர்களையோ ஆலோசிக்காமல் அவர்களுக்கு குறைந்த பட்ச அறிவிப்பேனும் வழங்காமல் அக்கோஷ்டியினர் இதைச் செய்தனர். இவ்வாறு ஏலவே நடந்து முடிந்த ஒன்றாக [12] அலீ (அலை)க்கும் அவரது தோழர்களுக்கும் இது அறிவிக்கப்படுகிறது.

கலீபா தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிபற்றி அலீ (அலை)யும் அவரது நண்பர்களான அப்பாஸ், ஸுபைர், ஸல்மான், அபூதர், மிக்தாத், அம்மார் போன்றோரும் நபிகளாரின் ஜனாஸா நல்லடக்கத்தின்பின் அறிய வருகின்றனர். ஆலோசனை அல்லது தெரிவு மூலமாக கலீபாவைத் தேர்ந்தெடுக்கும் செயலுக் கெதிராகவும் அதனை நடைமுறைப்படுத்தியவர்களுக்கெதிராகவும் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். தங்களது அத்தாட்சிகளையும் வாதங்களையும் கூட அவர்கள் முன் வைத்தனர். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த பதில் முஸ்லிம்களின் சேமநலன் ஆபத்தான நிலையில் உள்ளதாகையால் செய்து முடிக்கப்பட்ட காரியத்தில்தான் இதற்குத் தீர்வு உண்டு என்பதாகும் [13].

இவ்வெதிர்ப்பும் விமர்சனமுமே பெரும்பான்மையினரிட மிருந்து அலீ (அலை)யைப் பின்பற்றிய சிறுபான்மையினரைப் பிரித்ததோடு அலீயைப் பின்பற்றியவர்களை அலீயின் ''கட்சிக்காரர்கள்'' அல்லது ''ஷீஆ'' என்று சமூகத்துக்கு அறியப்படுத்தியது.

ஷீஆ சிறுபான்மையினருக்கு அப்பெயர் வழங்கப் படுவதனையும் அதனால் முஸ்லிம் சமூகம் பெரும்பான்மை, சிறுபான்மை எனப் பிரிவுபடுவதனையும் தடுப்பதற்கு அப்போதைய கிலாபத் கவலை கொண்டது. கலீபாவின் ஆதரவாளர்கள் கிலாபத் சமூகத்தின் ஏகோபித்த அபிப்பிராயம் (இஜ்மா) சம்பந்தப்பட்ட விவகாரமெனக் கருதினர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோரை ''அரசுக்கு விசுவாசமாயிருப்பதை எதிர்ப்போர்'' என்றனர். எனவே ஷீஆக்கள் முஸ்லிம் சமூகத்துக்கு விரோதமானவர்கள் என வாதித்தனர். சிலவேளைகளில் ஷீஆக்களுக்கு வேறு இழிவான பெயர்களும் சூட்டப்பட்டன.

அந்நாளைய அரசியல் நிலைமை காரணமாக ஷீஆயிஸம் ஆரம்ப கணத்திலிருந்தே கண்டிக்கப்பட்டது. எனவே வெறும் அரசியல் எதிர்ப்பால் மட்டும் எதனையும் சாதித்துவிட அதனால் முடியவில்லை. இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் நலனைப் பாதுகாப்பதற்காக வேண்டியும் போதுமான அரசியல் இராணுவ பலம் இல்லாமை காரணமாகவும் அலீ (அலை) அப்போது நிலவிய அரசியல் முறைமைக்கெதிராகக் கிளர்ச்சி செய்ய முனையவில்லை. அப்படி முனைந்திருந்தால் அது இரத்தக் களரியில் முடிந்திருக்கும். எனினும் நிறுவப்பட்ட கிலாபத்துக்கு எதிர்ப்புக் காட்டியோர் மதவிசுவாசம் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளில் பெரும்பான்மையினருக்குப் பணிந்துபோக மறுத்தனர். நபிகளாருக்குப் பின் அரசியல் தலைமையும் மத அதிகாரமும் உரிமைப் பிரகாரம் அலீ (அலை)க்கே சொந்தமானது என அவர்கள் தொடர்ந்தும் கூறி வந்தனர் [15]. ஆன்மீக மத விவகாரங்களில் அலீ (அலை) யிடமே அறிவுரை பெற வேண்டுமென அவர்கள் நம்பியதோடு அலீ (ரலி)யைப் பின்பற்றும்படி மக்களுக்கு அழைப்பு விடுத்தனர் [16].

தலைமையும் மத அதிகாரமும் பற்றிய இரு பிரச்சினைகள்

ஷீஆயிஸத்தின் அடிப்படையாக அமைந்த இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப அதன் கண்ணோட்டப்படி இஸ்லாமிய போதனைகளுக்கும் மத அறிவின் கோட்பாடுகளுக்கும் தெளிவான விளக்கமளித்தல் இஸ்லாத்தை எதிர்நோக்கிய மிக முக்கிய பிரச்சினையென ஷீஆயிஸம் நம்பியது [17]. தெளிவான விளக்கம் வழங்கப்பட்ட பிறகுதான் இப்போதனைகளைச் சமூக அமைப்பில் பிரயோகிப்பது பற்றி அக்கறை செலுத்தலாம்.

எல்லாவற்றுக்கும் முதலாவதாக உலகமும் மனிதர்களும் பற்றிய பார்வை யதார்த்தப்படி பெறப்படல் வேண்டும் என ஷீஆயிஸம் நம்பியது. அப்போதுதான் இம்மதக் கடமைகளை நிறைவேற்றுவது மன இச்சைக்கு விரோதமானதாயிருப்பினும் கூட நல்வாழ்வுக்கு ஆதாரமான அக்கடமைகளை அறிந்து அவர்கள் நிறைவேற்ற முடியும். இம்முதலடி எடுத்துவைக்கப்பட்டபின் ஒரு மத அரசு சமுதாயத்தில் உண்மையான இஸ்லாமிய அரசை உருவாக்க வேண்டும். அப்போது மனிதன் இறைவனைத் தவிர வேறு எதனையும் வணங்கமாட்டான். சாத்தியப்பட்ட அளவு அவன் மனித சுதந்திரத்தையும் சமூக சுதந்திரத்தையும் அனுபவிப்பான். உண்மையான மனித நீதியால் சமூக நீதியால் அவன் நன்மையடைவான்.

தவறு செய்யாத தவறு புரிவதிலிருந்து இறைவனால் பாதுகாக்கப்பட்ட ஒருவரால்தான் இவ்விரு குறிக்கோள்களையும் நிறைவேற்ற முடியும். அல்லாவின் சிந்தனையைக் கொர்ச்சைப்படுத்தும் சாத்தியப்பாட்டிலிருந்து தப்ப முடியாதவர்கள் தம்தோள்களில் சுமத்தப்பட்ட கடமைகளில் துரோகமிழைக்கக் கூடியவர்கள். ஆட்சியாளராகவும் மத அதிகாரம் கொண்டோ ராகவும் மாறிவிடுவர். இவ்வாறு நடந்தால் விடுதலை நல்கும். நீதியான இஸ்லாமிய ஆட்சி படிப்படியாகச் சர்வாதிகாரத்தன்மை வாய்ந்ததாய் கொடுங்கோலாட்சியாய் முற்றிலும் மாறிவிடக்கூடும். மேலும் பிற மதங்கள் சிலவற்றில் காணப்படுவது போன்று உலக ஆசைகளில் மூழ்கிய சுயநலம் பிடித்த அறிஞர்கள் கையில் மதத்தின் தூய போதனைகள் மாற்றமுற்று மாசடைந்து விடக்கூடும். திருநபி (ஸல்) அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டது போன்று அலீ (அலை) அல்லாஹ்வின் திருமறையையும் நபியின் சுன்னாவையும் சொல்லிலும் செயலிலும் பின்பற்றியவராவார்[18]. ஷீஆ கண்ணோட்டப்படி பெரும்பான்மையினர் கூறுவது போன்று அலி (அலை)யின் நியாயமான கிலாபத்தை குறைஷிகள் [19] மட்டுமே எதிர்த்தனர் என்றார். அப்போது பெரும்பான்மையினர் நியாயத்தின் பக்கம் நின்று குறைஷிகளுக்குப் பதில் கூறியிருக்க வேண்டும். குறைஷிகளின் எதிர்ப்புக்கு அஞ்சி பெரும் பான்மையினர் வாளாவிருந்திருக்கக் கூடாது.

கலீபா மக்களால் தெரிவுசெய்யப்படும் முறையை ஷீஆக்கள் எதிர்ப்பதற்கு அதனால் உண்டாகக் கூடிய ஆரோக்கியமற்ற விளைவுகள் பற்றிய அச்சமே காரணம். அதனால் இஸ்லாமிய

அரசாங்கம் ஊழல் மயமாகிவிடக்கூடுமென்றும் உன்னதமான மத அறிவின் உறுதியான அடித்தளம் அழித்தொழிக்கப்படக்கூடு மென்றும் ஷீஆக்கள் அஞ்சினர். இஸ்லாமிய வரலாற்றில் பின்னர் நடந்த சம்பவங்கள் இவ்வம்சத்தை (தீர்க்கதரிசனத்தை) உறுதிப்படுத்தின. இதனால் ஷீஆக்களின் நம்பிக்கை மேலும் உறுதிபெற்றது. எனினும் ஆரம்ப வருடங்களில் ஷீஆயிஸத்தைப் பின்பற்றியோர் சிறுதொகையினராயிருந்தபடியால் ஷீஆயிஸம் புறத்தோற்றத்தில் பெரும்பான்மையினுள் உறிஞ்சப்பட்டு விட்டதுபோல் காணப்பட்டது. ஆனால் ஷீஆயிஸம் தனிப்பட்ட முறையில் மத அறிவு நபி குடும்பத்தினரிடமிருந்தே பெறப்படல் வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தியும் தனது இலட்சியப் பணியில் இணையுமாறு மக்களுக்குத் தொடர்ந்து அழைப்பு விடுத்தும் வந்தது. அதேவேளை இஸ்லாத்தின் சக்தியைப் பாதுகாக்கவும் அதன் வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் வேண்டி ஷீஆயிஸம் ஏனைய இஸ்லாமிய சமுதாயத்தின் மீது பகிரங்கமாக எதிர்ப்புக் காட்டவில்லை. ஷீஆ சமூகத்தைச் சேர்ந்தோர் ஸுன்னிப் பெரும்பான்மையோருடன் தோள்சேர்ந்து புனித யுத்தங்களிலும் (ஜிஹாத்) பொதுக் காரியங்களிலும் கலந்து கொண்டனர். அத்தகைய நடவடிக்கைகள் தேவைப்பட்டபோது முழு இஸ்லாத்தினதும் நன்மை கருதி அலீ (அலை) ஸுன்னிப் பெரும்பான்மையினருக்குத் தாமே வழிகாட்டவும் செய்தார்[20].

வாக்களிப்பு மூலம் கலீபாவைத் தெரிவு செய்யும் அரசியல் முறைமையும் ஷீஆக் கண்ணோட்டத்தின் மீது அதன் உடன்பாடின்மையும்.

திருமறையையும் திருநபியின் வழிமுறை (சுன்னா)யையும் ஆதாரமாகக் கொண்ட புனித இஸ்லாமியச் சட்டம் (ஷரீஅத்) இறுதித்தீர்ப்பு நாள்வரை செல்லுபடியாகுமென்றும் ஒருபோதும் மாற்றப்பட முடியாததென்றும் மாற்றப்பட மாட்டாதென்றும் ஷீஆயிஸம் நம்புகிறது. உண்மையான இஸ்லாமிய அரசாங்கம் எத்தகைய காரணங்கொண்டும் ஷரீஅத் சட்டத்தை அமுல்படுத்துவதை முற்றாக மறுத்து விட முடியாது. ஷரீஅத்தின் எல்லைக்குள் காலத்தின் தேவைக்கேற்ப ஆலோசனை நடத்துவதே இஸ்லாமிய அரசாங்கத்தின் ஒரே கடமை.

குறைந்த பட்சம் ஓரளவுக்கேனும் அரசியல் காரணங்களால்

உந்தப்பட்டு ஸகீஃபாவில் அபூபக்கருக்கு விசுவாசப் பிரமாணம் செய்யப்பட்டமை திருநபி (ஸல்) சுகவீனமுற்றிருந்த இறுதிநாட்களில் இடம்பெற்ற ஹதீஸில் ''மையும் கடதாசியும்''[23] என விவரிக்கப்படும் சம்பவம் ஆகியன தேர்தல் முறையில் கலீபாவைத் தெரிவுசெய்யத் தீர்மானித்தவர்கள் அல்லாஹ்வின் திருவசனம் ஓர் அரசியல் யாப்பு வடிவில் பேணப்படல் வேண்டுமென நம்பினரென்ற உண்மையை வெளிப் படுத்துகின்றன. அவர்கள் இஸ்லாமியப் போதனையின் மாறாத ஆதாரமாக நபி மொழியில் போதிய கவனஞ் செலுத்தவில்லை. திருமறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். பொது நன்மை கருதி அப்போதைய நிலைக்குப் பொருத்தமாக இஸ்லாமியப் போதனையின் சில அம்சங்கள் மாற்றப்படுவதனை அவர்கள் அங்கீகரித்தது போல் தெரிகிறது.

புனிதச் சட்டத்தின் சில விதிகளுக்கு மட்டும் அழுத்தம் கொடுக்கும் இப்போக்கு நபித்தோழர்கள் பற்றிய பின்னர் பெறப்பட்ட பல ஹதீஸ்கள் மூலம் உறுதியாகின்றது. உதாரணமாக நபித்தோழர்கள் புனிதச்சட்டம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் சுதந்திர அதிகாரமுடையோராயும் (முஜ்தஹித்)[24] பொது விவகாரங்களில் சுதந்திரமாகத் தீர்ப்பு (இஜ்திஹாத்) கூறக்கூடியவர்களாயும் கருதப்பட்டனர். இப்பணியில் அவர்கள் வெற்றி கண்டால் அதற்கான கூலி அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்குக் கிடைக்குமென்றும் நபித்தோழர்களைச் சேர்ந்தோரானபடியால் அவர்கள் அக்காரியத்தில் தேல்வி கண்டாலும் அல்லாஹ் அவர்களை மன்னித்து விடுவானென்றும் நம்பப்பட்டது. பெருமானாரின் மறைவுக்குப் பின் ஆரம்ப வருடங்களில் இவ்வபிப்பிராயம் பொதுவாகக் காணப்பட்டது. இது விஷயத்தில் ஷீஆயிஸம் கடுமையான நிலைப்பாட்டை யெடுக்கின்றது. ஏனைய முஸ்லிம்களினதைப் போலவே நபித்தோழர்களது செயல்களும் கண்டிப்பாகச் ஷரீஆ போதனைகளின் படியே தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பது ஷீஆயிஸத்தின் நம்பிக்கை. உதாரணமாக காலித் இப்னு வலீத் சம்பந்தப்பட்ட அந்நாளைய பிரபல முஸ்லிம்களில் ஒருவரான மாலிக் இப்னு நுவஜ்ராஹ் என்பவர் இல்லத்தில் நடந்த சிக்கலான சம்பவமொன்றுள்ளது. இதன் விளைவாக மாலிக் இப்னு நுவஜ்ராஹ் மரணமடைகின்றார். காலித் இப்னு வலீத் பிரபல இராணுவத் தலைவராக விளங்கியபடியால் அவர்மீது இது சம்பந்தமாக நடவடிக்கையெதுவும் எடுக்கப்படவில்லை[25]. இது

நபித்தோழர்களைச் சேர்ந்த ஆன்மீகச் சான்றோர் குழுவின் ஆதர்ஸச் செயல்களால் விதிக்கப்பட்ட பயபக்திமிக்க நடைமுறையிலிருந்து மிகவும் தாழ்ந்தவையாகக் காணப்பட்ட நபித்தோழர்களின் செயல்கள் மீது இரக்கம் காட்டுவதாகும் என்பது ஷீஆ அபிப்பிராயம்.

ஷீஆக்களால் விமர்சிக்கப்படும் மற்றொரு ஆரம்பகாலச் செயல் நபி குடும்பத்தினர்க்கும் நபியின் உறவினர்க்கும்[26] செலுத்தப்பட்டுவந்த கும்ஸ்[27] வரியை நிறுத்தியதாகும். அதேபோன்று நபி மொழிக்கும் சுன்னாவுக்கும் ஷீஆயிஸம் கொடுக்கும் அழுத்தம் காரணமாக ஹதீஸ் எழுதிவைக்கப்படுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டமையும் எழுதி வைக்கப்பட்டிருந்த ஹதிஸ்கள் காணப்படின் அவை தீயிலிடப்பட்டதும் ஏன் எனச் ஷீஆக்களால் விளங்கிக் கொள்வதற்குச் சிரமமாகவுள்ளது[28] குலபாயேராஷிதீன்கள் [29] காலத்திலும் உமையாக்கள் காலத்திலும்[30] இத்தடை தொடர்ந்து நீடித்தது. ஹிஜ்ரி 99/கி.பி. 717ல் இருந்து ஹிஜ்ரி 101/719 வரை ஆட்சி புரிந்த உமர் இப்னு அப்துல் அஸீஸ் காலம் வரை இத்தடை நீக்கப்படவில்லை.

ஷரீயத்தின் சில அம்சங்களுக்கு அழுத்தம் கொடுத்து திரு நபி (ஸல்) போதிக்கவும் கடைப்பிடிக்கவும் செய்த சில நடைமுறைகளைப் புறத்தொதுக்கும் கொள்கை இரண்டாம் கலீபா (13/634 - 25/644) வின் காலத்தில் தொடர்ந்தது. சில நடைமுறைகள் தடைசெய்யப்பட்டன. மற்றுஞ் சில கைவிடப்பட்டன. இன்னுஞ் சில சேர்த்துக் கொள்ளப்பட்டன. உதாரணமாக தமத்து (ஹஜ் கிரியைகளுக்குப் பதிலாக உம்ரா கிரியைகள் இடம் பெற்ற ஒருவகை யாத்திரை) உமரின் கிலாபத்தின் போது தடைசெய்யப்பட்டது. தடையை மீறியோர் மீது கல்லெறியப்படும் தண்டனை விதிக்கப்பட்டது. இது தூரவிடத்திலிருந்து வரும் யாத்திரிகர்கள் நிறைவேற்றக்கூடிய ஒருவகை விசேட கிரியையாக நபி (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின்போது அல்குர்ஆன் சூரா 2 :196ல் விதிக்கப்பட்ட நடைமுறைக்கு விரோதமான செயலாகும். மேலும் நபிகளாரின் காலத்தில் தற்காலிகத் திருமணமுறை முத்ஆ நடைமுறையிலிருந்தது. ஆனால் உமர் அதனைத் தடைசெய்தார். இன்னும் நபிகளாரின் காலத்தில் தொழுகைக்கு அழைக்கும்போது ''சிறந்த அமலுக்காக விரையுங்கள்'' (ஹய்ய அலல் ஹைர் அல் அமல்)என அழைப்பது வழக்கமாயிருந்தும் கூட உமர் அதனை நீக்கிவிடுமாறு கட்டளையிட்டார். அது புனித யுத்தத்தில்

ஜிஹாத்தில் மக்கள் கலந்து கொள்வதைத் தடுத்துவிடும் என உமர் அதற்குக் காரணம் கூறினார். (ஷீஆக்கள் தொழுகைக்கு அழைப்பு விடுத்து அதான் சொல்லும்போது இன்றும் இவ்வாறு மொழிகின்றனர். ஆனால் ஸுன்னத் ஜமாஅத்தினரின் அதான் அழைப்பில் இது இடம் பெறுவதில்லை). ஷரீயத்திலும் புதியவை புகுத்தப்பட்டன. நபிகளாரின் காலத்தில் விவாகரத்துப் பிரகடனம் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் (''நான் உன்னை விவாகரத்து செய்கிறேன்'') என மும்முறை அறிவிக்கப்பட்டால்தான் செல்லுபடியாகும். ஆனால் ஒரே சந்தர்ப்பத்தில் மூன்று முறை விவாகரத்துப் பிரகடணஞ் செய்வதை அனுமதித்தார். இப்புதிய சட்டங்களை மீறியோருக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. உதாரணமாக முத்ஆ திருமண விவகாரத்தில் கல்லெறியப்படுதல்.

இரண்டாம் கலீபாவின் ஆட்சிக்காலத்தில்தான் புதிய சமூக பொருளாதார சக்திகள் பொதுநிதி (பைத்துல்மால்) மக்கள் மத்தியில் ஒழுங்கற்ற முறையில் விநியோகிக்கப்பட்டதும்[32] இச்செயலே பின்பு திகைப்பூட்டக்கூடிய வர்க்கபேதத்துக்கும் முஸ்லிம்கள் மத்தியில் பயங்கர இரத்தக் களரிக்கும் காரணமாயமைந்தது. இக்காலத்தின்போது முஆவியா டமஸ்கஸிலிருந்து பைஸாந்திரிய, பாரசீக அரசர்கள் போன்று ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். ''அரபிகளின் குஸ்ரு'' (பாரசீக அரசர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பட்டம்) என அழைக்கப்பட்டார். அவரது லௌகீக வாத ஆட்சிக்கெதிராய் காத்திரமான எதிர்ப்பெதுவும் காட்டப்படவில்லை[33].

இரண்டாம் கலீபா 25/644ல் பாரசீக அடிமையொருவனால் கொல்லப்பட்டார். இரண்டாம் கலீபாவினால் தமது மரணத்தின் முன் கட்டளையிடப்பட்ட அறுவர் குழு ஒன்றின் பெரும்பான்மை வாக்கால் மூன்றாம் கலீபா தெரிவு செய்யப்பட்டார். மூன்றாம் கலீபாவின் ஆட்சிக் காலத்தில் அவரது உமையா வம்சத்தைச் சேர்ந்த உறவினர்கள் மக்கள் மீது அதிகாரஞ் செலுத்தத் தொடங்கியதைக் கலீபா தடுக்கவில்லை. ஹிஜாஸ், ஈராக், எகிப்து மற்றும் முஸ்லிம் மாநிலங்களுக்கும் அவர்களை ஆட்சியாளர்களாகக் கலீபா நியமித்தார். [34] இவ்வுறவினர்கள் அரசாங்க விவகாரங்களில் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்படுவதைத் தளர்த்தினர். சிலர் பகிரங்கமாகவே அநீதம் புரிந்தனர். கொடுங்கோன்மை புரிந்தனர். பாவச்

செயல்களில் ஈடுபட்டனர். பாரபட்சம் காட்டினர். உறுதியாக நிறுவப்பட்ட சில இஸ்லாமியச் சட்டங்களை மீறினர். நீண்டகாலம் செல்வதற்குள் தலைநகரை நோக்கிக் கண்டனங்கள் வந்து குவியத் தொடங்கின. ஆனால் கலீபாவோ தமது உறவினர்களின் குறிப்பாக மர்வான் இப்னு ஹக்கம்[35] என்பவரின் செல்வாக்கிற்கு ஆட்பட்டிருந்தார். மக்களின் கண்டனங்களுக்கான காரணிகளையகற்றுவதில் கலீபா உடனடியாகவோ தீர்மானமாகவோ செயற்படவில்லை. சில சமயங்களில் கண்டனம் தெரிவித்தவர்கள் தண்டிக்கப்பட்டனர். விரட்டப்பட்டனர்.

எகிப்தில் நடந்தவோர் சம்பவம் மூன்றாம் கலீபாவினது ஆட்சியின் தன்மையைக் காட்டுவதாகவுள்ளது. எகிப்தில் முஸ்லிம்களின் கோஷ்டியொன்று கலீபாவுக்கெதிராகக் கலகஞ் செய்தது. ஆபத்தான நிலையையுணர்ந்த உதுமான் அலீயிடம் உதவிகோரி தமது பச்சாதாபத்தை வெளியிட்டார். ''வாழ்க்கையில் நீதியையும் சத்தியத்தையும் நிலைநாட்டுவதற்காக நீங்கள் கலகஞ் செய்துள்ளீர்கள். உதுமான் தம்செயலுக்கு வருந்தி 'நான் என்னுடைய போக்கை மாற்றிக் கொள்கிறேன். மூன்று நாட்களில் உங்களின் விருப்பங்களை நிறைவேற்றுகிறேன். ஒடுக்குமுறையான ஆட்சியாளர்களை அவர்களின் பதவிகளிலிருந்து நீக்கிவிடுகிறேன். என அறிவித்துள்ளார்'' என எகிப்தியர்களிடம் அலீ (ரலி) கூறினார். அதன்பின் உதுமான் சார்பில் அலி எகிப்தியர்களோடு எழுத்து மூலம் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அவர்கள் திரும்பிச் சென்றனர். செல்லும் வழியில் அவர்கள் உதுமானிய அடிமை ஒட்டகத்தில் எகிப்து நோக்கிச் செல்வதைக் கண்டனர். அவன் மீது சந்தேகங்கொண்டு அவனைச் சோதனை யிட்டபோது எகிப்து கவர்னருக்கு எழுதப்பட்ட கடிதமொன்று அவனிடமிருக்கக் கண்டனர். அதில் பின்வரும் வாசகங்கள் காணப்பட்டன. ''அல்லாஹ்வின் பெயரால் அப்துர்ரஹ்மான் இப்னு அத்தீஸ் உம்மிடம் வந்ததும் அவருக்கு நூறு கசையடி வழங்கவும். அவரது தலையையும் தாடியையும் மழித்து அவருக்கு நீண்ட சிறைவாசம் விதிக்கவும். அம்ரு இப்னு அல்ஹம்க், சூதா இப்னு ஹமரான், உர்வாஹ் இப்னு நிபாஹ் ஆகியோர் விடயத்திலும் அவ்வாறே செய்யவும்'' எகிப்தியர்கள் அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு கோபத்தோடு உதுமானிடஞ் சென்று ''நீர் எங்களுக்குத் துரோகமிழைத்துவிட்டீர் என்றனர்'' உதுமான் கடிதத்தை மறுத்தார். உமது அடிமைதான் கடிதத்தைச்

சுமந்துசென்றான்'' என்றனர். எனது அனுமதியின்றி அவன் அவ்வேலையைச் செய்திருக்கிறான்'' என்றார் உதுமான். அவன் உமது ஒட்டகையில் சென்றான் என்றனர். அவர்கள் என் ஒட்டகையைத் திருடியிருக்கிறார்கள் என்றார் உதுமான். கடிதம் உம்முடைய கையெழுத்தாயிருக்கிறது என்றனர். எனது அனுமதியின்றி எனக்குத் தெரியாமல் இது நடந்திருக்கிறது என்றார் உதுமான். ''எப்படியிருப்பினும் நீர் கலீபாவாயிருக்கத் தகுதியில்லாதவர்'' இது உம்முடைய அனுமதியுடன் நடந்திருப்பின் நீர் ஒரு துரோகி. இப்படிப்பட்டவொரு காரியம் உம்முடைய அனுமதியில்லாமல் உமக்குத் தெரியாமல் நடந்திருப்பின் நீர் ராஜினாமா செய்யவேண்டும் அல்லது ஒடுக்குமுறையான அதிகாரிகளை உடனடியாகப் பதவியிலிருந்து விலக்க வேண்டும்'' என அவர்கள் கூறினர். ''உங்களின் விருப்பப்படி நான் நடப்பதாயிருந்தால் அப்போது ஆட்சியாளர்கள் நீங்களேயன்றி நானல்ல'' என்று உதுமான் இதற்குப் பதில் கூறினார். அவர்கள் கோபத்துடனெழுந்து சபையை விட்டுவெளியேறினர் [(36)].

உதுமான் தமது கிலாபத் ஆட்சியின்போது முஆவியாவின் அதிகாரத்திலிருந்த டமஸ்கஸ் அரசாங்கத்தை முன்னென்றுமில்லாதவாறு வலுப்படுத்தினார். உண்மையில் அரசியல் அதிகாரத்தைப் பொருத்தமட்டில் கிலாபத்தின் முக்கிய மையம் டமஸ்கஸாக மாறிக் கொண்டிருந்தது. இஸ்லாமிய உலகின் தலைநகரான மதீனா தேவையான அதிகாரமும் ஆதாரமுமின்றி அரசியல் ரீதியாக பெயரளவிலே அவ்வாறு காணப்பட்டது.[(37)] இறுதியாக 35/656ம்ஆண்டு மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஒருசில நாட்களில் முற்றுகையின் பின் சண்டையில் கலீபா கொல்லப்பட்டார்.

முதலாம் கலீபாபெரும்பான்மையான நபித்தோழர்களின் வாக்கினால் தெரிவு செய்யப்பட்டார். இரண்டாம்கலீபா முதலாமவரின்விருப்பின் படியும் மரணசாசனத்தின்படியும் தெரிவு செய்யப்பட்டார். இரண்டாம் கலிபாவால் திட்டமிடப்பட்ட விதிமுறைப்படி அவரால் ஏற்படுத்தப்பட்ட அறுவர் குழுவினால் தெரிவுசெய்யப்பட்டார் மூன்றாம் கலிபா. மொத்தத்தில் இருபத்தைந்தாண்டுகள் ஆட்சியிலிருந்த இம்மூன்று கலிபாக்களின் கொள்கை இஜ்திஹாதின்படியும் கலிபாக்களுக்குச் சமயோசிதமாகத் தோன்றிய படியும் இஸ்லாமியச் சட்டங்களையும் அடிப்படைகளையும் சமூகத்தில் பிரயோகிப்பதாகவிருந்தது.

இஸ்லாமிய அறிவைப்பொருத்தமட்டில் திருக்குர்ஆனை அதன்விரிவுரைகள் பற்றி அக்கறை காட்டாமல் கருத்தாடல்களுக்கு உட்படுத்தாமல் வாசித்து விளங்கிக் கொள்வது மட்டுமே போதுமானதென்பதே இக்கலீபாக்களின் கொள்கையாகவிருந்தது. பெருமானாரின் ஹதீஸ் எழுதுவிக்கப்படாமல்வாய்மொழியாக மட்டுமே பரப்பப்பட்டு வந்தது. புனிதத் திருமறை வசனங்கள் மட்டுமே எழுதிவைக்கப்பட்டன. ஹதீஸை எழுதிவைப்பது தடைசெய்யப்பட்டது [38].

திருக்குர்ஆனை மனனஞ் செய்திருந்த அநேகர் 12/633 ம் ஆண்டு முடிந்த யமாமாஹ் யுத்தத்தின்போது இறந்தனர். திருக்குர்ஆன் வசனங்கள்எழுத்தில் சேகரித்து வைக்கப்படல் வேண்டுமென்றும் இன்னொரு யுத்தம் மூண்டால் குர்ஆனை மனனஞ் செய்திருக்கும் ஏனையோரும் இறந்துவிடலாமென்றும் மனிதர்கள் மத்தியிலிருந்து திருமறை வசனங்கள் இதனால் மறைந்துபோகக் கூடுமென்றும் எனவே திருமறை வசனங்கள் எழுதிவைக்கப்படுவது அவசியமென்றும் உமர் இப்னுல் கத்தாப் முதலாம் கலிபாவிடம் வேண்டுகோள் விடுத்தார் [39].

திருக்குர்ஆன் சம்பந்தமான இத்தீர்மானம் எடுக்கப்பட்ட அதே வேளை அதைப் பூரணப்படுத்துவதாக அமையும் திருநபியின் ஹதீஸ் இவ்வபாயத்தை எதிர்நோக்கியபோது திரித்துரைக்கப்படல், கூட்டவும் குறைக்கவும்படல், மறக்கப்படல், போலி ஹதீஸ்கள் உண்டாதல் போன்ற அபாயங்கள் சூழ்ந்திருந்த ஹதீஸ் விஷயத்தில் அதேயளவு கவனஞ் செலுத்தப்படாதது ஷீஆ கண்ணோட்டத்தில் விசித்திரமானதாகப்படுகின்றது. இதற்குநேர் மாற்றமாக ஹதீஸை எழுதி வைப்பது தடைசெய்யப்பட்டது. புனித திருமறை மட்டுமே எழுத்துருவில் இருக்க வேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுப்பதுபோல் எழுத்தில் காணப்பட்ட ஹதீஸ்கள் யாவும் தீயிலிடப்பட்டன.

ஏனைய இஸ்லாமிய அறிவியல்களைப் பொருத்தமட்டில் அவற்றைப் பரப்புவதற்கு பெரும் பிரயத்தனங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. புதிய சமூக அரசியல் அமைப்பை நிறுவுவதிலேயே சமூகத்தின் சக்தி பெரும்பாலும் செலவிடப்பட்டது. அறிவு (இல்ம்) [40] திருமறையில் அதிகம் போற்றப்பட்டபோதும், புனிதமாகக் கூறப்பட்டபோதும் அதன் வளர்ச்சிக்கு அழுத்தம் கொடுப்பதும், மத அறிவுத்துறைகளை

ஆர்வமாக வளர்த்தெடுப்பதும் இஸ்லாமிய வரலாற்றின் பிந்திய காலகட்டத்துக்கு ஒத்திப்போடப்பட்டது.

அனேக மானோர் இஸ்லாமிய ராணுவங்களின் தொடர்ச்சியான அற்புத வெற்றிகளின் களிப்பில் மூழ்கிக் கிடந்தனர் எல்லாத்திசைகளிலுமிருந்து அராபியத்தீபகற்பம் நோக்கி வந்து குவிந்த அளவிடமுடியாத யுத்தக் கொள்ளைப் பொருள்களில் மயங்கி அவர்கள் தம்மை மறந்தனர், இப்புதிய செல்வமும் அதனோடுவந்த உலக ஆசைகளும் காரணமாக நபிகுடும்பத்தைச் சேர்ந்தோரின் அறிவுத்துறைகளை விருத்திசெய்வதில் ஒருசிலரே நாட்டம் கொண்டனர். நபி குடும்பத்தினரின் தலைவராக இஸ்லாமிய அறிவுத் துறைகளில் ஆழிய ஞானம் படைத்தவராக திரு நபி (ஸல்) அவர்களால் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த அலீ (அலை) விளங்கினார்.

அதேவேளை இம்மாற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டோர் அநேகரால் திருமறையின் உட்பொருளும் குர்ஆன் போதனைகளின் நோக்கமும் புறக்கணிக்கப்படன. திருக்குர்ஆன் வசனங்களைச் சேகரிக்கும் பணியில் கூட அலீ (அலை) யின் ஆலோசனை நாடப்படாததும் அப்பணியில் ஈடுபட்டோரில் அலியின் பெயர் குறிப்பிடப்படாததும் விசித்திரம்தான். எனினும் பெருமானாரின் மறைவின் பின் அலீ (அலை) திருகுர்ஆன் வசனங்களை சேகரித்தமை யாவரும் அறிந்ததே[41].

அபூபக்கர் (ரலி) சமூகத்திடமிருந்து விசுவாசப்பிரமானம் பெற்ற பிறகு அலீயிடம் ஒருவரை அனுப்பித் தமக்கு விசுவாசப் பிரமாணம் செய்யுமாறு கேட்டதாக அநேக பாரம்பரியங்களில் விவரிக்கப்பட்டுள்ளது ''குர்ஆனைத் தொகுத்து முடிக்கும் வரை அன்றாடத்தொழுகைக்காக மட்டுமன்றி வேறெக்காரணத்துக்கும் வீட்டைவிட்டு வெளியேற மாட்டேன் என நான் வாக்களித்துள்ளேன்'' என்று கூறினார் அலீ (அலை) ஆறு மாதங்களுக்குப்பின் அபூபக்கருக்கு அலீ விசுவாசப்பிரமாணம் வழங்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது. அலீ (அலை) திருக்குர்ஆனைத் தொகுத்து முடித்தார் என்பதற்கு இதுவே அத்தாட்சியாகும். அதே போன்று குர்ஆனைத் தொகுத்து முடித்தபின் அலீ (அலை) திருமறையின் பக்கங்களை ஓர் ஒட்டகை மீது வைத்து மக்களுக்குக் காட்டியதாக

விவரிக்கப்பட்டுள்ளது. திருக்குர் ஆன் தொகுக்கப்படு வதற்குக்காரணமான யமாமாஹ் யுத்தம் அபூபக்கருடைய கிலாபத்தின் இரண்டாம் வருடத்தின் போது நடந்ததாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. இந்நிஜங்கள் புனிதத்திருமறையைத் தொகுத்தல் சம்பந்தமான விவரங்களைக் குறிப்பிடும் அநேக வரலாற்று ஹதீஸ் கிரந்தங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இவையும் இவைபோன்ற சம்பவங்களும் அலியினதும் அவரைப் பின்பற்றியோரினதும் முன்னாலிருந்த பெரும் பணிபற்றிஅவர்களது நம்பிக்கை வலுவடையவும் பிரக்ஞை அதிகரிக்கவும் செய்தன. நாளுக்கு நாள் அவர்களது பணி அதிகரித்தது. பொதுவாக மக்களுக்கு அறிவூட்டி அவர்களுக்கு பயிற்சியளிக்கும் சாத்தியப் பாட்டிலிருந்து துண்டிக்கபட்ட அலீ (அலை) தனிப்பட்டமுறையில் சான்றோர் குழுவொன்றைப் பயிற்றுவிப்பதில் ஈடுபட்டார்.

இருபத்தைந்தாண்டு காலகட்டத்தில் அலீ (அலை) தம்மருமை நண்பர்களும் தம்முடன் இணைந்திருந் தோருமான நால்வரில் மூவரை இழந்தார். ஸல்மான் அல் ஃபார்ஸி , அபூதர் அல் கிபாரி, மிக்தாத் ஆகிய இவர்கள் நாயகத் தோழருமாவர். இவர்கள் எல்லா சூழ்நிலகைளிலும் அலீயுடன் உறுதியான நட்பு பூண்டிருந்தனர். இக்கால கட்டத்தில் தான் மற்றும் சில நபித் தோழரும் அவர்களைப் பின்பற்றிய ஹிஜாஸ், யேமன், ஈராக் மற்றும் நாடுகளைச் சேர்ந்த பெருந்தொகையினரும் அலீ (அலை) யைப் பின்பற்றியோருடன் சேர்ந்தனர். இதன் விளைவாய் மூன்றும் கலீபாவின் மறைவுக்குப் பின் மக்கள் எல்லாப் பக்கங்களிலுமிருந்து அலீயின் பால் திரும்பினர். அலீ (அலை) க்கு விசுவாசப் பிரமாணஞ் செய்து அவரைக் கலீபாவாய்த் தெரிவு செய்தனர்.

அமீருல் முஃமினீன் அலீ (அலை) யின் கிலாபத் முடிவும்[42] அவரின் ஆட்சி முறையும்

35/656ம் ஆண்டிறுதியில் ஆரம்பமான அலீயின் கிலாபத் நான்காண்டுகளும் ஒன்பது மாதங்களும் நீடித்தது. அலீ (அலை) தமது கிலாபத் ஆட்சியின் போது திருநபியின் வழிமுறைகளைப் பின்பற்றினார்[43]. நிலைமைகளை அவற்றின் பூர்வ நிலைக்குக் கொணர்ந்தார். ராஜ்ய விவகாரங்களில் பங்கேற்ற, தகுதியற்ற அரசியல் அதிகாரிகள் அனைவரையும் பலவந்தமாகப் பதவி விலகச் செய்தார்.[44] உண்மையில் ''புரட்சித்தன்மை'' வாய்ந்த பிரதான மாற்றமொன்றைத் தொடங்கிவைத்தார். இதனால் அவர் எண்ணற்ற இன்னல்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது[45]

கலீபாவாகப் பதவியேற்ற அலீ (அலை) மக்கள் முன் உரை நிகழ்த்துகையில் பின்வருமாறு கூறினார்; '' மக்களே அல்லாஹ்வுடைய நபியினது தூதின் காலகட்டத்தில் நீங்கள் எதிர்கொண்ட இன்னல்கள் மீண்டும் வந்து உங்களைப் பிடித்துக் கொண்டதையிட்டு எச்சரிக்கை கொள்ளுங்கள். உங்களின் வரிசைகள் முற்றாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். பின் தள்ளப்பட்டுவிட்ட ஒழுக்க சீலர்கள் முன்னுக்கு வரவேண்டும் தகுதியில்லாமல் முன்னணிக்கு வந்து விட்டவர்கள் பின்வாங்க வேண்டும். சத்தியம் (ஹக்) அசத்தியம் (பாத்தில்) இரண்டுமிருக்கிறது. ஒவ்வொன்றையும் பின்பற்றுவோர் இருக்கிறார்கள். எனினும் ஒருவர் சத்தியத்தையே பின்பற்ற வேண்டும். அசத்தியம் பரவுகிறதென்றால் அது அப்படி யொன்றும் புதிதல்ல. சத்தியம் கடினமானதாகவும் காண்பதற்கரிதாகவும் இருக்கின்றதெனில், சில சமயங்களில் அரிதானது கூட வெற்றி பெற்று முன்னேற்றத்துக்கான நம்பிக்கை தருவதுண்டு. மனிதனிடமிருந்து விரட்டப்பட்ட ஒன்று மீண்டும் அவனிடத்து திரும்பிவருவது அடிக்கடி நிகழ்கிற ஒன்றல்ல வென்பது உண்மைதான்''[46]

அரசியல் வலிமையை விட நேர்மையை அடிப்படையாகக் கொண்ட தீவிர வித்தியாசமுடைய அரசாங்க மொன்றை அலீ தொடர்ந்தார். ஆனால் இவ்வகையான இயக்கம்

எல்லாவற்றிற்கும் அவசியமாய் - ஷீஆ அபிப்பிராயப்படி - இந்த உள்நாட்டுப்போர்களைத் தூண்டி விட்டோர் சொந்த நலன்களைத் தவிர வேறெந்த நோக்கமும் கொண்டிருக்கவில்லை. மூன்றும் கலீபாவின் இரத்தஞ் சிந்தப்பட்டதற்குப் பழிவாங்கும் விருப்பம் என்பதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்காகக் கூறப்பட்ட சமாதானங்களே.

திருநபியின் மறைவுக்குப் பின், அலீயைப் பின்பற்றிய மிகச்சிறு பான்மையோர் கூட்டம் விசுவாசப்பிரமானஞ் செய்ய மறுத்தது. இக்கூட்டத்துக்கு ஸல்மான், அபூதர், மிக்தாத், அம்மார் முதலியோர் தலைமை தாங்கினர். அலீயுடைய கிலாபத்தின் ஆரம்பத்திலும் உடன்பாடற்ற ஒரு சிறுபான்மைக் கூட்டம் விசுவாசப் பிரமானஞ் செய்ய மறுத்தது. மிகக்கடுமையாக எதிர்த்து நின்றவர்களில் ஸைத் இப்னு ஆஸ், வலீத் இப்னு உக்பா, மர்வான் இப்னு ஹக்கம், சமூரா இப்னு ஜுந்தாப், முகீரா இப்னு ஷுப்பாஹ் ஆகியோர் அடங்குவர்.

இவ்விரு கோஷ்டியினர்களது வாழ்க்கைச் சரிதையைக் கற்றல், அவர்களின் செயல்கள், வரலாற்று நூல்களில் அவர்களைப் பற்றிக் கூறப்படும் கதைகள் பற்றி சிந்தனை புரிதல், அவர்களது மத ஆளுமைகளையும், நோக்கங்களையும் நன்கு வெளிக் கொணரும். முதல் கோஷ்டியினர் நபித் தோழர்களைச் சேர்ந்த சான்றோர் குழுவினராவர். இவர்கள் ஞானிகளும் பெரும் பக்திமான்களும் இஸ்லாமியச் சுதந்திரப்பாதையில் போராட்டம் புரிந்த தன்னலமற்ற இஸ்லாமியத் தொண்டர்களுமாவர். அவர்கள் விசேடமாகப் பெருமானாரின் நேசத்தைப் பெற்றவர்கள் '' இறைவன் நான்கு மனிதர்களை நேசிப்பதாகவும், நானும் அவர்களை நேசிக்க வேண்டுமென்றும் எனக்கு அறிவித்துள்ளான்'' என நபிகளார் நவின்றுள்ளார்கள். அவர்களின் பெயர்களைப் பற்றி வினவப்பட்டபோது முதலில் அலியையும் அப்புறம் அபூதர், ஸல்மான, மிக்தாத் ஆகியோரின் பெயர்களையும் குறிப்பிட்டார்கள் (இப்னு மாஜாவின் ஸுனன் கெய்ரோ 1372 வல் 1 பக் 66) '' அம்மாரின் முன்னால் இரண்டு மாற்று விடயங்கள் வைக்கப்பட்டால், நிச்சயமாக அவர் அதிக

உண்மையானதையும் சரியானதையுமே தேர்ந்தெடுப்பார்'' என அல்லாஹ்வின் நபி கூறியதாக ஆயிஷா நாயகி அறிவிக்கின்ருர். (இப்னு மாஜா வல் 1, பக் 66) '' அபூதரை விட அதிகம் உண்மைவாய்ந்தவர் வானுக்கும் பூமிக்குமிடையே யாருமில்லை'' என நபிகளார் கூறினார்கள். (இப்னு மஜா வல் 1, பக்68). இம்மனிதர்கள் தம்வாழ்நாளில் தவிர்க்கப்பட்ட காரியம் ஒன்றேனும் செய்ததாகப் பதிவாகியில்லை. அநீதியாக யாருடைய இரத்தத்தையும் அவர்கள் சிந்தியதில்லை, யார் மீதும் இவர்கள் ஆக்கிரமிப்பு நடத்தியதில்லை; யாருடைய சொத்தையும் இவர்கள் அபகரித்ததில்லை. மக்களைக் கெடுக்கவும் தவறான வழியில் செலுத்தவும் இவர்கள் முயன்றதில்லை.

இரண்டாவது கோஷ்டியைச் சேர்ந்த சிலர் புரிந்த தகாத செயல்கள் பற்றிய விவரங்கள் வரலாற்றில் மலிந்துள்ளன. இவர்களில் சிலர் இஸ்லாமிய போதனைகளுக்கு மாற்றமாய்ப்புரிந்த பல்வேறு செயல்கள் கணக்கிட முடியாதவை. அல்லாஹ் இவர்கள் மீது திருப்தியடைந்தான், எனவே இவர்கள் விருப்பப்படி எதனையுஞ்செய்யச் சுதந்திரமானவர்கள், திருமறையிலும், சுன்னாவிலும் காணப்படும் சட்டங்களை மீறியமைக்காக இவர்கள் கண்டிக்கப்படமாட்டார்கள் எனக் கூறும் ஸுன்னத் ஜமாஅத்தின் சில குழுவினரது வழியிலன்றி இச்செயல்கள் மன்னிக்கப்பட முடியா.

அலீயின் கிலாபத் ஆட்சியின்போது நிகழ்ந்த ''ஒட்டகப்போர்'' என அழைக்கப்படும் முதல் யுத்தம் இரண்டாம் கலீபாவுடைய ஆட்சிக்காலத்தில் சமூக உறுப்பினர்கள் மத்தியில் பொது நிதி சமமின்றி விநியோகிக்கப்பட்டமையால் விளைந்த துரதிர்ஷ்டமான வர்க்க வேறுபாடுகள் காரணமாய் ஏற்பட்ட தாகும். கிலாபத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டதும் அலீ (அலை) நிதியை சமமாகப் பங்கிட்டார். இதுவே பெருமானாரின் வழிமுறையாக இருந்த போதும் இவ்விதமாகச் செல்வத்தைப் பகிர்ந்தது தல்ஹாவையும், ஸுபைரையும் பெரிதும் தடுமாறச் செய்துவிட்டது. அவர்கள் கீழ்ப்படிய மறுக்கும் அறிகுறிகளைக்

காட்டத்தொடங்கினர். புனித யாத்திரை மேற்கொள்வதாகக் காரணங் கூறி அவர்கள் மதினாவைவிட்டு மக்கா சென்றனர். அலீயுடன் நட்பு பாராட்டாது '' விசுவாசிகளின் அன்னை'' (உம்முல் மு.்.மினீன்) ஆயிஷா நாயகியைத் தம்முடன் சேருமாறு நிர்ப்பந்தித்தனர். பின் உதுமானின் படுகொலைக்காகப் பழிவாங்குதல் என்ற பெயரால் பயங்கரமான ஒட்டகப்போரைத் தொடங்கினர்.[48] மூன்றாம் கலீபா முற்றுகையிடப்பட்டுக் கொலை செய்யப்பட்டபோது தல்ஹாவும், ஸுபைரும் மதீனாவில்தான் இருந்தனர். உதுமானைப் பாதுகாக்க அப்போது அவர்கள் ஒன்றும்செய்யவில்லை என்பது தான் உண்மை. அப்படியிருக்க, இப்போது இவ்வாறு நடந்தது [49]. மேலும் உதுமானின் மறைவுக்குப்பின் இடம்பெயர்ந்து குடியேறியவர்கள் (முஹாஜிரீன்) சார்பாகவும் [50] தங்கள் சார்பாகவும் [51] இவர்களே அலீ (அலை) க்கு முதலில் விசுவாசப் பிரமானஞ் செய்தவர்கள், அத்துடன் மூன்றுவது கலீபாவின் மரணச் சேதி தமக்குக் கிடைத்தபோது '' விசுவாசிகளின் அன்னை'' ஆயிஷா நாயகி கலீபாவைக் கொலை செய்தவர்களுக்கெதிராய் எத்தகைய எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை[52] . மதினாவிலிருந்து அண்மையிலும் தூரத்திலுமுள்ள மக்களுக்குக் கடிதங்கள் எழுதியனுப்பி கலீபாவுக்கெதிராகக் கலகஞ்செய்யுமாறு அறைகூவல் விடுத்த நபித் தோழர்கள் மூன்றாம் கலீபாவின் மரணத்துக்கு இட்டுச் சென்ற குழப்பங்களைப் பிரதானமாகத் தூண்டிவிட்டவர்கள் என்பது நினைவிற் கொள்ளப்படல் வேண்டும். இவ்வுண்மை ஆரம்ப முஸ்லிம் வரலாறுகள் பலவற்றில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது.

சிப்பீன் யுத்தம் என்று அழைக்கப்படும் இரண்டாவது யுத்தம் ஒன்றரையாண்டுகள் நீடித்தது. கிலாபத்துக்கு ஆசைப்பட்ட முஆவியாவின் பேராசையே இந்த யுத்தத்துக்குக் காரணம். முஆவியாவைப் பொருத்தவரை கிலாபத் என்பது ஒரு மத நிறுவனம் என்பதை விடவும் அதிகமாக உலகாயதத் தன்மை வாய்ந்த ஓர் அரசியல் கருவியாகும். ஆனால் மூன்றும் கலீபாவின் இரத்தஞ்சிந்தப்பட்டமைக்குப் பழிவாங்குவதே பிரதான விவகாரமென அவர் காரணங் கற்பித்தார். அவர் தொடங்கிய

இப்போரில் ஓரிலட்சம் மக்கள் காரணமின்றிப் பலியாகினர். இயற்கையாகவே, இப்போரில் முஆவியா காப்பாளர் என்பதை விட ஆக்கிரமிப்பாளராகவே விளங்கினார். ஒருவரது இரத்தத்துக்குப் பழிவாங்குதல் என்பது பாதுகாப்பு யுத்தமாக இருக்க முடியாது. இரத்தத்துக்குப் பழிவாங்கல் என்பது போலிக்காரணமே. மூன்றும் கலீபா தமது ஆட்சியின் அந்திம நாட்களில் தமக்கெதிராயுண்டான கலகத்தை அடக்குவதற்கு முஆவியாவிடம் உதவி கேட்டிருந்தார். ஆனால் டமாஸ்கஸிலிருந்து மதினாவுக்குப் புறப்பட்ட முஆவியாவின் படை, கலீபா கொல்லப்படும் வரை வேண்டுமென்றே இடை வழியில் காத்திருந்தது. அப்புறம் அவர் டமாஸ்கஸுக்குத் திரும்பிச் சென்றார், கலீபாவின் மரணத்துக்குப் பழிவாங்க வென்று ஒரு கிளர்ச்சியைத் தூண்டிவிடுவதற்காக.[53] அலீயின் மரணத்தின் பின் தாமே கிலாபத்தைப் பெற்றுக் கொண்டு பின்னர் மூன்றும் கலீபாவின் இரத்தத்துக்காகப் பழிவாங்கும் காரியத்தையே மறந்து அதனைத் தொடராமல் கைவிட்டார்.

சிப்பீன் யுத்தத்துக்குப் பின் நஹ்ரவான் போர் நிகழ்ந்தது. இப்போரில் அலீ (அலை)க் கெதிராகக் கிளர்ந்தெழுந்த பலரில் நபித் தோழர்கள் சிலரும் காணப்பட்டனர். இதற்கு முஆவியாவின் தூண்டுதல் காரணமாய் இருந்திருக்கக் கூடும்.[54] இவர்கள் முஸ்லிம் நாடுகளெங்கும் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு முஸ்லிம்களை விசேடமாக அலீயைப் பின்பற்றியோரைக் கொன்றொழித்தனர். கர்ப்பிணிகளையும் கைக்குழந்தைகளையும் கூட அவர்கள் தாக்கினர். அலீ இக்கலகத்தை அடக்கினார். எனினும் சிறிது காலத்தின் பின் கவாரிஜ் என அழைக்கப்பட்ட குழுவைச் சேர்ந்த ஒருவனால் கலீபா அலீ (அலை) கூபா பள்ளிவாசலில் கொலைசெய்யப்பட்டார்.

அலீ துணிச்சல் மிக்கவர்தான் எனினும் அவரிடம் அரசியல் யூகம் காணப்படவில்லையென அலியின் எதிரிகள் கூறுகின்றனர். அவரது கிலாபத்தின் தொடக்கத்தில் அவர் தமது எதிரிகளுடன் தற்காலிகமாகச் சமாதானஞ் செய்து கொண்டிருக்கலாம். சமாதான சிநேகபூர்வ அணுகுமுறையால் அவர்களின் திருப்தியையும், அங்கீகாரத்தையும் சம்பாதித்திருக்கலாம்; இவ்வாறு தனது கிலாபத்தை

வலுப்படுத்திக் கொண்டு அதன் பின்னர் அவர்களைப் பூண்டோடழிப்பதற்கு முனைந்திருக்கலாம் என்றெல்லாம் இவர்கள் வாதிடுகின்றனர். இவ்வாறு அபிப்பிராயம் கொண்டோர், அலீயின் இயக்கம் அரசியல் சந்தர்ப்பவாத அடிப்படையில் அமைந்ததல்ல என்பதை மறந்து விடுகின்றனர். அதுவோர் தீவிர புரட்சிகர மத இயக்கம் (புரட்சி பற்றிய தற்போதை அரசியல் சமூக அர்த்தத்திலல்ல; யாவையும் உரிய முறையில் புனர்நிர்மானஞ் செய்யும் ஆன்மீக இயக்கமே புரட்சியென்கிற உண்மையான அர்த்தத்தில்) எனவே இது விட்டுக்கொடுத்தலாலும்; முகஸ்துதியாலும்; மாறுபாட்டினாலும் சாதிக்கப்பட்டிருக்க முடியாது. திரு நபியின் தூதின் போதும் இதுபோன்ற நிலைமை நிலவியதை அவதானிக்க முடியும். நிராகரிப்போரும், பலதெய்வங்களை வணங்கியோரும் பலமுறை பெருமானாருடன் சமாதானஞ் செய்து கொள்ளப் பிரேரனை கொண்டு வந்தார்கள். அவர்களுடைய தெய்வங்களை எதிர்ப்பதைக் கைவிட்டால் அவர்களும் நபிகளாரின் மதப்பிரச்சாரப்பணியில் தலையிடப் போவதில்லையென்றூர்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அப்பிரேரணையை ஏற்றுக் கொள்ளவில்லை. கஷ்டமான அந் நாட்களில் பெருமானார் அவர்களுடன் சமாதானஞ் செய்து கொண்டிருக்கலாம். தங்கள் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக இசைவாக நடந்திருக்கலாம். அதன் பின்னர் தம்விரோதிகளுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்திருக்கலாம் உண்மையில் பெருமானார் (ஸல்) அவ்வாறு செய்யவில்லை. உண்மையில், இன்னொரு நல்ல காரியத்துக்காக வேண்டி சரியான நீதியான மார்க்கத்தைக் கைவிடுவதற்கு இஸ்லாமியத் தூது ஒருபோதும் இடமளிப்பதில்லை, ஒரு பொய்யின் மூலம் இன்னொரு பொய்யை நிராகரிப்பதும், கண்டிப்பதும் நடக்கக் கூடிய காரியமல்ல. இவ்விவகாரம் குறித்து அநேக இறைவசனங்கள் குர்ஆனில் காணப்படுகின்றன.[55]

அலியின் கிலாபத்திலிருந்து ஷீஆ பெற்ற நன்மை

அலீ (அலை) யின் நான்காண்டு ஒன்பது மாதகால கிலாபத் ஆட்சியின் போது இஸ்லாமிய உலகு பூராவிலும் காணப்பட்ட குழப்பமான நிலைமைகளை நீக்க அவரால் முடியாது போயினும், மூன்று அடிப்படை வழிகளில் அவர் வெற்றி கண்டார்:

1. தமது நீதியும் நேர்மையும் வாய்ந்த வாழ்க்கை முறை மூலமாக விசேடமாக, இளம் தலைமுறையினர்க்கு, பெருமானாரின் வழிமுறையைப் பின்பற்றுவதிலுள்ள அற்புதக் கவர்ச்சியையும்,அழகொளிருந்தன்மையையும் மீண்டும் வெளிப்படுத்திக் காட்டினார். முஆவியாவின் ஆடம்பர அரச போக வாழ்க்கைக்கு நேர்மாற்றமாக மிகவும் வறிய மக்களைப் போன்று எளிமையாகவும் வறுமையுடனும் வாழ்ந்து காட்டினார்.[56] பிறர்க்கு மேல் தம் நண்பர்களுக்கும், உறவினர்க்கும் குடும்பத்தினர்க்கும் அவர் ஒருபோதும் சலுகை காட்டியதில்லை[57]. வறுமைக் கெதிராகச் செல்வத்தையோ, வலுவின்மைக் கெதிராகக் கொடிய வன்முறையையோ அவர் விரும்பியதில்லை.

2. பெருந்தொந்தரவுகளும் கஷ்டங்களும் தமது நேரத்தை எடுத்துக்கொண்டபோதிலும் அவற்றின் மத்தியில் உண்மையான இறைஞானம் பற்றியும் இஸ்லாமிய அறிவுத்துறைகள் பற்றியும் பெறுமதிமிக்க கருவூலங்களை இஸ்லாமிய சமுதாயத்துக்கு அவர் விட்டுச் சென்றூர்[58]. பல்வேறு அறிவு பூர்வ மத, சமூக, விடயங்கள் குறித்து அவரது கிட்டத்தட்ட பதினோராயிரம் பழமொழிகளும், சிறுவாசகங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன[59]. அவர் தமது பேச்சுக்களிலும் உரைகளிலும் மகோன்னதமான இஸ்லாமிய அறிவியல்களை அலங்காரமாகவும் ஆற்றொழுக்காகவும் வெளியிட்டுள்ளார். அவர் அரபுமொழி இலக்கணத்தை நிறுவியதோடு, அரபு இலக்கியத்துக்கு அடித்தள மமைத்தார்[60]. அறிவு ஜீவ வீரியமும், தர்க்கவியல் திருஷ்டாந்தமும் இணைந்த முறையில் மெய்யியல் (ஃபல்ஸஃபாயி இலாஹி) பிரச்சனைகளை இஸ்லாத்தில்

துருவியாய்ந்த முதல்வர் அவர். உலக மெய்யியலாளர் மத்தியில் அதே முறையில் அதற்கு முன் தோன்றியிராத பிரச்சினைகளை அவர் விசாரணை செய்தார்[61]. மேலும் மெய்யியல்; மறையியல் ஞானம் ஆகிய துறைகளில் அவர் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டிருந்தார். போர்முனையில் கூட அவர் அறிவுஜீவ விவாதம் புரிபவராகவும் , மெய்யியல் பிரச்சினைகள் குறித்து விசாரணை புரிபவராகவும் காணப்பட்டார்.[62]

3. பெருந்தொகையினரான மதஅறிஞர்களையும் இஸ்லாமிய ஞானிகளையும் அவர் பயிற்றுவித்தார். அவர்கள் மத்தியில் அநேக சிரேஷ்டர்களும் மெய்ஞ்ஞானிகளும் காணப்பட்டனர். அவர்களுள் உவைஸ் அல்-கர்ணி, குமைல் அல்-நஹாயி, மைத்தம் அல்-தம்மார், ரொஷாயித் அல்-ஹாஜரி போன்ற மனிதர்கள் சூ∴பியிஸத்தின் மூதாதைகளாவர். இவர்கள் பின்வந்த சூ∴பி ஞானிகளால் இஸ்லாத்தில் மறைஞானத்தை நிறுவியவர்களென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். அவரின் மாணாக்கர்களில் ஏனையோர், சட்டக்கலை, இறையியல், குர்ஆன் விரிவுரை, ஓதல் முதலிய துறைகளில் ஆரம்ப ஆசான்களாக மாறினர்[63].

கிலாபத் முஆவியாவின் கைக்கு மாறுதலும் பரம்பரை முடியாட்சியாக அது மாற்றமடைதலும்

அலீ (அலை) யின் மறைவுக்குப் பின் ஷீஆக்களால் இரண்டாவது இமாமென அங்கீகரிக்கப்பட்ட அவரது புதல்வர் ஹஸன் இப்னு அலி கலீபாவானார். அலீயின் விருப்பப்படியும், மரண சாஸனத்தின் படியும் ஹஸனுக்கு சமூகத்தின் விசுவாசப்பிரமாணத்தின் படியும் இது நிகழ்ந்தது. ஆனால் இச்சம்பவத்தின் முன்னால் முஆவியா அமைதியாயிருக்க வில்லை. அப்போது கிலாபத்தின் தலைநகராயிருந்த ஈராக் நோக்கி முஆவியா படையெடுத்துச் சென்று ஹஸனுக்கெதிராகப் போர் தொடுத்தார்.

பல்வேறு சூழ்ச்சிகள் செய்தும் பெருந்தொகையான பணத்தை அள்ளிக் கொடுத்தும் ஹஸனின் படைக் காவலர்களையும் தளகர்த்தர்களையும் படிப்படியாகக் கெடுப்பதில் முஆவியா வெற்றிகண்டார். இறுதியாக இரத்தக்களரியொன்றைத் தடுப்பதற்காக வேண்டியும், சமாதானஞ் செய்து கொள்வதற்காக வேண்டியும் ஹஸன் கிலாபத்தை முஆவியாவிடம் கையளிக்குமாறு நிர்பந்திக்கப்பட்டார்[64]. தம் ஆதரவாளர் களுக்கு எத்தகைய தீங்கும் நேரக் கூடாது. முஆவியாவின் மறைவுக்குப் பின் கிலாபத் மீண்டும் தம்மிடம் கையளிக்கப்படல் வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஹஸன் கிலாபத்தை முஆவியாவிடம் கையளித்தார்[65].

40/661ம் ஆண்டு கிலாபத் ஆட்சி முஆவியாவின் கைக்கு மாறியது. முஆவியா உடனே ஈராக்கிற்குப் புறப்பட்டுச் சென்று மக்கள் முன் நிகழ்த்திய உரையில் ''தொழுகையையும் நோன்பையும் நிலைநாட்டுவதற்காக வேண்டி நான் உங்களுக்கெதிராய்ப் போரிடவில்லை. அவற்றை நீங்களே நிறைவேற்றிக் கொள்ளுங்கள். நான் அடைய விரும்பியது உங்கள் மீது ஆட்சிபுரியும் அதிகாரத்தையே இந்நோக்கத்தை நான் நிறைவேற்றிக் கொண்டேன்'' என்றார். மேலும் அவர் கூறியதாவது: ''ஹஸனுடன் நான் செய்து கொண்ட ஒப்பந்தம் செல்லுபடியாகாது. அது என் காலடியில் மிதிபட்டுக்

கிடக்கின்றது.''[66] இப்பிரகடனம் முஆவியாவுடைய அரசாங்கத்தின் தன்மையையும் அவர் மனதில் போட்டிருந்த திட்டங்களையும் மக்கள் முன் வெட்ட வெளிச்சமாக்கியது.

மதத்தை அரசியலிலிருந்து பிரிக்கப்போவதையும் மதக் கடமைகளும் மதச்சட்டங்களும் சம்பந்தமாகத் தான் எத்தகைய உத்திரவாதமும் வழங்கப்போவதில்லையென்பதையும் முஆவியா இப்பிரகடனம் மூலம் குறிப்பாக உணர்த்தினார். எவ்வகையிலேனும் தனது ஆட்சியதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கு அவர் ஆயத்தமாயிருந்தார். வெளிப்படையாகவே இத்தகையதொரு அரசாங்கம் மரபு ரீதியான இஸ்லாமிய அர்த்தத்தில் ஒரு கிலாபத்தாகவும் அல்லாஹ்வுடைய றசூலைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இல்லாமல் சர்வாதிகார முடியாட்சியாகத்தான் இருக்கும். இதனால் தான் அவரது தர்பாரினுள் அனுமதிக்கப்பட்ட சிலர் அவரை 'அரசர்'' என விளித்தனர்.[67] முஆவியாவே தனது அந்தரங்கக் கூட்டங்கள் சிலவற்றில் தன் அரசாங்கத்தை முடியாட்சி என வர்ணித்தார்.[68] எனினும் பொதுமக்களின் முன் எப்பொழுதும் தன்னை கலீபா என்றே அறிமுகப்படுத்திக் கொண்டார்.

இயல்பாகவே, பலாத்காரத்தையும் வன்முறையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு முடியாட்சி பரம்பரை ஆட்சியுரிமையைத் தன்னகத்தே கொண்டதாயிருக்கும். முஆவியாவும் இவ்வுண்மையை இறுதியாயுணர்ந்து, மதவொழுக்கமற்ற[69] அடங்காப்பிடாரி இளைஞனான தன் மகன் யஸீதை ''முடிக்குரிய இளவரசர்'' எனவும் தனது வாரிசு எனவும் தெரிவுசெய்தார். இச்செயல் வருங்காலத்தில் நிகழ்ந்த வருந்துதற்குரிய பல சம்பவங்களுக்குக் காரணமாயிற்று. தனக்குப்பின் ஹஸன் கலீபாவாக வருவதைத் தான் அனுமதிக்கப்போவதில்லையென்பதையும் தன்னிடம் வேறு திட்டங்கள் உண்டு என்பதையும் முஆவியா ஏலவே குறிப்பால் உணர்த்தியிருந்தார். எனவே அவர் ஹஸனை நஞ்சூட்டிக் கொல்லச் செய்து தன் மகன் யஸீத் ஆட்சிப்பொறுப்பேற்பதற்கு வழி வகுத்தார்.

ஹஸனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுவதன் மூலம், நபிக்குடும்பத்தினரான ஷீஆக்கள் அமைதியான பாதுகாப்பான சூழலில் வாழ்வதற்கோ, அவர்கள் பணியை முன்பு போன்று தொடர்வதற்கோ தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதைத் தெட்டத் தெளிவாக்கிய முஆவியா அந்நோக்கத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தவுஞ் செய்தார். நபிக் குடும்பத்தினரின் நற்பண்புகளைப் பாராட்டும் ஹதீஸ்களைப் பரப்புபவர்களின் உயிருக்கும், வர்த்தகத்துக்கும் உடமைகளுக்கும் எத்தகைய பாதுகாப்பும் வழங்கப்பட மாட்டாவென அறிவிக்கு மளவுக்கு அவர் சென்றுர் [71]. அதே வேளை, ஏனைய நபித்தோழர்களையும், கலீபாக்களையும் பாராட்டும் ஹதீஸ்களை அறிவிப்போருக்கு உரிய சன்மானம் வழங்கப்படும் என ஆணை பிறப்பித்தார். இதன் விளைவாக நபித்தோழர்களைப் பாராட்டும் ஹதீஸ்கள் கணிசமான அளவு இக்கால கட்டத்தில் பதிவாயின. இவற்றுள் சில ஹதீஸ்களின் ஆதாரங்கள் சந்தேகத்துக்குரியவை.[72] இஸ்லாமிய நாடுகளெங்கும் பள்ளிவாசல் மிம்பர் (உபந்நியாசமேடை) களிலிருந்து அலியை இழிவுபடுத்துமாறு ஆணையிட்டார். உமர் இப்னு அப்துல் அஸீஸின் காலம் வரை இவ்வாணை நடைமுறையிலிருந்தது. அப்துல் அஸீஸ் இதனை நீக்கினார். [73]

தனது ஏஜெண்டுகள் படைத் தளபதிகள் முதலியோரின் உதவியுடன், அலீயின் கட்சியைச் சேர்ந்த மாபெரும் சான்றோர்களைக் கொலை செய்து, அவர்களின் தலைகளை ஈட்டிகளில் தாங்கிப் பல்வேறு நகரங்களினூடே பவனிவரச் செய்தார்[74]. பெரும்பான்மையான ஷீஆக்கள் அலீயை மறுதளிக்குமாறும், சபிக்குமாறும், அலீ மீது தமது வெறுப்பை வெளிக்காட்டு மாறும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவ்வாறு செய்ய மறுத்தோர் கொலை செய்யப்பட்டனர்.

ஷீஆயிஸத்தின் இருண்ட நாட்கள்

முஆவியாவின் இருபதாண்டு ஆட்சி ஷீஆக்களின் இருண்ட நாட்களாகும். இந்நாட்களில் ஷீஆக்களுக்கு எத்தகைய பாதுகாப்புமிருக்கவில்லை; ஆட்சியால் அவர்கள் சந்தேகிக்கப்பட்டு குறிவைத்து வேட்டையாடப்பட்டனர். இக்காலத்தில் வாழ்ந்த இருபெரும் இமாம்களான ஹஸன், ஹுஸைன் தாம் இத்தகைய எதிர்மறையான ஒடுக்குமுறைச் சூழலை மாற்றுவதற்கு எத்தகைய வசதிகளும் கொண்டிருக்கவில்லை. ஷீஆக்களின் மூன்றாவது இமாமான ஹுஸைன் முஆவியவுடைய ஆட்சியில் தாம் இமாமாக விருந்த பத்தாண்டு காலத்தின்போது ஷீஆக்களைக் கொடும் துன்புறுத்தல்களிலிருந்து விடுவிப்பதற்கு எத்தகைய சாத்தியப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. யஸீதுடைய ஆட்சியில் கிளர்ந்தெழுந்தபோது தமது உதவியாளர்கள், குழந்தைகள் யாவருடனும் கொலை செய்யப்பட்டார் இமாம் ஹுஸைன்.

முஆவியாவும் அவரது காவலர்களும், அணிகர்த்தர்களும் (இவர்களுள் சிலர் முஆவியாவைப் போன்றவர்கள்) புரிந்த அகம்பாவமான, நியாயமற்ற, பொறுப்பற்ற செயல்களை ஸுன்னியுலகைச் சேர்ந்த சிலர் மன்னிக்கப்படக் கூடியவையென விளக்குகின்றனர். திருநபியின் சில ஹதீஸ்களின் படி நபித் தோழர்கள் எவரும் இஜ்திஹாத் மேற்கொள்ள முடியும்; அவர்கள் புரிந்த பாவங்களை அல்லாஹ் மன்னித்துவிட்டான். அல்லாஹ் அவர்களுடன் திருப்தியுற்று அவர்கள் செய்திருக்கக்கூடிய தவறுகள் எவையாயிருப்பினும் அவற்றை மன்னித்துவிட்டான் என்றெல்லாம் இக்குழுவினர் வாதிக்கின்றனர். எவ்வாறிருந்த போதிலும், ஷீஆக்கள் இரு காரணங்களுக்காக இவ்வாதத்தை ஏற்றுக்கொள்வதில்லை :

1. நபியைப் போன்றவொரு மனித இனத்தலைவர் சத்தியத்துக்கும் நீதிக்கும், சுதந்திரத்திற்கும் புனர்வாழ்வளிக்க வென வெழுந்து தம் நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறு ஒரு குழுவினரை வற்புறுத்திவிட்டு - அப்புனிதப் பணியில்

அக்குழுவினர் அனைவருமே தம்வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டபின் - அப்புறம் அந்நோக்கம் நிறைவேறிய பின், தம் ஆதரவாளர்களும் தோழர்களும் அப்புனிதச் சட்டங்களைத் தம்போக்கில் சுதந்திரமாகக் கையாள்வதற்கு விட்டிருப்பார் என்பது நினைத்துப்பார்க்க முடியாததாகும். அவர்களது செயல்களையிட்டுப் பெருமானார் அப்படி அலட்சியம் காட்டியிருந்தால் தாம் உருவாக்கிய அவ்வமைப்பு அவ்வுருவாக்கத்துக்குப் பயன் பட்ட அதே சாதனங்களாலேயே உருக்குலைக்கப்பட்டிருக்கும்.

2. நபித் தோழர்கள் தாம் புரியக் கூடிய எல்லாச் செயல்களுக்கும் - அவை சட்டவிரோதமானதாயும், அனுமதிக்கப்படமுடியாதவையாயும் இருந்தபோதும் - முன்கூட்டியே மன்னிக்கப்பட்டு விட்டார்கள் என்று சித்தரிக்கும் அவ்வார்த்தைகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை, அவற்றின் ஆதார பூர்வ தன்மை மரபு முறைகளின் படி நிறுவப்படவில்லை, மேலும் நபித்தோழர்கள் ஒருவரோடொருவர் தாம் மீறப்படக்கூடாதவர்கள் என்ற முறையிலோ, தம் பாவங்கட்காக மன்னிக்கப்பட்டு விட்டவர்கள் என்ற முறையிலோ பழகவில்லையென்பது வரலாற்று ரீதியாக அறிய வந்துள்ளது. எனவே அவர்கள் ஒருவரோடொருவர் பழகிய விதம் கொண்டு கணிப்பதாயின் அத்தகையவார்த்தைகள் நேர்பொருளில் உண்மையல்லவெனத் தீர்மானிக்க முடியும். அவற்றில் ஏதாவது உண்மையான ஓரம்சம் இருக்குமாயின், அது பெருமானாருக்கு மிகவும் நெருக்கமாயிருந்த படியால் நபித்தோழர்கள் பொதுவாக ஒரு குழுவாய் அனுபவித்த நீதப்படி மீறப்பட முடியாத தன்மையையும், புனிதத்தையுமே அது குறிப்பதாயிருக்கும். அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் தாம் புரிந்த அருஞ்சேவைகள் காரணமாக நபித்தோழர்கள் குறித்து இறைவன் தன் திருமறையில் திருப்தி தெரிவித்திருப்பதானது[75]. அவர்களது கடந்த காலச் செயல்களையும், கடந்த காலத்தில் இறைவன் காட்டிய திருப்தியையும் குறிக்குமேயல்லாது, எதிர்காலத்தில் அவர்கள் செய்யக் கூடியவைகளையும் அவை குறித்த இறை திருப்தியையும் குறிக்காது.

உமையா ஆட்சி நிறுவப்படல்

60/680ம் ஆண்டு முஆவியா காலமானதும் அவரது மகன் யஸீத் கலீபாவானான். சமூகத்தின் சக்திமிகு அரசியல், ராணுவத் தலைவர்களிடமிருந்து முஆவியா தன் மகனுக்காக விசுவாசப் பிரமாணம் வாங்கியிருந்ததற் கொப்ப இது நடந்தது. யஸீதிடம் மதவொழுக்கம் காணப்படவில்லை யென்பதும் தன் தந்தையின் காலத்தில் கூட அவன் இஸ்லாமிய நெறி முறைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை யென்பதும் வரலாற்று ஆவணங்களி லிருந்து தெட்டத் தெளிவாகின்றன. அவன் ஒழுக்கக் கேடனாகவும் அற்பனாகவுமிருந்தான். அவனுக்கு முன் நடந்த எல்லாப் போராட்டங்களையும் மீறி அவனது மூன்ருண்டு கால கிலாபத் ஆட்சி அதற்கு முன் வரலாறு காணாத அழிவுகளுக்குக் காரணமாயிற்று.

யஸீதுடைய ஆட்சியின் முதலாண்டின்போது திருநபியின் பேரர் இமாம் ஹுஸைன் மிகவும் கொடுமையான முறையில் தம்முடைய குழந்தைகள் உறவினர்கள், நண்பர்கள் யாவருடனும் கொல்லப்பட்டார். நபிக்குடும்பத்தைச் சேர்ந்த சில பெண்மணிகளையும், பிள்ளைகளையும் கூடக் கொல்லச் செய்து அவர்களின் தலைகளை வெவ்வேறு நகரங்களில் காட்சிக்கு வைத்தான்[76]. தனது ஆட்சியின் இரண்டாம் ஆண்டின்போது மதீனத்து மக்களைக் கொன்றெழிக்குமாறு கட்டளையிட்டதுடன் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என வெறியாட்டம் நடத்துவதற்குத் தனது ராணுவவீரர்களுக்கு மூன்று நாள் சுதந்திரமளித்தான்.[77] மூன்ரும் ஆண்டு புனித கஃபாவை அழிக்கவும் தீயிலிடவுஞ் செய்தான்.[78]

யஸீதுக்குப்பின் மர்வானின் குடும்பம் கிலாபத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இது பற்றிய விவரங்கள் வரலாற்றுநூல்களில் பதிவாகியுள்ளன. பதினொரு உறுப்பினர் கொண்ட இக்குழுவினரின் ஆட்சி எழுபது ஆண்டுகாலம் நீடித்தது. இவ்வாட்சி அரசியல் ரீதியாக வெற்றிகரமானதாயிருந்த போதிலும் மதவிழுமியங்களைப் பொருத்தவரை இஸ்லாமிய இலட்சியங்களுக்கும், நடைமுறைகளுக்கும் மாற்றமானதாகவே

காணப்பட்டது. அரபிகள் மட்டுமே இஸ்லாமிய சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தினர். அரபிகளல்லாதோர் அரபிகளுக்கு அடிமைப்பட்டுக்கிடந்தனர். வாஸ்தவத்தில், வலிமைமிக்க சாம்ராஜ்ய மொன்று உருவாக்கப்பட்டு இஸ்லாமிய கிலாபத் எனப் பெயர் சூடிக்கொண்டது. இக்காலகட்டத்தில் கலீபாக்கள் சிலர் இஸ்லாமிய உணர்வுகளுக்கு மதிப்பளிக்காதவர்களாய்த் தோன்றினர் - எந்தளவுக்கென்ருல் அவர்களிலொருவர் - திருநபியின் பிரதிநிதியும் மதத்தின் பாதுகாவலருமான அவர் - இஸ்லாமிய நடைமுறைகளுக்கும் முஸ்லிம்களுடைய உணர்வுகளுக்கும் எத்தகைய மதிப்புமளிக்காமல், வருடாந்த புனித யாத்திரையின்போது தான் குதூகலித்துக் களிப்பதற்காக க.:.பாவுக்குமேல் அறையொன்று கட்டுவதற்குத் தீர்மானித்தார்.[78] இக்கலீபாக்களில் ஒருவர் தனது அம்புகளுக்கு குர்ஆனைக் குறியாக வைத்தார். ''இறுதித் தீர்ப்பு நாளில் இறைவன் முன் நீ தோன்றும்போது கலீபா உன்னைக் கிழித்துப் போட்டதாகச் சொல்'' எனக் குர்ஆன்பற்றிக் கவிதை வேறு எழுதினார்.[80]

இஸ்லாமியக் கிலாபத், மத அதிகாரம் ஆகிய இருவிடயங்களில் ஸுன்னிகளோடு அபிப்பிராய பேதம் கொண்ட ஷீஆக்கள் இயல்பாகவே, இக்காலகட்டத்தில் இன்னல்களுக்கும் கடுஞ்சோதனைகளுக்கும் ஆளாகினர். எனினும் அரசாங்கத்தின் அநீதத்தையும் பொறுப்பற்ற போக்குகளையும் மீறி நபிக்குடும்பத்தவர் கடைப் பிடித்த தவவொழுக்கமும் தூய்மையும் ஷீஆக்களின் நம்பிக்கைகளை மேலும் வளர்ந்து உறுதிபெறச் செய்தது. மூன்ருவது இமாம் ஹுஸைனின் சோக முடிவு குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விசேடமாகக் கிலாபத்தின் மையத்துக்கு வெகு தொலைவில் ஈராக், யெமன், பாரசீகம் போன்ற நாடுகளில் ஷீஆயிஸம் பரவுவதில் இச்சம்பவம் பிரதான பங்குவகித்தது. இஸ்லாமிய நூற்ருண்டு முடிவதற்குள் ஹுஸைன் மறைந்து நாற்பதாண்டுகளுக்குள் உமையா அரசாங்கத்தில் காணப்பட்ட உட்பூசல்களையும், பலவீனத்தையும் பயன்படுத்தி ஷீஆக்கள் தங்களை ஸ்தாபித்துக் கொள்ளத் தொடங்கி ஐந்தாம் இமாமைச் சுற்றி ஒன்று திரண்டனர். ஹதீஸ்களைச் சேகரிப்பதற்காகவும்,

இஸ்லாமிய அறிவியல்களைக் கற்பதற்கும் மக்கள் இஸ்லாமிய நாடுகளிலிருந்து அவரது வாயில் தேடிவந்தனர். முதலாம் நூற்றுண்டு இன்னும் முடிவடைந்திருக்கவில்லை. அரசாங்கத்தில் செல்வாக்கு வகித்த ஒரு சில தலைவர்கள். பாரஸீகத்தில் 'கும்' நகரை நிர்மாணித்து அதனை ஷீஆ குடியேற்றமாக்கினர். ஆனால் அப்போதும் கூட ஷீஆக்கள் பெரும்பாலும் தலைமறைவாகவிருந்தே, இரகசியமாகத் தம் மதவாழ்வைத் தொடர்ந்தனர்[81].

திருநபியின் சந்ததியினர் (பாரசீகமொழியில் ஸாதாத்தி அலவி என அழைப்பர்) அரசாங்கத்தின் அநீதிக்கெதிராய் அநேக முறை கிளர்ச்சி செய்தனர். ஆனால் ஒவ்வொருமுறையும் அவர்கள் முறியடிக்கப்பட்டு வழக்கமாக உயிரிழந்தனர். அந்நாளைய நெறிகெட்ட அரசாங்கம் அவர்களை நசுக்கி யொடுக்குவதில் எந்தவொரு வழியையும் விட்டுவைக்கவில்லை. 'ஸைதி' ஷீஆக்களின் தலைவரது சடலம் புதைகுழியிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டது: மூன்றுண்டுகள் தூக்கில் தொங்கிய பின் கீழிறக்கப்பட்டுத் தீயிலிடப்பட்டுச் சாம்பல் காற்றிலெறியப்பட்டது.[82] இரண்டாம் மூன்றும் இமாம்கள் முன்பு கொல்லப்பட்டது போலவே நாலாவது ஐந்தாவது இமாம்களும் நஞ்சூட்டப்பட்டனரெனச் ஷீஆக்கள் நம்புகின்றனர். [83]

உமையாக்களால் உண்டுபண்ணப்பட்ட அழிவுகள் பட்டவர்த்தனமானதாகவும், மூடுதிரையற்றதாகவும் இருந்தபடியால் பெரும்பான்மையான ஸுன்னிகள், கலீபாக்களுக்கு கீழ்ப்படிதல் தங்கள் கடமையெனப் பொதுவாகக் கருதிய போதிலும் மத உணர்வுகளின் உறுத்தல்கள் காரணமாகக் கலீபாக்களை இருவகையினராகப் பிரிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். ''நேர்வழி நடந்த கலீபாக்கள்'' (குல∴பாயே ராஷிதீன்) என நபி பெருமானின் மறைவுக்குப் பின் தோன்றிய முதல் நான்கு கலீபாக்களை (அபூபக்கர், உமர், உதுமான், அலீ) நேர்வழி நடந்த கலீபாக்களின் மதவொழுக்கப்பண்புகளைக் கொண்டிராத முஆவியா முதலானோரிலிருந்து அவர்கள் வேறுபடுத்திப் பார்க்கத் தொடங்கினர்.

உமையாக்கள் தங்களது அநீதமான ஒடுக்குமுறையாட்சி காரணமாக மக்களின் எதிர்ப்பைப் பெரிதும் சம்பாதித்துக் கொண்டனர். கடைசி உமையாக் கலீபா முறியடிக்கப்பட்டதும் அவரது இரு புதல்வர்களும் பெருந்தொகையான குடும்பத்தினரும் தலை நகரிலிருந்து தப்பிச் செல்லுவதற்கு கடுஞ்சிரமங்களை யனுபவிக்க வேண்டியிருந்தது. எப்பக்கம் திரும்பியபோதிலும் எவரும் அவர்களுக்கு அடைக்கலமளிக்கவில்லை. இறுதியாக நூபியா அபிஸீனியா, பஜாவாஹ் (நூபியாவுக்கும் அபிஸீனியாவுக்கும் இடையே) பாலைவனங்களில் அலைந்து திரிந்து பசியாலும் தாகத்தாலும் பலர் இறந்த பின் எஞ்சியோர் யெமனில் உள்ள பாப் அல்-மன்தாபை வந்தடைந்தனர். அங்கு பிரயாண செலவுக்காகப் பிச்சையெடுத்து கூலியாட்களாக வேடந்தரித்து மக்காவுக்குப் புறப்பட்டனர். மக்காவில் அவர்கள் மக்கள் கூட்டத்தின் மத்தியில் மறைந்து கொள்வதில் இறுதியாக வெற்றிகண்டனர்[84].

2ம்/8ம் நூற்றுண்டில் ஷீஆயிஸம்

2ம்/8ம் நூற்றுண்டின் முதல் மூன்றிலொருபகுதியின் பிந்திய நாட்களில் இஸ்லாமிய உலகு முழுவதிலும் உமையாக்களின் அநீதி, ஒடுக்குமுறை, தவறுன செயல்கள் காரணமாக கலகங்களும், கடும் போர்களும் மூண்டன. பாரஸீகத்தில் குராஸானில் நபி குடுபத்தவர் பெயரால் உமையா எதிர்ப்பு இயக்க மொன்று ஆரம்பமானது. பாரஸீகத் தளபதிஅபூ முஸ்லிம் மர்வாஸி இவ்வியக்கத்துக்குத் தலைமைதாங்கி உமையா ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சிசெய்து உமையா அரசாங்கத்தைக் கவிழ்க்கும் வரை படிப்படியாக முன்னேறிச் சென்ருர்[85].

இவ்வியக்கம் ஷீஆப் பின்னணியில் தோன்றி நபிகுடும்பத்தினர் இரத்தஞ் சிந்தப்பட்டதற்குப் பழிவாங்குவதாகக் கூறிக் கொண்டபோதும், அதற்கு விசுவாசப் பிரமாணஞ் செய்யுமாறு மக்கள் இரகசியமாகக் கேட்டுக் கொள்ளப்பட்டபோதும் அது நேரடியாக இமாம்களின் அறிவுறுத்தல்களிலிருந்து பிறக்கவில்லை. இவ்வுண்மை, அபூ முஸ்லிம் கிலாபத்தை மதீனாவில் வைத்து ஆளுவது இமாமுக்கு

வழங்கியபோது ''நீர் என்னுடையவர்களைச் சேர்ந்த வரல்ல; இது என்னுடைய நேரமுமல்ல'' என்று கூறி இமாம் கிலாபத்தைக் கையேற்க மறுத்து விட்டதிலிருந்து தெளிவாகிறது[86].

இறுதியாக நபிகுடும்பத்தவரின் பெயரால் அப்பாஸியர்கள் கிலாபத்தைக் கையேற்றனர்[87]. தொடக்கத்தில் அவர்கள் பொதுவாக மக்களிடத்தும், குறிப்பாக நபி குடும்பத்தவரிடத்தும் சிறிது கருணை காட்டினர். நபி குடும்பத்தவர்களது உயிர்த்தியாகத்திற்குப் பழிவாங்குவதாகக் கூறி அவர்கள் உமையாக்களைக் கொன்றனர். அவர்களின் புதைகுழிகளைக் திறந்து அவற்றில் எஞ்சிக் கிடந்த வற்றைத் தீக்கிரையாக்கினர்[88]. எனினும் சீக்கரமே அவர்களும் உமையாக்களின் அநீதியான வழிகளில் தாமும் செல்லத் தொடங்கினர். ஸுன்னி மத்ஹப்களிலொன்றின் ஸ்தாபகரான அபூஹனி∴பாவை அல்-மன்சூர் சிறையில் தள்ளி சித்திரவதை செய்தார்[89]. இன்னெரு மத்ஹபின் ஸ்தாபகரான இப்னு ஹன்பல் சாட்டையாலடிக்கப்பட்டார்[90]. நஞ்சூட்டப்பட்டும் கடும் சித்திரவதைகளுக்கும் ஆளாகி ஆரும் இமாம் மரணமானார்[91]. நபிக்குடும்பத்தின் சந்ததியினர் கூட்டமாகச் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர்; உயிருடன் புதைக்கப்பட்டனர். அரசாங்கக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் போது சுவர்களினுள் வைத்து உயிருடன் சமாதிகட்டப்பட்டனர்.

அப்பாஸியக் கலீபா ஹாரூன் அல் ரஷீதின் ஆட்சியின் போது இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் எல்லை விஸ்தரிப்பு உச்சமடைந்தது. ஹாரூன் அல் ரஷீத் அடிக்கடி சூரியனைப் பார்த்து இவ்வாறு கூறுவதுண்டு; '' நீ எங்கு வேண்டுமானாலும் ஒளிவீசு, ஆனால் என்னுடைய ராச்சியத்தை விட்டு உன்னால் நீங்க முடியாது''. ஒருபுறம் அவரது சைனியங்கள் கிழக்கிலும் மேற்கிலும் முன்னேறிக் கொண்டிருந்தன. அதேவேளை மறுபுறம் அவரது அரண்மனையிலிருந்து ஒரு சில அடிகளுக்கப்பால், பக்தாத் பாலத்தைக் கடக்க விரும்பிய மக்களிடமிருந்து அவரது அதிகாரிகள் அவருக்குத் தெரியாமலே வரி அறவிட்டுக் கொண்டிருந்தனர். ஒருநாள் கலீபாவே பாலத்தைக் கடக்க முற்பட்டபோது தடுத்து நிறுத்தப்பட்டுவரி கேட்கப்பட்டார்[92].

அப்பாஸியக் கலீபா அமீனின் சிற்றின்ப ஆசையைத் தூண்டுவதற்காக விரகதாபம் பொங்கும் கவிதைகளைப் பாடிய ஒரு பாடகனுக்கு மூன்று மில்லியன் திர்ஹம்கள் பரிசாக வழங்கப்பட்டது. பரவசம் கொண்ட பாடகர் கலீபாவின் காலடியில் விழுந்து " விசுவாசிகளின் தலைவரே, இவ்வளவு பணத்தையுமா எனக்குத்தருகிறீர்கள்?" என்றார். அதற்குக் கலீபா "பாதகமில்லை, நாட்டின் தெரியவராத ஒரு பகுதியிலிருந்து இப்பணம் எமக்குக் கிடைக்கிறது" என்று பதில் கூறினார்.

இஸ்லாமிய உலகின் எல்லா மூலைகளிலுமிருந்து தலைநகரில் வந்து குவிந்த பொது நிதியை நிரப்பிய பிரமாண்டமான செல்வம் ஆடம்பரத்தையும் உலக ஆசைகளையும் வளர்ப்பதற்கே உதவியது. இதன் பெரும்பகுதி அந்நாளைய கலீபாவின் சுகபோக வாழ்வுக்காக விரயமாயிற்று. சில கலீபாக்கள் வைத்திருந்த அழகிய அடிமைப் பெண்களின் தொகை ஆயிரத்துக்கும் அதிகமாகும். உமையாக்களின் ஆட்சி கலைக்கப்பட்டு அப்பாஸியர்களின் ஆட்சி நிறுவப்பட்டமையால் ஷீஆயிஸம் எவ்விதத்திலும் நன்மையடையவில்லை. ஷீஆயிஸத்தின் ஒடுக்கு முறையான அநீதமான எதிரிகள் தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டனர்; அவ்வளவுதான்.

3ம்/9ம் நூற்றாண்டில் ஷீஆயிஸம்

3ம்/9ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஷீஆயிஸம் மீண்டும் மூச்சுவிட முடிந்தது. கிரேக்க, சுரியானி மொழிகளிலிருந்து அநேக அறிவியல் தத்துவ நூல்கள் அரபுமொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டமையும் மக்கள் ஆர்வத்துடன் அறிவியல் விஞ்ஞானங்களைக் கற்கத் தொடங்கியமையும் இவ் வநுகூலமான நிலையை உருவாக்கியது. மேலும் அல்-மாமூன் 198/813ல் இருந்து 218/833 வரை முஃதஸிலாக்கள் பக்கம் சாய்வு கொண்டிருந்தார். அறிவு விசாரணைகளை அவர் ஆதரித்த படியால் பல்வேறு மதக் கண்ணோட்டங்களும் கருத்தாடல் புரியப்படுவதற்கு அவர் பூரண சுதந்திரமளித்தார். ஷீஆ மத அறிஞர்களும் கல்விமான்களும் இச்சுதந்திரத்தை முழுமையாகப்

பயன்படுத்தி அறிவியல் ஆய்வுகளில் ஈடுபடவும், ஷீஆப் போதனைகளைப் பரப்பவுஞ் செய்தனர். ஆதார பூர்வமான வரலாறுகளில் விவரிக்கப்பவதுபோல், அல்மாமூன் அந்நாளை அரசியல் சக்திகளின் கோரிக்கைகளின்படி கிலாபத் பொறுப்பை தமக்குப் பின் எட்டாவது ஷீஆ இமாமுக்கு வழங்கினார். இதன் விளைவாக நபிக்குடும்பத்தின் சந்ததியினரும் அவர்களின் நண்பர்களும் அரசாங்கநெருக்குதல்களிலிருந்து ஓரளவுக்குச் சுதந்திரம் பெற்றனர். நீண்ட காலஞ் செல்வதற்குள் வாளின் கூரியமுனை மீண்டும் ஷீஆக்களை நோக்கித் திரும்பியது. மறக்கப்பட்ட பழைய முறைகள் மீண்டும் தலையெடுத்தன. குறிப்பாக அல்-முத்தவக்கில் (233/847-247/861) லின் விஷயத்தில் இது உண்மையாகும். அலீ மீதும் ஷீஆக்கள் மீதும் அவர் வெறுப்பும் குரோதமும் கொண்டிருந்தார். அவரது ஆணையின் படி கர்பலாவில் மூன்றும் இமாமின் கல்லறை முற்றுக நிர்மூலஞ் செய்யப்பட்டது.

4ம்/10ம் நூற்றுண்டில் ஷீஆயிஸம்

4ம்/10ம் நூற்றாண்டுகளில் மீண்டும் உருவான சில நிலைமைகள் ஷீஆயிஸம் வளர்வதற்கும் வலுவடைவதற்கும் பெருந்துணை புரிந்தன. மத்திய அப்பாஸிய அரசு வலுவிழந்து காணப்பட்டது, புயித் ஆட்சியாளர்கள் தோன்றியமையும் இவற்றுள் ஒன்று. ஷீஆக்களான புயித்கள் பாரஸீகத்தின் மாகாணங்களிலும், கிலாபத்தின் தலைநகரான பக்தாதிலும், கலீபா மீதுங் கூட பெருஞ் செல்வாக்கு செலுத்தினர். கணிசமான அளவிலான இப் புதுவலிமை ஷீஆக்களை, முன்னர் தங்களை நசுக்க முனைந்த எதிரிகளுக்கு முகங்கொடுத்து கிலாபத் அரசின் ஆதரவுடன் கால்பதித்து நிமிர்ந்தெழச் செய்தது. ஷீஆக்கள் தம் மதக் கருத்துக்களை பகிரங்கமாகப் பிரச்சாரஞ் செய்யவும் சாத்திய மாயிற்று.

வரலாற்றாசிரியர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது போல், இந்நூற்றாண்டின் போது சில பெரும் நகரங்கள் நீங்கலாக அரபு தீபகற்பத்தின் பெரும் பகுதி ஷீஆக்களுடையதாயிருந்தது. ஹாஜர், உமான், ஸ, தாஹ்ற போன்ற சில பிரதான நகரங்கள் கூட

ஷீஆ மயமாயின. ஷீஆக்களின் மையமான கூஃபாவுடன் போட்டியிட்டு வந்த, எப்பொழுதும் ஸுன்னியாய் காணப்பட்ட பஸ்ராவில் கவனத்திற்குரிய ஷீஆக்களின் குழுவொன்று தோன்றிற்று. திரிப்போலி, நப்லுஸ், திபேரியஸ், அலெப்போ, நைஷாப்பூர், ஹேரத் ஆகிய இடங்களிலும் அநேக ஷீஆக்கள் காணப்பட்டனர். அஹ்வாஸும் பாரசீகக் குடாவில் பாரசீகத்தின் கரைப்பகுதிகளும் ஷீஆ மயமாயிருந்தன[95].

இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாஸிர் உத்ருஷ் வட பாரசீகத்தில் பலவாண்டுகள் மதப் பிரச்சாரத்தின் பின் தபாரிஸ்தானில் அதிகாரத்தைப் பெற்று உருவாக்கிய ஓர் இராச்சியம் அவருக்குப் பின்னரும் பல தலைமுறைகள் நீடித்தது. உத்ருஷுக்கு முன்பு, ஹஸன் இப்னு ஷைத் அல் அலவி தபாரிஸ்தானில் பலவாண்டுகள் ஆட்சிபுரிந்தார்[96]. இக்கால கட்டத்தில் மேலும், இஸ்மாயிலிய்யாக்களான ஃபாத்திமிகள் எகிப்தைக் கைப்பற்றி அங்கு ஒரு கிலாபத்தை உருவாக்கினர். இக்கிலாபத் இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக (296/908-567/1171) நீடித்தது[97]. பக்தாத், நைஷாப்பூர், கெய்ரோ போன்ற பிரதான தலை நகர்களில் ஸுன்னிகளுக்கும் ஷீஆக்களுக்குமிடையே அடிக்கடி மூண்ட தகராறுகள், சண்டைகள் சிலவற்றில் ஷீஆக்களின் கைமேலோங்கி வெற்றிபெற்றது.

5ம்/11ம் நூற்றுண்டிலிருந்து 9ம்/15ம் நூற்றுண்டுவரை ஷீஆயிஸம்.

4ம்/10ம் நூற்றுண்டிற் போலவே 5ம்/11ம் நூற்றுண்டிலிருந்து 9ம்/15ம் நூற்றுண்டுவரை ஷீஆயிஸம் தொடர்ந்து வளர்ச்சி பெற்றது[98]. இஸ்லாமிய உலகில் பல ஷீஆ அரசர்களும் ஆட்சியாளர்களும் தோன்றி ஷீஆப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். 5ம்/11ம் நூற்றுண்டின் இறுதியளவில் அலாமூத் கோட்டையில் இஸ்மாயிலிய்யாவின் மதப்பிரச்சாரப் பணி வேரூன்றி இஸ்மாயிலிகள் சுமார் அரை நூற்றுண்டு காலம் பாரசீகத்தின் மத்திய பகுதிகளில் பூரண சுதந்திரத்துடன் வாழ்ந்தனர். திரு நபி யின் சந்ததிகளான ஸாதாத்தி மராஷீயினரும் மஸந்தரானில் (தபா

ரிஸ்தான்) பலவாண்டுகள் ஆட்சிபுரிந்தனர்[99]. பிரபல மங்கோலிய ஆட்சியாளர்களில் ஒருவரான ஷாஹ் முஹம்மத் குதாபந்தாஹ் ஷீஆவாக மாறினார். அவரது சந்ததியினர் பாரசீகத்தில் பல வருடங்கள் ஆட்சி புரிந்து ஷீஆயிஸம் பரவக் காரணமாயினர்[100]. ஆக் கொயூன்லூ மற்றும் காரா கொயூன்லூ முதலிய அரசபரம்பரைகளைச் சேர்ந்த மன்னர்களைப் பற்றியும் குறிப்பிடப் படல் வேண்டும். இவர்கள் தப்ரீஸில் ஆட்சி புரிந்தனர். இவர்களது இராச்சியத்தின் எல்லை ஃபார்ஸுக்கும், கெர்மானுக்கும் வியாபித்திருந்தது[101]. எகிப்தில் அரசாண்ட பாத்திமி அரசாங்கம் பற்றியும் குறிப்பிட வேண்டும்.

மத சுதந்திரமும் மக்கள் மத்தியில் மத ஆட்சியையேற்படுத்தும் சாத்யப்பாடும் பல்வேறு ஆட்சியாளர்களின் கீழ் வேறுபட்டன. ஃபாத்திமி ஆட்சி முடிவுற்று ஐயூபிகளின் ஆட்சி தோன்றியதும் நிலைமை முற்றிலும் மாறியது. எகிப்திலும் ஸிரியாவிலும் ஷீஆக்களான மக்கள் தொகையினர் தம் மதச் சுதந்திரத்தை இழந்தனர். ஷீஆயிஸத்தைப் பின்பற்றுகிறார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஸிரியாவைச் சேர்ந்த ஷீஆக்கள் ஏராளமானோர் இக்காலகட்டத்தில் கொலைசெய்யப்பட்டனர். ஷீஆ சட்டக்கலையின் மாபெரும் அறிஞராகத் திகழ்ந்த ஷஹீத் அவ்வல் (முதல்தியாகி) முஹம்மத் இப்னு மக்கி இவ்வாறு கொலையுண்டவர்களில் ஒருவர், டமாஸ்கஸில் 786/138ல் இவர் கொல்லப்பட்டார்[102]. பாத்தினி போதனைகளையும், தத்துவத்தையும் வளர்க்கிறார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஷைத் அல் இஷ்ராக் ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரவர்த்தியும் அலெப்போவில் கொலை செய்யப்பட்டார்[103]. மொத்தத்தில் ஷீஆக்களின் மத அதிகாரமும் சுதந்திரமும் அப்போதைய ஆட்சியாளர்களிலும், உள்நாட்டு நிலைமைகளிலும் தங்கியிருந்தபோதிலும், எண்ணிக்கையில் அவர்கள் அதிகரித்துக் கொண்டிருந்தனர். எந்தவொரு இஸ்லாமிய அரசினதும் உத்தியோகபூர்வமான மதமாக ஷீஆயிஸம் இக்காலகட்டத்தில் ஒரு போதும் இருந்தில்லை.

10ம்/16ம் நூற்றுண்டிலும் 11ம்/17ம் நூற்றுண்டிலும் ஷீஆயிஸம்

சூஃபியும் , ஷிஆவுமான ஷைக் ஷாஃபி அல்-தீன் அர்திபிலி

(மறைவு 735/1334) என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த இஸ்மாயில் 10ம்/16ம் நூற்றூண்டில் தன் மூதாதையரின் சீடர்களான மூன்னூறு சூ∴பிகளுடன் சுதந்திர ஷீஆ நாடொன்றை உருவாக்கும் எண்ணத்துடன் கிளர்ச்சியொன்றைத் தொடங்கினார். இவ்வாறு பாரசீகத்தை முற்றுகையிடத் தொடங்கி உள்நாட்டு நிலப்பிரபுத்துவ இளவரசர்களுடன் மோதி வெற்றிகண்டார். உள்நாட்டு ஆட்சியாளர்களோடும், கலீபா பட்டத்தை வைத்துக் கொண்டிருந்த துருக்கியர்களோடும் பல போர்களை நடத்திப் பரசீகத்தை துண்டம் துண்டமாக வென்று ஒரு நாடாக உருவாக்குவதில் வெற்றிகண்டு ஷீஆயிஸத்தை தனது இராச்சியத்தின் உத்தியோக பூர்வ மதமாக ஆக்கினார்.[104.]

ஷா இஸ்மாயிலின் மறைவுக்குப் பின் மற்றைய ஸ∴பாவித் அரசர்கள் 12ம்/18ம் நூற்றூண்டு வரை பாரசீகத்தையாண்டனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஷீஆயிஸத்தை தொடர்ந்து உத்தியோக பூர்வ மதமாக வைத்திருந்ததோடு நாட்டில் அதனை வேரூன்றச் செய்தனர். அவர்களது ஆட்சியின் உச்சக் கட்டத்தில் ஷா அப்பாஸுடைய காலத்தில் பாரசீக ராஜ்யத்தின் எல்லைகளை விஸ்தரிக்கவும் ஜனத்தொகையை இரட்டிப்பாக்கவும்[105] ஸ∴பாவித்களால் முடிந்தது. ஏனைய முஸ்லிம் நாடுகளில் ஷீஆ சனத் தொகை முன்புபோலிருந்தோடு இயற்கையான வளர்ச்சியைக் கண்டது.

12ம்/18ம் நூற்றூண்டிலிருந்து 14ம்/20ம் நூற்றூண்டுவரை ஷீஆயிஸம்

கடந்த மூன்று நூற்றூண்டுகளில் ஷீஆயிஸம் முன்புபோல இயற்கையான வளர்ச்சி வீதம் கண்டது. இப்போது 14ம்/20ம் நூற்றூண்டின் பிற்பகுதியில் ஷீஆயிஸம் ஈரானில் உத்தியோக பூர்வ மதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. யேமனிலும் ஈராக்கிலும் பெரும்பான்மையினர் ஷீஆக்களாவர். முஸ்லிம்கள் வாழும் எல்லா நாடுகளிலும் குறிப்பிட்ட அளவு ஷீஆக்களைக் காண முடியும். இன்று உலக மக்கள் தொகையில் சுமார் எண்பது அல்லது தொன்னூறு மில்லியன் பேர் ஷீஆக்களாவர் எனக் கூறப்படுகின்றது.

குறிப்புகள்

அத்தியாயம் I

1. அல்லாஹ்வுடைய ரசூலின் காலத்தில் தோன்றிய முதல் சிறப்புப் பட்டம் ஷீஆ என்பதாகும், ஸல்மான், அபூதர், மிக்தாத், அம்மார் ஆகியோர் இப்பெயரால் அறிய வரப்பட்டனர். பார்க்கவும்: ஹாழிர் அல்-ஆலம் அல்-இஸ்லாமி, கெய்ரோ, 1352, வல் 1, பக் 188

2. குர்ஆன் 26:214

3. இந்த ஹதீஸ்படி, அலீ ''எல்லோரிலும் இளைஞனான நான் உங்கள் அமைச்சர் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளேன். நபிகளார் என் கழுத்தில் கை போட்டு 'இந்த மனிதர் என் சகோதரரும், வாரிசும், பிரதிநிதியுமாவார். நீங்கள் இவரைப் பின்பற்ற வேண்டும்' என்று கூறினார்கள். மக்கள் சிரித்துவிட்டு அபூதாலிபிடம் 'உம்முடைய மகனைப் பின்பற்றும்படி அவர் உமக்குக் கட்டளையிட்டுள்ளார்' என்றனர்'' எனக் கூறினார். த பாரி அல்-தாரிக், கெய்ரோ, 1325, வல் 1, பக். 166; இப்னு அல்-அதீர், அல் பிதாயா வல்-நிஹாயா, கெய்ரோ, 1358, வல் 3, பக். 39: பஹரானி, காயத் அல்-மராம், தெஹ்ரான், 1272. பக் 320 (ஆசிரியர் குறிப்பு: இந்த ஹதீஸும் மேற்கோள் காட்டப்பட்டுள்ள மற்றுஞ்சிலவும் ஒவ்வொரு முறையும் சிறு வித்தியாசத்துடன் தோன்றுவதை வாசகர் அவதானிப்பர். நூலாசிரியர் ஒவ்வொரு முறையும் வெவ்வேறு அறிவிப்புகளைப் பயன் படுத்தியிருப்பதே இதற்குக் காரணம்).

4. திரு நபியவர்கள், ''அலீ எப்பொழுதும் சத்தியத்துடனும் (ஹக்), குர்ஆனுடனும் இருக்கிறார். சத்தியமும், குர்ஆனும் எப்பொழுதும் அலீயுடன் இருக்கின்றன. இறுதித் தீர்ப்பு நாள்வரை இவர்கள் ஒன்றிலிருந்து மற்றவர் பிரிக்கப்படமாட்டார்'' என்று கூறியதாக விவரிக்கின்றுர் உம்மு ஸல்மா. இந்த ஹதீஸ் ஸுன்னி ஆதாரம் மூலம் பதினைந்து வழிகளிலும், ஷீஆ ஆதாரம் மூலம் பதினொரு வழிகளிலும் அறிவிக்கப் பட்டுள்ளது. உம்மு ஸல்மா, இப்னு அப்பாஸ், அபூபக்கர், ஆயிஷா, அலீ, அபூஸைத் குத்ரி, அபூலைலா, அபூ ஐயூப் அன்சாரி ஆகியோர் இதன் அறிவிப்பாளர்களில் அடங்குவர்.

காயத் அல்-மராம், பக் 539-540 ''அல்லாஹ் அலீயை ஆசிர் வதிப்பானாக ஏனெனில் சத்தியம் எப்பொழும் அவருடனேயே இருக்கிறது'' என்றும் நபிகளார் அருளியுள்ளார். அல்-பிதாயா வல்-நிஹாயா, வல்.2, பக் 36 .

5. ''பஞ்சாயம் பத்துப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்பது பகுதிகள் அலீக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு பகுதி எல்லாருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது'' எனப் பெருமானார் (ஸல்) கூறினார்கள். அல்-பிதாயா வல் -நிஹாயா, வல் 2, பக் 359. '' எனக்குப் பின் அலீயே மிகச் சிறந்த அறிவாளி'' என்ற நபிமொழியை ஸல்மான ∴பார்ஸி அறிவிக்கின்றுர். காயத் அல்-மராம், பக் 528. '' தீர்ப்பு வழங்குவதில் அலி மக்களில் மிகச் சிறந்தவர்' எனப் பெருமானர் கூறியதாக இப்னு அப்பாஸ் அறிவிக்கின்றார்- காயத் அல்-மராம் பக்கம் 528ல் குறிப்பிடப்படும் ∴பதாயில் அல்-ஸஹாபா என்ற நூலிலிருந்து ''அலீ சமுகமளித்தில்லாத போது அல்லாஹ் எனக்குக் கஷ்டமளிக்காதிருப்பானாக'' என்று உமர் அடிக்கடி கூறுவது வழக்கம் அல் பிதாயா வல் நிஹாயா, வல் 2, பக். 350.

6. ஆசிரியர் குறிப்பு: ஷீஆ நம்பிக்கையின்படி, இறுதி மக்கா யாத்திரைக்குப் பின் மதினாவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வழியில் கதீர்கும் என்ற இடத்தில் வைத்து நபிகள் பிரான் தம் மோடிருந்த பெருங்கூட்டத்தவர் மத்தியில் அலீயைத் தனது வாரிசாக த் தெரிவு செய்தார்கள். அலீயின் வாரிசுரிமை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அத்தி னத்தை ஷீஆக்கள் இன்றும் கொண்டாடி வருகின்றனர்.

7. கதீர்கும் பற்றிய ஹதீஸ் அதன் பல்வேறு அறிவிப்புகளில் ஸுன்னிகள் மத்தி யிலும் ஷீஆக்கள் மத்தியிலும் திட்டமாக நிறுவப்பட்டுள்ள ஹதீஸ்களில் ஒன்றாகும். நூற்றுக்கு மேற்பட்ட நபித்தோழர்களால் பல்வேறு வழிகளில் அறிவிக்கப்பட்டு ஸுன்னி நூல்களிலும், ஷீஆ நூல்களிலும் ஒரே விதமாய்ப் பதிவாகியுள்ளது. விபரங்க ளுக்குப் பார்க்கவும்; காயத் அல்-மராம், பக்.79 அபக்காத்-மூசாவி எழுதியது, இந்தியா, 1317 (கதீர் பற்றிய வல்யூம்); அமீனியின் அல் - கதீர், நஜா∴ப், 1372.

8. தாரிக்கி யாக்கூபி, நஜா∴ப், 1358, வல். 2 பக். 137 ம் 140ம்; தாரிக்கி அபீயில் ∴பிதா, வல். 1, பக்.156 ஸஹீஹ் புஹாரி, கெய்ரோ, 1315, வல். 1 , பக்.207 மஸ்ஊதியின் முருஜ் அல் -தஹாப், கெய்ரோ, 1367, வல். 2, பக்-437, வல்.3 21ம் 61ம்.

9. ஸஹீஹ் முஸ்லிம், வல் , பக். 176: ஸஹீஹ் புஹாரி, வல்.4 பக்207: முருஜ் அ ல்-தஹாப், வல்.3, பக் 23, வல்-2 பக். 437: தாரிக்கி அபில்∴பிதா, வல். 1, பக். 127, 181.

10. ''நாம் நபிகளாருடன் இருக்கையில் தூரத்திலிருந்து அலீ தோன்றினார். அப்போது நபிகளார், 'எனது உயிரைத் தன் கைகளில் வைத்துள்ள அவன் மீது ஆ ணையாக, இந்த மனிதரும் இவரது கட்சியாரும் (ஷீஆ) இறுதித் தீர்ப்பு நாளில் விமோசனமடைவார்கள்'' என்றூர்கள் என ஜாபிர் கூறுகிறார். ''(இன்னும்) பாருங்கள் ! விசுவாசங்கொண்டு நற்செயல் புரிபவர்கள்தான் படைப்புகளில் மிகவும் சிரேஷ்ட மானவர்கள் (குர்ஆன் 98.7) என்ற வசனம் அறிவிக்கப்பட்டபோது நபிகள் பிரான் அலீயி டம் இந்த வசனம் நீரும் உம்முடைய கட்சியாளர்களும் சம்பந்தப்பட்டது ; இறுதித் தீர்ப்பு நாளில் நீங்கள் ஈடேற்றம் காண்பீர்கள் இறைவனும் உங்களோடு திருப்தியடைவான்' என்று கூறினார்கள்'' என இப்னு அப்பாஸ் அறிவிக்கின்றூர். இவ்விரு ஹதீஸ்களும் இன்னும் அநேகமான வையும் ஸுயூத்தியின் அல்-தூர் அல்-மன்தூர் (கெய்ரோ 1313 வல். 6 பக். 379) என்ற நூலிலும் காயத் அல்-மராம் என்ற நூலிலும் (பக்.326) பதிவாகியுள்ளது.

11. முஹம்மத் (ஸல்) தங்களது மரணத்துக்குக் காரணமான நோயினால் வருந்துகையில் உஸாமா இப்னு ஸைத் தலைமையில் படையொன்றைத் திரட்டி எல்லோரும் மதினாவைவிட்டு வெளியேறிப் போரில் கலந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார்கள். அபூபக்கர், உமர் உட்படப் பலர் பெருமானாரின் கட்டளையை மீறினர். இது நபிகளாரைப் பெரிதும் சங்கடப்படுத்தியது. (ஷர்ஹ் இப்னு அபியில் ஹதீத், கெய்ரோ, 1329 , வல். 1. பக் 53) திரு நபியவர்கள் தம் மரணத் தறுவாயில் '' மையும், கடதாசியும் தயார்படுத்துங்கள், உங்களுக்கு வழிகாட்டுவதாகவும், நீங்கள் தவறுன வழியில் இட்டுச் செல்லப்படாமல் தடுப்பதற்காக நான் கடிதமொன்று எழுதுவிக்கவேண்டும்'' என்றூர்கள். உமர் இதனைத் தடுத்து ''அவரது சுகவீனம் அளவு கடந்து விட்டது, அவர் தன்னுணர்வு அற்று இருக்கிறூர்'' என்றூர். (தாரிக்கி தபாரி, வல்.2, பக் 436; ஸஹீஹ் புஹாரி, வல். 3: ஸஹீஹ் முஸ்லிம், கெய்ரோ, 1349, வல்.5 ;

அல்-பிதாயஹ் வல்- நிஹாயாஹ், வல். 5, பக். 227; இப்னு அபீயில்- ஹதீத், 1, பக்:133). முதலாம் கலீபாவின் மரணத்துக்குக் காரணமான நோயின் போதும் இதுபோன்றவொரு சம்பவம் நிகழ்ந்தது. முதலாம் கலீபா தமது இறுதி சாஸனத்தில் உமரைத் தெரிவு செய்தார். சாஸனத்தைத் தயாரிக்கும் போது கலீபா மயக்கமுற்றார், அப்போது உமர் ஒன்றுஞ் சொல்லவில்லை. அவர் தன்னுணர்வற்று இருக்கிறார் எனக் கருதவும் இல்லை. திருநபியவர்கள் வழி காட்டலுக்கான கடிதத்தை எழுதுமாறு கேட்டுக்கொண்டபோது தவறு செய்யாதவர்களாகவும், பூரணப் பிரக்ஞையுள்ள வர்களாகவுமிருந்தார்கள்: (ரவ்லத் அல்-ஸஃபா- மீர் கவாந் எழுதியது, லக்னோ 1332 வல் 2. பக்:260.)

12. இப்னு அபீயில் ஹதித், வல் 1 பக்.58 பக். 103- 135; தாரிக்கி யாக்கூபி, வல்.2, பக் 102; தாரிக்கி தபாரி வல்.2, பக் 445-460.)

13. தாரிக்கி யாக்கூபி, வல்.2, பக். 103-106: தாரிக்கி அபீயில் ஃபபிதா, வல்.1, பக் 156-166: முரூஜ் அல்-தஹாப், வல் 2, பக் 307 - 352; இப்னு அபீயில் ஹதீத், வல் 1, பக் 17ம்-134ம் இப்னு அப்பாஸின் ஆட்சேபனைக்கு உமர் இவ்வாறு பதில் கூறினார்: ''அல்லாஹ்வின் மீது ஆணையாக கலீபாவாக வருவதற்கு எல்லோரையும் விட அலீயே தகுதி மிக்கவர்- ஆனால் மூன்று காரணங்களுக்காக அவரை நாம் புறமொதுக்கினோம்: (1) அவர் மிகவும் இளவயதினர். (2) அவர் அப்துல் முத்தலிபின் வழித்தோன்றலைச் சேர்ந்தவர் (3) நபித்துவமும் கிலாபத்தும் ஒரே குடும்பத்தினரிடமிருப்பதை மக்கள் விரும்பவில்லை.'' இப்னு அபீயில்- ஹதீத், வல்.1, பக். 134) இப்னு அப்பாஸிடம் உமர் கூறினார்: ''அல்லாஹ் மீது ஆணையாக அலீயே கிலாபத்துக்குத் தகுதியானவர். ஆனால் குறைஷிகளால் அவரது கிலபத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமலிருக்கும். அவர் கலீபாவாக மாறினால் தூய்மையான சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுமாறும் நேர் வழி நடக்குமாறும் மக்களை பலவந்தஞ் செய்வார். அவரது கிலாபத்தில் அவர்களால் நீதியின் எல்லைகளை மீற முடியாது போகும். எனவே அவர்கள் அவருக்கெதிராகப் போருக்கு முனைவார்கள்'' (தாரிக்கி யாக்கூபி, வல்.2, பக் 137).

14. ''அபூபக்கருக்கு விசுவாசப் பிரமாணஞ் செய்ய யாரேனும் மறுத்தார்களா? என்று அம்ர் இப்னு ஸைத்திடம் கேட்க, அதற்கு ஸைத் ''மதப்புரட்டர்களாக மாறிவிட்டவர்கள் அல்லது அப்படி மாறப்போகிறவர்களைத் தவிர வேறுயாரும் மறுக்கவில்லை'' எனப் பதில் கூறினார். (தாரிக்கி தபாரி, வல்.2, பக் 447).

15. ஸகலைன் என்ற பிரசித்தமான ஹதீஸில் திருநபியவர்கள் மொழிந்தார்கள். ''பெறுமதியான இரண்டை நான் உங்களிடம் பொறுப்பாக விட்டுச் செல்கிறேன், அவற்றை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டால் நீங்கள் வழிகெடமாட்டீர்கள். அவை திருக்குர்ஆனும் என் குடும்பத்தைச் சேர்ந்தோருமாகும். இறுதித் தீர்ப்பு நாள் வரை இவை பிரிக்கப்படமாட்டா'' இந்த ஹதீஸ் நூற்றுக்கு மேலான வழிகளில் முப்பத்தைந்துக்கும் அதிகமான நபித்தோழர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அபகாத், ஸகலைன் பற்றிய வல்யூம்; காயத் அல்-மராம், பக் 211) நபிகளார் நவின்றார்கள். : ''நான் அறிவென்னும் பட்டினம்; அலீ அதன் நுழைவாயில் எனவே அறிவைத்தேடுவோர் எவரும் அதன் வாயிலினூடாகவே நுழைய வேண்டும்''. (அல் பிதாயாஹ் வல்-நிஹாயாஹ், வல். 7, பக். 359).

16. யாக்கூபி, வல்.2, பக் 105-150 இது இங்கு அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

17. அல்லாஹ்வின் திருமறையும், திருநபியின் ஹதீஸ்களும்,

நபிக்குடும்பத்தினரின் மொழிகளும் அறிவைத் தேடிப் பெறுவதை ஊக்குவிக்கின்றன. '' அறிவைத் தேடிப் பெறுவது ஒவ்வொரு மு.்.மினினதும் கடமையாகும்,'' என்பது நபிவாக்கு. மஜ்லிஸியின் பிஹார் அல்-அல்வார், தெஹ்ரான், 1301-15, வல்.1, பக் .55.

18. அல் பிதாயாஹ் வல்-நிஹாயாஹ், வல்.7, பக் 360.

19. பதிப்பாசிரியர் குறிப்பு: இஸ்லாத்துக்கு முந்திய அரேபியாவில் குறைஷி வம்சமே மிகவும் உயர்குலமாக விருந்தது. இவ்வம்சத்திலேயே திருநபி தோன்றினார். ஆனால் க.்.பாவின் காவலர்கள் என்ற முறையில் இவர்கள் முதலில் முஹம்மதின் நபித்துவத்தை எதிர்த்தனர். நபிக் கெதிராகக் கடுமையான எதிர்ப்பைக் காட்டினர். பின்பே அவர்கள் புதிய மதத்திடம் சரணடைந்தனர். அவர்கள் குறிப்பாக திருநபியுடன் நேரடித் தொடர்பு கொண்ட கிளையினர். எப்பொழுதும் தொடர்ந்து கௌவரமான இடத்தை வகித்து வருகின்றனர்.

20. தாரிக்கி யாக்கூபி, பக் 3, 126-129

21. பதிப்பாசிரியர் குறிப்பு: நபிமொழிகளில் அடங்கியுள்ள பாரம்பரியங்கள் ஹதீஸ் எனப்படும். முஸ்லிம்கள் அனைவருக்கும் அழகிய முன்மாதிரியாக அமைந்த திருநபியின் நடத்தைகள், செயல்கள், சொற்கள் யாவும் சுன்னா எனப்படும்.

22. அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறுன்: ''. . .பாருங்கள்! இது மகத்தான வேதநூலாகும். இதன் முன்னாலும் பின்னாலுமிருந்து பொய்மை இதனை அண்டமுடியாது . . . (குர்ஆன் 41:41-42) . . . மேலும் அவன் கூறுகிறுன்! தீர்ப்பு அல்லாஹ்விடம் மட்டுமே உள்ளது. . .'' (குர்ஆன் 6:57, அத்துடன் 12:40-67) நபித்துவம் மூலம் மனிதனை அடைய வேண்டிய ஷரீஅத்தும் அல்லாஹ்வுடைய சட்டங்களும் ஒரே ஷரீஆவாகும். என்பதே இதன் அர்த்தம்! இன்னும் அவன் கூறுகிறுன்: ''. . . ஆனால் அவர் (முஹம்மத்) அல்லாஹ்வின் தூதரும் நபிமார்க்கெல்லாம் முத்திரையுமாவார். . .'' (குர்ஆன் 33, 40) இன்னும் அவன் கூறுகிறுன்: ''. . .அல்லாஹ் அருளியதைக் கொண்டு எவர் தீர்ப்புக்கூற வில்லையோ அவர் அவிசுவாசியாவார்'' (குர்ஆன் 5:44).

23. பதிப்பாசிரியர் குறிப்பு: ஷீஆ ஆதாரங்களின் படி பெருமானார் காலமானதும் மக்கள் பனீஸாயிதாஹ் வுடைய ''மூடிய வாயில் மண்டபத்தில் (ஸகீ.்.பாஹ்) ஒன்றுகூடி அபூபக்கரைக் கலீபாவாக ஏற்று விசுவாசப் பிரமாணஞ் செய்தனர். 'மையும் கடதாசியும்' என்ற ஹதீஸ், மேலே குறிப்பு 11ல் விவரிக்கப்பட்டதுபோல் பெருமானாருடைய வாழ்வின் கடைசிக் கணங்களைக் குறிக்கின்றது.

24. பதிப்பாசிரியர் குறிப்பு: முஜ்தஹித் என்பவர் மதஅறிவில் தமக்குள்ளஅதிகார பூர்வமான ஞானமும், தார்மீக ஒழுக்கப்பண்புகளும் காரணமாக இஜ்திஹாத் கடைப்பிடிப்பதற்கு ஷரீஅத் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் புதிய அபிப்பிரா யங்களை வெளியிடுவதற்கு உரிமை பெற்றவராவர். சட்டத்தின் அடிப்படைகளைக் கொண்டு சுதந்திரமாகத் தீர்ப்பு வழங்கும் அல்லது, இஜ்திஹாதைக் கடைப்பிடிக்கும் உரிமை 3ம்/9ம் நூற்றுண்டிலிருந்து ஸுன்னி சிந்தனையில் மறைந்துவிட்டது. ஆனால் ''இஜ்திஹாதின் கதவு ஷீஆ சிந்தனையில் எப்பொழுதும் திறந்தே இருந்து வந்துள்ளது. புனித சட்டத்தில் அதிகார பூர்வஅறிவுபெற்றவர்கள் ஷீஆயிஸத்தில் முஜ்தஹித்கள் என அழைக்கப்படுகின்றனர்.

25. தாரிக்கி யாக்கூபி, வல்.2, பக். 110, தாரிக்கி அபீயில் ்.பிதா, வல். 1, பக் 158.

26. பதிப்பாசிரியர் குறிப்பு: திருநபியின் குடும்பத்தினர்க்கு வழங்கப்பட்டு வந்த மதவரி. நபிகளாரின் மரணத்தின் பின் இவ்வரி ஸுன்னி இஸத்தில் நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால் ஷீஆ இஸத்தில் இது இன்றுவரை தொடர்கின்றது.

27. அல் துர் அல்-மன்தூர், வல்.3, பக். 186: தாரிக்கி -இ-யாக்கூபி, வல்.2, பக்.48, இவற்றுக்கு மேலாக கும்ஸின் அத்தியாவசியம் திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ளது ''இன்னும் அறிந்துகொள்ளுங்கள் இலாபமாக கிடைத்த நீங்கள் என்ன பொருளை எடுத்துக் கொண்டாலும், அதில் ஐந்தில் ஒரு பகுதி (கும்ஸ்) அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் அவரது உறவினர்க்கும் உரியதாகும்.'' (குர்ஆன் 8:41).

28. அபூபக்கர் தமது கிலாபத் ஆட்சிக்காலத்தில் ஐநூறு ஹதீஸ்களைச் சேகரித்தார். ''ஒரு நாளிரவு எனது தந்தையார் காலைவரை மனக்குழப்ப முற்றிருப்பதைக் கண்டேன். காலையில் அவர் என்னிடம் ''ஹதீஸ்களைக் கொண்டுவா'' என்றார். பின்னர் அவற்றைத் தீயிலிட்டார்.'' என ஆயிஷா விவரிக்கின்றார். (அலா அல்-தீன் முத்தக்கியின் கன்ஸ் அல்-உம்மால், ஹைதராபாத், 1364-75 வல் 5, பக் 237) ஹதீஸ்களை யார் வைத்திருப்பினும் அவற்றை அவர் தீக்கிரையாக்கிவிடவேண்டும் என அறிவித்து சகல நகரங்களுக்கும் உமர் எழுதினார். (கன்ஸ் அல்-உம்மால், வல் 5, பக். 237). உமரின் ஆட்சிக் காலத்தில் ஹதீஸ்கள் பெருகத் தொடங்கின. அவை அவரிடம் கொண்டு வரப்பட்டபோது அவர் அவற்றை தீக்கிரையாக்குமாறு கட்டளையிட்டார்.'' (தபக்காத் இப்னு ஸஅத், பெய்ரூத், 1376, வல் 5 பக். 140).

29. பதிப்பாசிரியர்: அபூபக்கர், உமர், உதுமான், அலீ, ஆகிய முதல் நான்கு கலீபாக்களும் குலபாயே ராஷிதீன் (நேர்வழிநடந்த கலீபாக்கள்) எனப்பட்டனர். அவர்களது ஆட்சி உமையாக்களின் ஆட்சியிலிருந்து பெரிதும் வேறுபட்டது. அவர்களது ஆட்சி மதத்தன்மை வாய்ந்ததாகக் காணப்பட்டது. ஆனால் உமையாக்கள் ஆட்சி பௌதீகத்தன்மை வாய்ந்ததாய், உலகியல் நோக்கங்கொண்டதாயிருந்தது.

30. தாரிக்கி அபியில் ஃபிதா, வல் 1 பக்.151, இதுபோன்ற மற்றும் ஆதார நூல்கள்.

31. பதிப்பாசிரியர் : முஸ்லிமல்லாத வாசகரின் நன்மைக்காக, எல்லா திகதிகளும் ஹிஜ்ராவுக்குப் பின் (ஹிஜ்ராவிலிருந்து தொடங்கும் சந்திரவருட இஸ்லாமியக் கலண்டர்) கி.பி. ஆண்டுகள் இரண்டிலும் (13/634-25/644) தரப்படும். ஒரு நூற்றாண்டைப் பற்றிக் குறிப்பிடும்போது நாம் முதலில் இஸ்லாமிய நூற்றாண்டையும் அப்புறம் அதனைக் குறிக்கும் கிறிஸ்தவ நூற்றாண்டையும் தந்துள்ளோம். (4ம்/10ம்/ நூற்றாண்டு).

32. தாரிக்கி யாக்கூபி, வல் 11, பக் 131; தாரிக்கி அபீயில்-ஃபிதா, வல் 1, பக் 160.

33. இப்னு அதீரின் உஸ்த் அலர்-காபாஹ், கெய்ரோ, 1280, வல்.4, பக். 386; அல்-இஸாபஹ்-இப்னு ஹஜர் அஸ்கலானி எழுதியது, கெய்ரோ, 1328, வல். 3.

34. தாரிக்கி யாக்கூபி, வல்.2. 150; அபுல் ஃபிதா, வல் 1 பக் 168: தாரிக்கி தபாரி, வல்.3: பக் 377.

35. தாரிக்கி யாக்கூபி, வல்.2, பக் 150: தாரிக்கி தபாரி, வல்.3, பக் 397.

36. தாரிக்கி தபாரி, வல்.3: பக் 402-409 தாரிக்கி யாக்கூபி, வல்.2, பக் 150-151.

37. தாரிக்கி தபாரி வல்.3, பக் 377.

38. ஷஹீஹ் புஹாரி, வல்.4, பக் 98, தாரிக்கி யாக்கூபி, வல்.2, பக் 113.

39. யாக்கூபி, வல்.2, பக்.3; தபாரி வல்.3, பக் 129-132.

40. பதிப்பாசிரியர் குறிப்பு: இல்ம் என்ற வார்த்தை பரந்த அர்த்தத்தில் அறிவைக் குறிக்கும் ஸயன்ட்டியா என்கிற லத்தீன் வார்த்தையைப்போல, மத அறிவையும் அதே போன்று அறிவின் தத்துவ, புத்திபூர்வ, பகுத்தறிவு வடிவங்களையும் குறிக்கும். பொதுவாக மஅரி∴பா அல்லது இர்∴பான் என்ற ஆத்ம ஞானத்திலிருந்து வேறுபட்டது. இல்ம் என்பது ஒரு புனிதப் பண்பு என்பதனாலும் 'அல்ஆலிம்-அறிந்தவன் - என்பது இறைவனின் திருநாமங்களிலொன்று என்பதானாலும் சில முஸ்லிம் ஞானிகள் அதனை இர்∴பானை விடவும் மேலாக உயர்ந்த அர்த்தத்ததில் கருதுகின்றனர்.

41. தாரிக்கி யாக்கூபி, வல்.2, பக். 113, இப்னு அபில் ஹதீத், வல் 1. பக் 9.

42. பதிப்பாசிரியர் குறிப்பு: அமீருல் மு∴மினினீன் (விசுவாசிகளின் தலைவர்) என்றபட்டம் ஷீஆயிஸத்தில் அலீயை மட்டுமே குறிப்பிடும்; ஸுன்னி இஸத்திலே பொதுவாக இது எல்லா கலீபாக்களுக்கும் வழங்கப்படுகிறது.

43. யாக்கூபி, வல்.2, பக் 154.

44. யாக்கூபி, வல்.2. 155; முரூஜ் அல்-தஹாப், வல்.2, பக் 364.

45. பதிப்பாசிரியர்: 'புரட்சிகர என்பது இன்று வழங்கப்படும் அர்த்தத்தில் இங்கே தரப்படவில்லை. பாரம்பர்ய அர்த்தத்தில் ஒரு புரட்சி இயக்கம் என்பது உன்னதமான ஒரு முறைமையின் மாறாத அடிப்படைகளை மீள நிறுவுவது அல்லது மீளவும் பிரயோகிப்பதாகும். ஆனால் பாரம்பர்ய எதிர்ப்பு அர்த்தத்தில் புரட்சியென்பது இவ்வடிப்படைகளை அல்லது நிலவுகின்ற எத்தகைய சமூக அமைப்பையும் எதிர்ப்பதாகவே உள்ளது.

46. நஹ்ஜ் அல் -பலாகாஹ், பதினைந்தாவது உபந்நியாசம்.

47. முரூஜ் அல்-தஹாப், வல்.2, பக்.362; நஹ்ஜ் அல்-பலாகாஹ், உபந்நியாசம் 122: யாக்கூபி, வல்.2, பக் 160: இப்னு அபியில்-ஹதீத், வல் 1, பக். 180.

48. யாக்கூபி, வல்.2, பக். 156; அபுல் ∴பிதா, வல். 1, பக்.172: முரூஜ் அல்-தஹாப், வல்.2, பக் 366.

49. யாக்கூபி, வல்.2, பக். 152.

50. பதிப்பாசிரியர் குறிப்பு: முஹாஜிரீன் என்பது நபிபெருமானுடன் மக்காவிலிருந்து மதினாவுக்குப் புலம்பெயர்ந்த இஸ்லாத்தைத் தழுவிய ஆரம்பகால முஸ்லிம்களைக் குறிக்கும்.

51. யாக்கூபி, வல்.2, பக். 153; அபுல் ∴பிதா, வல் 1, பக்.171.

52. யாக்கூபி, வல்.2, பக் 152.

53. கலகக்காரர்களால் சுற்றிவளைத்துக் கொள்ளப்பட்ட உதுமான் உதவி கேட்டு முஆவியாவுக்கு எழுதினார். முஆவியா பன்னிரண்டாயிரம் பேர் கொண்ட

ராணுவத்தைத் திரட்டி மதினா நோக்கியனுப்பினார். ஆனால் அவர்களை டமாஸ்கஸைச் சுற்றி முகாமிடச் செய்துவிட்டு, தாமே உதுமானிடம் வந்து ராணுவம் தயார்நிலையில் உள்ளதென அறிவித்தார். அப்போது உதுமான் கூறினார்: '' நான் கொல்லப்பட வேண்டுமென்பதற்காகவே நீர் ராணுவத்தை வழியில் நிறுத்திவிட்டீர். அப்புறம் எனது இரத்தஞ் சிந்தப்பட்டதைக் காரணங்காட்டி உம்மால் கலகஞ் செய்யமுடியும்'' யாக்கூபி, வல்.2, பக். 152; முரூஜ் அல்-தஹாப், வல்.2, பக் 25: தபாரி வல்.3, பக். 403.

54. முரூஜ் அல்-தஹாப், வல் 11, பக் 415.

55. உதாரணத்துக்கு '' அவர்களிலுள்ள பிரதானிகள், நீங்கள், உங்கள் தெய்வங்களுக்கு ஆதாரவாக இருங்கள்' என்று சொல்லிக் கொண்டு திரிவார்கள்'' (குர்ஆன் 38:6) ''இன்னும் நாம் உம்மை முற்றிலும் உறுதியானவராக ஆக்கியிராவிடில் நீர் பெரும்பாலும் அவர்கள் பக்கம் சற்றே சாய்ந்திருப்பீர்.'' (குர்ஆன் 17:74) ''அவர்கள் விட்டுக் கொடுக்கும் வண்ணம் யார் உம்மை விட்டுக்கொடுக்கச் செய்திருப்பார்'' (குர்ஆன் 68,9) முதலில் வசனங்கள் அருளப்பட்ட சூழ்நிலையை விவரிக்கும் பாரம்பரிய விரிவுரைகளைக் கவனியுங்கள்.

56. முரூஜ் அல்-தஹாப், வல் 2, பக். 431: இப்னு அபீயில் ஹதீத், வல். 1, பக். 181.

57. அபுல்ஃபிதா, வல் 1, பக் 182: இப்னு அபியில்- ஹதீத், வல் 1, பக். 181

58. நஹ்ஜ் அல்-பலாகாஹ்: ஸுன்னி, ஷியா கிரந்தங்களில் காணப்படும் ஹதீஸ்கள்.

59. ஆமிதியின் கித்தாப் அல்-குரார் வல்-துரார். ஸிடொன், 1349.

60. ஸுயூத்தியின் நஹ்வ் (இலக்கணம்) போன்ற படைப்புகள், தெஹ்ரான், 1281 வல்.2 இப்னு அபீயில்-ஹதீத், வல்.1 பக். 6.

61. பார்க்கவும் நஹ்ஜ் அல்-பலாகாஹ்.

62. ஜமல் யுத்தத்தின்போது ஒரு கிராமப்புற அரபி அலீயிடம் வினவினார். '' விசுவாசிகளின் தலைவரே! நீங்கள், இறைவன் ஒருவன் என்கிறீர்கள்?'' மக்கள் இருபக்கங்களிலிருந்தும் அம்மனிதரைத் தாக்கிக் கொண்டு கூறினர் ''உமக்குத் தெரியவில்லையா அலீ கவலையோடிருப்பது? பல்வேறான விவகாரங்களில் அவர் மனம் லயித்திருப்பது?'' அப்போது அலீ தன் தோழர்களிடம் '' இந்த மனிதரை விட்டு விடுங்கள். இந்த மக்களுடன் நான் போரிலீடுபட்டிருப்பதே, மதத்தின் உண்மையான சித்தாந்தங்களையும் நோக்கங்களையும் தெளிவு படுத்திக் கொள்வதற்தகாக வன்றி வேறெதற்குமல்ல'' என்றூர். பின்னர் அம்மனிதரின் கேள்விக்குப் பதில் சொல்லத் தொடங்னினார். பிஹார் அல்-அன்வார், வல்.2, பக் 65.

63. இப்னு அபீயில் ஹதீத், வல்.1, பக் 6-9.

64. யாக்கூபி, வல்.2, பக் 191 மற்றும் வரலாற்று நூல்கள்.

65. யாக்கூபி, வல்.2, பக்; 192 அபுல் ஃபிதா, வல்.1 பக் 183.

66. முஹம்மத் அல்-அலவியின் அல்-நஸாயிஹ் அல்-காஃபியாஹ், பக்தாத், 1368, வல்.2, பக். 161, மற்றும் நூல்கள்.

67. யாக்கூ∴பி, வல்.2, பக். 193

68. யாக்கூபி, வல்.2, பக் 207.

69. யஸித் காமவெறி பிடித்த தூர்த்தன், எப்போதும் குடிபோதையிலிருந்தான். பட்டுடையுடுத்தான். முறைகேடாக உடையணிந்தான். அவனது இரவு விருந்துகளில் இசையும் மதுவும் பொங்கி வழிந்தன. அவன் ஒரு நாயையும், குரங்கையும் வைத்திருந்தான். அவையே அவனின் தோழர்கள் அவனது குரங்குக்கு அபூ கைஸ் என்று பெயரிடப்பட்டிருந்தது. அக்குரங்குக்கு அழகிய ஆடைகளை அணிவித்து, அவனது மதுபான விருந்து கேளிக்கைளில் கலந்து கொள்ளச் செய்தான். சில சமயங்களில் அதனைக் குதிரையிலேற்றி ஓட்டப்பந்தயங்களுக்கு அனுப்புவான். யாக்கூபி, வல்.2, பக். 196; முரூஜ் அல் தஹாப் 3, பக். 77.

70. முரூஜ் அல் தஹாப், வல்.3, பக். 5; அபுல் ∴பிதா வல்.1, பக். 183.

71. அல்-நஸாயிஹ் அல்-கா∴பியாஹ் பக். 72; கிதாப் அல்-அஹதீ ஸிலிருந்து விவரிப்பட்டடுள்ளது.

72. யாக்கூபி, வல்.2, பக். 199-210; அபுல் ∴பிதா, வல் 1, பக்186; முரூஜ் அல்-தஹாப், வல்.2, பக் 33-35.

73. அல்-நஸாயிஹ் அல்-கா∴பியாஹ், பக். 72-73

74. அல்-நஸாயிஹ் அல்-கா∴பியாஹ், பக். 58, 64, 77-78

75. பார்க்கவும்: குர்ஆன், 9:100

76. யாக்கூபி, வல்.2, பக். 216; அபுல் ∴பிதா, வல் 1, பக் 190; முரூஜ் அல்-தஹாப், வல்.3, பக். 64, மற்றும் வரலாற்று நூல்கள்.

77. யாக்கூபி, வல்.2, பக் 223: அபுல் ∴பிதா, வல்.1, பக் 192; முரூஜ் அல்-தஹாப், வல்.3, பக். 78.

78. யாக்கூபி, வல்.2, பக். 224; அபுல் ∴பிதா, வல்.1, பக். 129; முரூஜ் அல்- தஹாப், வல்.3, பக் 81.

79. வலீத் இப்னு யஸீத்; யாக்கூபியில் குறிப்பிடப்பட்டுள்ளது, வல்.3, பக். 73.

80. வலீத் இப்னு யஸீத்; முரூஜ் அல்-தஹாபில் குறிப்பிடப்பட்டுள்ளது. வல்.3, பக். 228.

81. முஜாம் அல்-புல்தான், யாக்கூத் ஹமவி, பெய்ரூத், 1957.

82. முரூஜ் அல்-தஹாப், வல் 3, பக். 217-219; யாக்கூபி, வல்.2, பக் 66.

83. பிஹார் அல்-அன்வார், வல்.3; மற்றும் ஷீஆ ஆதார நூல்கள்.

84. யாக்கூபி, வல்.3, பக். 84.

85. யாக்கூபி, வல்.3, பக். 179; அ புல் ∴பிதா, வல் 1, பக் 208 ; மற்றும் வரலாற்று நூல்கள்.

86. யாக்கூபி, வல்.3, பக் 86; முரூஜ் அல்-தஹாப், வல்.3, பக். 268.

87. யாக்கூபி, வல்.3, பக். 86; முரூஜ் அல்-தஹாப், வல்.3, பக். 270.

88. யாக்கூபி, வல்.3, பக். 91-96; அபுல் ஃபிதா, வல்.1, பக். 212.

89. அபுல் ஃபிதா, வல்.2, பக். 6.

90. யாக்கூபி, வல்.3, பக் 198; அபுல் ஃபிதா, வல்.2, பக். 33.

91. பிஹார் அல்-அன்வார், வல்.3, இமாம் ஜாபர் அல்-ஸாதிக் வரலாறு.

92. அபுல் ஃபராஜ் இஸ்ஃபஹானியின் அல்-அகானி, கெய்ரோ 1345-51. பக்தாத் பாலம் பற்றிய கதை.

93. அல்-அகானி, அமீனின் சரிதை.

94. அபுல் ஃபிதா, மற்றும் வரலாற்று நூல்கள்.

95. ஆதம் மெஸ்ஸின் அல்-ஹதரத்தல் இஸ்லாமிய்யா, கெய்ரோ 1366, வல். 1, பக்.97.

96. முரூஜ் அல்-தஹாப், வல்.2, பக். 373; ஷஹ்ரிஸ்தானியின் அல் மிலால் வல்-நிஹால், கெய்ரோ, 1368, வல்.1, பக் 254.

97. அபுல் ஃபிதா, வல் 11, பக். 63- வல் 111, பக். 50.

98. பார்க்கவும்: இப்னு அதீரின் அல்காமில் வரலாற்றுநூல், கெய்ரோ, 1348: ரவ்ழத் அல்-ஸஃபா; கவாந் மீர் எழுதிய ஹபீப் அல்-ஸியார், தெஹ்ரான் 1333.

99. அதே நூல்.

100. அதே நூல்

101. அதே நூல்.

102. முஹம்மத் அலீ தப்ரீஸியின் றைஹானத் அல்- அதப் தெஹ்ரான் 1326-32, வல். 11, பக். 365: பிரபல மனிதர்களின் சரிதை பற்றிய அநேக நூல்கள்.

103. றைஹானத் அல்-அதப், வல்.11, பக் 380.

104. ரவ்ழத் அல்-ஸஃபா, ஹபீப் அல்-ஸியார், மற்றும் நூல்கள்.

105. இஸ்கந்தர் பைக்கின் தாரிக்கி ஆலம் ஆராயி அப்பாஸி, தெஹ்ரான், 1334.